இலவச வெளியீடு: GERMANY , ENGLAND தை. Jan. 2015

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 65

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A




# இலங்கை ஜனாதிபதித் தேர்தலும்

## தேர்தலுக்கு பின்னரும்!




## நம்புங்கள்!! நாளை நமதே!

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

ATHAVAN TV
ஆதவன் தொலைக் காட்சியின்
யேர்மனி முகவர்
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
விபரம் பக்கம் 26

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
தை மாதம்
C பிரிவு
தங்கநகைச்
சீட்டு ஆரம்பம்
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக
விபரம் 6ம் பக்கம்

Ceylon Imbiss Page.32
Tel:0231 7252859

Lucky Fly page.17
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696



மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

Ria MONEY TRANSFER இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN


# நம்பமுடியாத உண்மைகள்

மாதவி

# பல மில்லியன் பியர் போத்தல்களால் அமைந்த

## தாய்லாந்து போத்தல் புத்த கோவில்!










Beer Bottles



Adriaan Heineken





Temple of Million Bottles

நெர்தலாந்து நாட்டில் கெனிங்கன் தனது 22 வயதில் (Gerard Adriaan Heineken -1841-1893) தனது பெயரிலேயே Heineken Beer பியர் வடிசாலையை நெதர் லாந்தில் (Holand) ஆரம்பித்தார்.

இன்று உலகம் எங்கும் ஏற்றுமதி செய்யப்படும் அதி உயர்தர பியராக அது வளர்ந்துள்ளது.

இந்த பியர் போத்தால்கள் வீண் அடையாமலும், அது உலகை மாசுபடுத்தாமலும், குப்பையாக்காமலும், இருக்க இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் இந்தப் போத்தல் களை கட்டிடங்கள் அமைக்கக்கூடிய கற்கள்போல் (building material) அதாவது செங்கட்டிகள் போல் பாவிக்கும் வண்ணம் வடிவமைத்தனர். (ஒரு போத்தலோடு முன்னும் பின்னும் கொழுவும் விதத்தில் போத்தல் வடிவம் இருக்கும்)சாதாரணமாக புதுமையை விரும்பு வர்கள். கழிவுகளை மீண்டும் பொருளாக்க நினைப்பவர்கள் இவர்கள் மட்டுமே இந்த “பியர் கல்“ திட்டத்தை பாவிக்க முன்வந்தனர். சிலர் வீடுகளையும் கட்டினர்.

இருப்பினும் தாய்லாந்தில் (Khun Han in Thailand) உள்ள சில புத்த துறவிகள் இத்திட்டத்தை 1984 ஆண்டு கையில் எடுக்கும் வரை இத்திட்டம் பெரிதாகப் பேசப்படவில்லை.

ஒரு 100 கெனிங்கர் பியர் போத்தல்களுடனும் சில தாய்லாந்து பியர் போத்தல்களுடனும் ஆரம்பிக்கப்ட்ட ஒரு புத்தகோவில், இன்று பல மில்லியன் போத்தல்களால் அழகுற அமைக்கப்பட்டு தாய்லாந்தில் உயர்ந்து விளங்கும் ஒரு புத்தகோயிலாக வளர்ந்துள்ளது.

இக்கோவிலில் பிரார்த்தனை மண்டபம், கோவில் கூரை, அழகிய செயற்கை நீர்வீழ்ச்சி,ஏன் கழிவறை கூட போத் தலால் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

கோவில் மதில்கள் எங்கும் போத்தலால் அழகுறப் புதைக்கப்பட்டும். கோவில் உள்ளே ஒரு பெரிய புத்தர் சிலை இப்போத்தலால் அமைக்கப்பட்டு அலங்கரிக்பட்டும் உள்ளது.

இக்கோவிலை “மில்லியன் போத்தல் புத்தகோவில்” என அழைக்கின்றனர் (“Wat Lan Kuad” or “Temple of Million Bottles”) தமது நாட்டை சுத்தமாகப் பேணும் ஒரு நடவடிக்கை யாக, புத்ததுறவிகள் இதனை அறிவித்து, இன்றும் மக்களை அக்கோவில் சூழ்ந்துள்ள பகுதிகளில் இருக்கும் பியர் போத்தல்களை பொறுக்கி சேர்க்கவைத்து மேலும் பல புதுபுது கட்டிடங்களை கோவிலைச்சுற்றி அமைத்து வருகின்றனர். அழியும் பொருட்களால் ஆனது உடம்பு! கழிவுப் பொருட்கள் கொண்டு அழியாத ஞானம் தரும் கோவிலை தாம் அமைப்பதாக பெருமை கொள்கின்றனர் துறவிகள்.

போத்தல்களை நாமும் இலங்கையில் உபையோ கித்துள்ளோம்.

நன்றாக ஞாபகப்படுத்திப்பாருங்கள், உங்கள் வீட்டு படலையில் இருந்து வீடு வரைக்கும் இருபுறமும் குறோட்டன் மரம் இருக்கும், அதற்கு ஒரு பத்து சென்ரி மீற்றர் உயர்வாக ஒரு வேலியாக இந்த போத்தல் வேலி இருக்கும். (வேலியாக போத்தலை தலைகீழா சரித்து நட்டிருப்போம்) அடுத்து இந்த போத்தலை எதற்கு பாவிப்போம் தெரியுமா.

மதிலில் காகம் இருக்காமலும், கள்வர் ஏறிக்குதிக் காமலும் போத்தலை உடைத்து மதில் மேல் விளிம்பில் மதில்கட்டும்போது புதைத்துவிடுவோம்.

கள்வன் பாயாமல் இருக்க. கள்வன் மதில்மேல் சாக்கைப்போட்டு சாக்கும் வழுக்காது போத்திலோடு காக்க அழகாக ஏறி குதித்து தனது வேலையைமுடிப்பான் அது வேறு கதை. இப்படி நமது தாய் நாட்டில் சாதாரண குடிமகன் வரைபாவித்த போத்தலை தாய்லாந்து துறவிகள் கோவில் அமைக்கப் பாவித்து உலகப்புகழ் பெற்றுவிட்டனர்.

உங்கள் பியர் போத்தல்களை என்ன செய்கின்றீர்கள்?


உங்கள் விடை புரிகிறது. மீண்டும் போத்தலை திருப்பிக் கொடுத்தால் காசுவரும் மீண்டும் வாங்கியடிக்கலாம் அவ்வளவுதானே!


யாழ்ப்பாணத்தில் காணி விற்பனை!

வீடு கிணற்றுடன்

5 பரப்புக் காணி (வீடு கிணற்றுடன்) யாழ்ப்பாணத்தில் யோக சுவாமிகளது ஆச்சரமத்திற்கு 500 யார் தூரத்தில் (யாழ் நகரப்பகுதியில் இருந்து 2.கி.மீ தூரத்தில்) விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பு 16 இலட்சம் இலங்கை ரூபாய். விலை பேசி முடிவாக்கலாம்.

தொடர்புகளுக்கு: 0208 78 57 041 தொடர்பு கொள்ளவேண்டி நேரம்: London Time 9.00 Am-12.00 - Pm




www.etno24.de

உங்கள் எதிர்கால நலன்களுக்காக வீடு வாங்க வேண்டுமா?

எதுவித பிரச்சனையுமின்றி வாங்க வேண்டுமா?

உங்கள் எதிர்கால கனவை நிறைவேற்ற வேண்டுமா?

உடனே தொடர்பு கொள்ளுங்கள்

etno 24
Tel: 02871 242555 3
info@etno24.de



கணேசா நகையகம்

தரம் நிரந்தரம்

GANESHA JEWELS

Finest 22ct Gold Diamond White Gold jewellery and Repair

பொன்னுருக்குதல் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

வைரத்தாலிக்கொடி நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

திருத்தல் வேலைகள் உடனுக்குடன் செய்து தரப்படும்.

பழைய நகைகளை மாற்றி, புதிய சிங்கப்பூர் நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

Finest 22ct Gold Diamond White Gold Jewellery and Repair




Eastham

330 High Street North-Eastham/E12 6PH-Tel:0208 470 7844

e.mail:ganeshajewels@hotmail.co.uk

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 220


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962




Vettimaniy has no responsibility of the contents of the articles and advertisements


# சிங்கள கட்சிகளின் தனித்துவமும் பௌத்த தேசியவாத சிந்தனையும்

## ஜனாதிபதித் தேர்தலும் அதன் பின்னரும்!

**ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான காலகாலத்தில் அரசியல் கட்சிகள் என்பதை விட சிங்கள பௌத்ததேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய இயக்கம் ஒன்று உருவாகலாம். அது தமிழ்ச் சமூகத்துக்கு பெரும் ஆபத்தை தோற்றுவிக்கலாம்.**
**–அ.நிக்ஸன்–**

தற்போது அரசியல் கட்சிகளின் தனித்துவம் தொடர்பான கேள்விகள் எழுகின்றன. ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் கட்சிகளின் தனித்துவம் பற்றிய சந்தேகங்கள் அரசியல் விமர்சகர்களிடையே அதிகரித்துள்ளன. அரசாங்கத்தில் இருந்து விலகி அமைச்சர் மைத்திபால சிறிசேன உட்பட பலர் பொது எதிரணியில் இணைந்து கொண்ட பின்னர் மேலும் பலர் அரசாங்கத்தில் இருந்து விலகிச் செல்லும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகின்றது.



### அடையாளம் என்ன?

பொது வேட்பாளர் மைத்திபால சிறிசேன அன்னம் சின்னத்தில் போட்டியிடவுள்ளார். அதற்கு பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஆதரவு கொடுத்துள்ளன. பொது எதிரணியில் இணைந்துள்ள கட்சிகளுக்கு இடையே அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் பொது எதிரணியாக செயற்பட்டு வருகின்றனர். ஆனால் பொது எதிரணி என்ற வரையறைக்குள் நின்று கொண்டு எவ்வாறு தங்களுடைய கட்சியின் தனித்துவத்தை தொடரப் போகின்றனர் என்பதும் பொது வேட்பாளர் வெற்றி பெற்றால் பொது எதிரணியின் அரசியல் சார்ந்த செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது குறித்தும் சரியான தீர்மானங்கள் இல்லை

ஐக்கிய தேசிய கட்சிதான் பொது எதிரணிக்குள் பெரிய கட்சியாக உள்ளது. அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறிய குழுவாகவும் மற்றும் ஜாதிகஹெல உறுமய ஆகிய கட்சிகள் மற்றுமொரு குழுவாகவும் செயற்படுகின்றன. ஜே.வி.பி மைத்திரிபால சிறிசேனாவை ஆதரித்தாலும் பொது எதிரணியுடன் தொடர்ச்சியாக செயற்படுவது குறித்து இதுவரை நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. ஏனெனில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அகியோர் முக்கிய பங்காளிகளாக பொது எதிரணியில் செயற்படுவதால் முதலாளித்துவ மற்றும் மேற்கத்தைய நாடுகளின் சிந்தனைக்குள் அவர்கள் சென்று விடுவார்கள் எனவும் அது இலங்கை அரசின் இறைமைக்கு ஆபத்தானது என்றும் ஜே.வி.பி கருத இடமுண்டு.

### மஹிந்தவுக்கான ஆதரவு

பௌத்த சிங்களத் தேசியவாதம் என்ற கருத்தின் அடிப்படையில் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு கொடுத்திருந்தன. இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் தலையீடுகள் நீக்கப்பட வேண்டும் என்பதும் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற இனவாத சிந்தனையுடனும் அவர்கள் அன்று செயற்பட்டனர். ஆனால் இன்று சிங்கள பௌத்த தேசியவாத அளவுகோளை உயர்த்துவதிலும் யுத்த வெற்றியை கொண்டாடுவதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனியுரிமை பெற்றுவிட்டார் என்ற ஆதங்கத்தில்தான் அவர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகினர்.

ஜே.பி.வி மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு ஆரம்பத்தில் ஆதரவு கொடுத்திருத்தாலும் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள்ளேயே அரசாங்கத்தின் போக்கை விமர்சிக்கத் தொடங்கி எதிர்க்கட்சியாக மாறிவிட்டது. ஆனால் ஜாதிக ஹெல உறுமய கடந்த மாதம் தான் அரசாங்கத்தில் இருந்து விலகியது.
இடதுசாரி கொள்கையுடன் முற்போக்குவாதம் பேசிய அமைச்சர் ராஜித சேனரட்ன போன்ற அமைச்சர்களும் கடந்த மாதம்தான் வெளியேறினர். ஆனால் இவர்களின் அரசியல் கருத்தில் மாற்றங்கள் எற்பட்டதாக தெரியவில்லை. மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அடக்குமுறை அராஜகம் என இவர்கள் விமர்சிப்பது பௌத்த சிங்கள தேசியவாதத்தை கொண்டு செல்வதற்கு ஜனாதிபதியும் அவரது உறவினர்களும் தடையாக இருக்கின்றனர் அல்லது அதற்கான தனியுரிமையை அவர்கள் கையாளுகின்றனர் என்பதுதான்.

தொடர்ச்சி 04 ம் பக்கம்




அனைவருக்கும் எங்கள் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




# ஒளிப்படப்பிடிப்பில் ஓவியா சாதனை!

சிறுவர்களின் கலை உணர்வைக்காண அவர்கள் கரங்களில் கமராவைக் கொடுத்துப் பாருங்கள். எவ்வளவு தனித்துவமான படங்களை எடுப்பார்கள். ஒப்பனை அற்ற ஒப்பற்ற பலபடங்கள் பலகோணங்களில் வந்து தெறிக்கும். அண்மையில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சிறுவர் உரிமைகள் தொடர்பான புகைப்படப் போட்டியில் யாழ்.'.வேம்படி மகளீர் கல்லூரியில் தரம் 06 இல் கல்வி கற்கும் செல்வி ஓவியா இளங்கோவன் விசேட சித்தியைப் பெற்று விருதினைப் பெற்ற ஒரேயொரு தமிழ் மாணவி ஆவார்.

இவரது "முதியோரைப் பேணுவோம்" என்ற புகைப்படத்திற்கு இவ் விருது கிடைக்கப் பெற்றது. முதியோரைப் பேணுவது என்பது அவர்கள் வரும்போது எழுந்து நின்று மரியாதைசெய்வது அல்ல அதன் பொருள். அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதை. அவர்கள் எப்படி எமது தேவைகளை அறிந்து நாம் கேட்காமலே அன்று எமக்கு உதவினார்களோ, அதுபோல் அவர்களது முதுமைக்காலத்தில் அவர்களது தேவைகளை உணர்ந்து உதவுவதே அவர்களை நாம் பேணுவது என்பதன் உட்பொருளாகும். இப்பொருள் துலங்க இந்த அற்புதமான ஓவியத்தை ஓவியா எடுத்து பாராட்டு பெற்றுள்ளார். இவரது வேறு படங்களும் சிறந்த படங்களாக தெரிவு செய்யப்பட்டது. இதற்கான சான்றிதழையும் இவர் பெற்றுக் கொண்டார்.



இவர் அகில இலங்கை ரீதியிலான நடனம், சித்திரம், பேச்சு மற்றும் செய்தி அறிவிப்பாளர் ஆகிய போட்டிகளிலும் சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.
புகைப்படப் போட்டியில் கலந்து கொண்ட யாழ்.'.வேம்படி மகளீர் கல்லூரி மாணவி களில் செல்வி இலக்கியா இளங்கோவன், செல்வி கிருஷ்னா அகிலேஸ்வரன், செல்வி பு.கோபிகா ஆகியோரும் சாதாரண தரத்தில் வெற்றி பெற்று பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண் டனர்.

வெற்றி பெற்ற அனைவருக்கும் வெற்றிமணியின் பாராட்டுக்கள்.

## சிங்கள கட்சிகளின் ....

3ம் பக்கத் தொடர்ச்சி

### ஏனைய சமூகங்களுக்காக அல்ல

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அராஜகம், அடக்கு முறை என்பதும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என அவர்கள் கூறுவது நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ள இனப்பிரச்ச ினைக்கு தீர்வை முன்வைக்க வேண்டும் என்ற நோக்கில் அல்ல. மாறாக தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கையாளுகின்ற சிங்கள இனவாதத்தை கைமாற்றி எடுப்பதே பிரதான நோக்கம். இந்த இடத்திலேதான் அவர்கள் தங்கள் கட்சிகளுக்குரிய தனித்துவத்தைக் கூட சிந்திக்காது பொது எதிரணியில் இணைந்து கொண்டனர் என்ற முடிவுக்கு வரலாம்.

பொது எதிரணிக்குள் இருக்கக் கூடிய இடதுசாரி கட்சிகளை தவிர ஐக்கியதேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஜாதிக ஹெல உறுமயவும் ஜனாதிபதி தேர்தலின் பின்னரும் கூட தொடர்ந்து செயற்படக் கூடிய நிலைமைகள் உண்டு.

ஏனெனில் சிங்கள பௌத்த தேசியவாதமே தற்போது வெற்றிக்கான அரசியல் மூலதனமாக இருப்பதால் விரும்பியோ விரும்பாமலோ கட்சிகளின் தனித்துவம் என்பதை விட முதலில் ஆட்சியை கைப்பறி பின்னர் வேறு அரசியல் நாக்வுகள் பற்றி யோசிக்கலாம் என இந்த கட்சிகள் முடி செய்திருக்கினறன. சம்ஸ்டி முறை பற்றி பேச முடியாது என பொதுவேட்பாளர் மைத்திபால சிறிசேன கூறியுள்ளாார். ஆனால் 13 பிளஸ்தான் தீர்வு என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா உறுதியளித்துள்ளார். ஆக இனப்பிரச்சினை விடயத்தில் முன்னுக்கு பின் முரணான கருத்துக்கள்தான் பொது எதிரணயிடம் உண்டு

### வெற்றி பெற்ற பின்னர்?

ஆகவே பொதுவேட்பாளர் வெற்றிபெற்ற பின்னர் இரண்டு விடயங்கள் தொடர்பான கேள்விகள் எழுவுள்ளன. ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறுவது போன்று இனப்பிரச்சினை என ஒன்று இல்லை என்பதும் இருக்கினற அரசியல் யாப்பில் உள்ள நிர்வாக அதிகாரங்களைத் தவிர வேறு எதயைும் ஏனைய சமூகங்கள் கோர முடியாது என்றும் பொது எதிரணி நிபந்தனை விதிக்கலாம். இரண்டாவது அரசியல் கட்சிகளின் தனித்துவம் இல்லாமல் போய் சிங்கள பௌத்த தேசியவாதத்தை தனியுரிமை இல்லாமல் ஒரு தேசிய மட்டத்தில் செயற்படுத்தக் கூடிய வலுவான ஒரு சிங்களத் தேசிய இயக்கம் ஒன்று உருவாகலாம். இந்த இரண்டு விடயங்களும் பொது வேட்பாளர் மைத்திபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர் சாத்தியப்படக் கூடிய அரசியல் நிலைமைகள் உள்ளது என்பதை அவர்களுடைய செயற்பாடுகள் கோடி காட்டுகின்றன.
பொது எதிரணியின் இந்த முயற்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முறியடிக்க வேண்டுமானால் யுத்த வெற்றி வெற்றி, மற்றும் அபிவிருதித் திட்டங்கள் போன்றவற்றை தன்னை சூழவுள்ள ஒரு குழுவிடம் மையப்படுத்தி தனியுரிமை கொண்டாடாமல் கட்சி அரசியலுக்குள் அவற்றை வரையறை செய்யதால் மாத்திரமே பொது எதிரணியின் மேற்படி அரசியல் நகர்வுகளை முறியடிக்க முடியும். ஆனால் அரசாங்கத்துக்குள் அதற்கான சூழல் வலுவிழந்துவிட்டது. அதேவேளை சிங்கள பௌத்த தேசியவாதம் என்பதை அரசியல் மூலதனமாக் கொண்டு பொது எதிரணி செயற்படுவது போன்று தமிழ் மக்களுக்கான அரசியல் அபிலாஷைகள் என்பதை முன்னிலைப்படுத்தி தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் தேசிய இயக்கமாக செயற்பட வேண்டும். நான்கு கட்சிகளை மையப்படுத்தி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எவ்வாறு செயற்பட்டு வந்ததோ அதேபோன்ற ஒரு அரசியல் நகர்வைத்தான் பொது எதிரணி முரண்பாட்டிலும் ஓர் உடன்பாடாக மேற்கொண்டு வருகின்றது என்பதை தமிழ்த் தரப்பு உணர வேண்டும்.



அனைவருக்கும் எங்கள் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

# நாளை முதல் குடிக்கமாட்டேன் என்றால் பொய் இன்று முதல் குடிக்க மாட்டேன் என்றால் மெய்!

## புகைப்பிடிப்பதை நிறுத்த நீங்கள் நினைத்தால் மட்டும் சிலவழிகள்




நீதீ படத்தில் ஒரு பாடல் நாளை முதல் குடிக்க மாட்டேன் சத்தியமடி தங்கம் என்று தொடங்குகிறது. இப்பாடலை கவியரசு கண்ணதாசன் எழுதியிருந்தார். முதலில் இன்று முதல் குடிக்க மாட்டேன் என்றுதான் பாடல் இருந்ததாம். கண்ணதாசன் இலை குடிகாரன் ஒருபோது இன்றுமுதல் குடியை விடுகின்றேன் என்று சொல்லமாட்டான் என அடித்துக்கூறியபின் பாடல் நாளை முதல் குடிக்க மாட்டேன் என்று வந்தது. உண்மையில் நாளை முதல் என்ற சொல்லு ஒரு தயகத்தின் வெளிப்பாடே. நாளை முதல் உன்னைக் காதலிக்கின்றேன் என்று ஒரு பெண்ணோ! இல்லை ஆணோ!! சொல்வதுண்டா? நல்ல முடிவுகள் திடீர் என்றுதான் எடுக்க வேண்டும்.

முன்பு எல்லாம் நம்நாட்டில் புகைப்பிடித்தால் கெட்டவர்கள் என்று ஒரு சாயல் இருந்தது. இன்று சினிமாவில் கெட்வர்கள் எனக்காட்ட குடியையும் புகைத்தலையும் காட்டுவார்கள். சிறிதாக உடலுக்கு தீங்குவிளைவிக்கும் என்றும் போடுவார்கள். ஆனால் இன்று குடிப்பவர்கள் கெட்வர்கள் என்றோ! குடிக்காதவர்கள் எல்லாம் நல்லவர்கள் என்றோ சொல்லமுடியாது. இருந்தாலும் ஒன்று மட்டும் சொல்லமுடியும், குடியும் புகைத்தலும் உடலுக்கு தீங்கானதே. எனவே அத் தீயதை விலத்திவிடுவது நன்மைதானே!

புதுவருடம் எமக்கு எப்படி என்று அடித்து அடித்து தேடி (கூகுளில் சேச்பண்ணி) சனிமாற்றம் குருமாற்றம் வருடபலன் பார்க்கும் நாம் எமக்குள் ஒரு தேடலைவிட்டு தேடி தீயவற்றை நீக்கினால் அது சிறந்த மாற்றமாக அமையும் அல்லவா.எனவே புகைத்தலை நிறுத்த இந்த இயற்கையான வழி என்ற கட்டுரையைப் படியுங்கள் அது உங்களுக்கு உதவலாம்.

ஒவ்வொரு வருடமும், புகைப்பிடிப்பதால் உண்டாகும் நோய்களால், உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரை விடுகின்றனர். புகைப்பிடிப்பதால் நோய்கள் உண்டாகும். இது கொஞ்சம் கொஞ்சமாக சாவதற்கான வழி. புகைப்பிடிப்பதால் நம் உடலில் ஏற்படும் தாக்கங்களால், நாம் வருடக்கணக்கில் பாதிப்புக்குள்ளாகிறோம். புகைப்பிடிக்காதவர்களை விட புகைப்பிடிப்பவர்கள் தான் நுரையீரல் புற்றுநோயால் 10 மடங்கு அதிகமாக பாதிக்கப்படலாம். நான்கில் மூன்று இளைஞர்கள் சாவது புகைப்பிடிப்பதால் ஏற்படும் இதய நோய்களினாலே. புகைப்பிடிக்கும் பழக்கத்தை கைவிட்டால், உங்கள் வாழ்க்கையின் ஆயுட்காலத்தை நீட்டிக்கலாம். நெஞ்சு வலி, வாதம், நுரையீரல் புற்றுநோய் மற்றும் பிற நுரையீரல் நோய்கள் போன்றவற்றால் அவதிப்படும் வாய்ப்புகளும் குறையும். புகைப்பிடிக்கும் பழக்கத்தை கைவிடுவது என்பது சுலபம் இல்லை தான். இந்த பழக்கத்தை மறக்க வைப்பதற்கு பல சிகிச்சைகளும் இருக்கிறது. ஆனால், சுலபமாக கையாளக்கூடிய வீட்டு சிகிச்சைகளாலும் கூட இந்த பழக்கத்தை கைவிடலாம்.

### மெல்ல குறைத்தல்

புகைப்பிடிக்கும் பழக்கத்தை கைவிடுவது என்றால் உடனே நிறுத்துவது என்று அர்த்தம் கிடையாது. மாறாக அதனை மெல்ல குறைத்து கொண்டே வர வேண்டும் - உதாரணத்திற்கு ஒரு நாளைக்கு 10 சிகரெட் என்று இருந்த கணக்கை, இனி 7 அல்லது அதற்கு குறைவாக மாற்றலாம். அப்படி இல்லையென்றால் உணவருந்திய பிறகோ அல்லது சிகரெட் அடிக்க வேண்டும் என தோன்றும் போதோ, அதனை சற்று தள்ளிப் போடுங்கள். ஆனால் ஒன்றை தீர்மானிப்பது மிகவும் முக்கியம் இந்த பழக்கத்தை கை விடுவது என முடிவெடுத்த நாளில் இருந்து 2 வார காலத்திற்குள் முழுவதுமாக இந்த பழக்கத்தை நிறுத்தி விட வேண்டும்.

புகை வாசனையை விட்டு விலகியே இருங்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டும் என முடிவெடுத்து விட்டீர்கள் என்றால் சிகரெட்டை பார்ப்பது, அதன் சுவையை உருசிப்பது மற்றும் அதன் வாசனையை நுகர்ந்து பார்ப்பது ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.



வாய்க்கு வேலை கொடுத்து கொண்டே இருங்கள் புகைப்பிடிக்கும் ஆசை ஏற்பட்டால், உடனே சர்க்கரையில்லாத சூவிங் கம்மை போட்டு கவனத்தை திசை திருப்புங்கள். லாலி பாப், அதிமதுரம், ஸ்ட்ரா அல்லது பல் குச்சியை கொண்டு வாய்க்கு ஏதாவது வேலை கொடுத்து கொண்டே இருங்கள்.

புகைப்பிடிப்பவருடன் சற்று அளவாக வைத்துக் கொள்ளுங்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்த முயற்சி செய்கிறீர்கள் என்றால், முதலில் நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்று தெரியுமா? புகைப்பிடிக்கும் நபர்கள் அல்லது அந்த சுற்றுச்சூழலை விட்டு தள்ளியே இருக்க வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் நீங்கள் உங்கள் இலக்கை அடைவதில் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

### பழக்கவழக்கத்தை மாற்றுங்கள்

சிகரெட் மீதுள்ள ஏக்கத்தை குறைக்க உங்கள் பழக்கவழக்கத்தை மாற்றுங்கள். காலை உணவின் போது வேறு ஒரு நாற்காலியில் அமருங்கள் அல்லது வேலைக்கு போகும் போது மாற்று பாதையில் செல்லவும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்...



# இணுவில் பொது நூலகத்தினால் தெருவெளி நாடகங்கள்!

# “வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்“







## இளம் சமுதாயத்தினரிடையே வாசிப்பு பழக்கம் அருகிச் செல்கின்றது

**எஸ்.ரி.குமரன் BA(Hons) M.A(dist)**
**இயக்குநர் புத்தாக்க அரங்க இயக்கம் மல்லாகம்(யாழ்ப்பாணம்)**

அறிவுடைய சமுதாயம் ஒன்றின் உருவாக்கத்திற்கு பல்துறைப்பட்ட வாசிப்புத்தேடல் அவசியமாகின்றது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக விளங்குகின்றது. மனிதனானவன் தன்னுடைய அறிவினை பெருக்கிக் கொள்வதற்கான ஊடகமாக வாசிப்பினை பயன்படுத்துகின்றான். வாசிப்பானது இளம் சமுதாயத்தினரிடையே அருகிச் செல்கின்றது என்ற குற்றச்சாட்டு அனைவராலும் பொதுவாக முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறு அருகிச்செல்கின்ற வாசிப்புப் பழக்கத்தினை இளம் சமுதாயத்தினரிடையே ஊட்டவும் அறிவு நிறைந்த சமுதாயத்தினை உருவாக்குகின்றதுமான பணிகளினை நூலகங்கள் ஆனவை ஆற்றி வருகின்றன.

தேசிய வாசிப்பு மாதத்தின் செயற்றிட்டத்தின் செயற்பாடாக இணுவில் பொது நூலகத்தினால் வாசிப்புப் பழக்கத்தினை இளம் சமுதா தாயத்தினரிடையே ஊக்குவிக்கும் ஊடகமாக தெரு வெளி ஆற்றுகையானது யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்டு தொடர்நிலையாக ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் (வாசிப்பால் நாம் உயர்வோம்) என்னும் தலைப்பிலான தெரு வெளி ஆற்றுகையானது வாசிப்பின் அவசியத்தினை உணர்த்தும் வகையில் புத்தாக்க அரங்க இயக்கக்கலைஞர்களினால் யாழ்மாவட்டத்தின் பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்கள் பொது இடங்கள் சனசமூக நிலையங்கள் ஆலய வீதிகள் ஆகிய இடங்களில் ஆற்றுகையானது இடம் பெற்று வருகின்றது. இத்தெரு வெளி ஆற்றகைக்கான நெறியாள்கையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.குமரன் புத்தாக்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

ஆற்றுகையாளர்களாக தயாநிசன் , லிவின்சன் கவிராஜ் , பிரசாந்தன் , லோன்சன் , மகிந்தன் , தபேன்சன் , உசாந்தன் , திலக்சன் , நிதர்சன் போன்றோர் நடித்துள்ளனர்.

இத்தெருவெளி ஆற்றகையானது பெரும்பாலும் பாடசாலை மாணவர்களையே இலக்குப் பார்வையாளராகக் கொண்டு ஆற்றுகை செய்யப் பட்டது. யாழ் மாவட்டத்தின் பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்கள் சனசமூக நிலையங்கள் பொது இடங்கள் என 300 இற்கு மேற்பட்ட ஆற்றுகைகளாக இத்தெருவெளி ஆற்றுகையானது நிகழ்த்தப் பட்டுள்ளது.

பாடலும் ஆடலும் நகைச்சுவை உணர்விற்கு ஊடாகவும் வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்னும் தெரு வெளி ஆற்றுகையானது வாசிப்பின் அவசியம் கருதிய கருத்தினை பிரச்சாரப் படுத்தியிருந்தது.

எம்மிடையே காணப்படுகின்ற கல்வி நடைமுறையின் குறைபாடு காரணமாக பரீட்சை மையக்கற்கை நெறியே காணப்படுகின்றது. இது ஒரு வகையில் திணிப்பு சார் கல்விச்செயற்பாடாக காணப்படுகின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்களாலும் வீடுகளில் பெற்றோர்களாலும் கல்வியானது திணிக்கப் படுகின்றது. இக்கல்விச்செயற்பாடு காரணமாக சுயசிந்தனை சுய ஆளுமையற்ற புதிய தேடலை மேற்கொள்ளாத சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இத்தகைய கல்வி நடைமுறைகளுக்கு மேலாக சுயதேடல் புத்தாக்க சிந்தனையுடைய மாணவர்களாக எமது இளம் தலைமுறையினர் உருவாகுவதற்கு வாசிப்புப்பழக்கமானது அவசியப்படுகின்றது. இவ்வாசிப்பின் ஊடாக நூலகப்பயன்பாட்டின் ஊடாக சுய சிந்தனை சுய ஆளுமையுள்ள சமூகம் ஒன்றினை உருவாக்கமுடியும் என்கின்ற செய்தியினைச் சொல்வதாக இத்தெருவெளி ஆற்றுகை அமைகின்றது. நகைச்சுவை உணர்வின் ஊடாக சொல்லவந்த விடயத்தினை பார்வையானர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொன்ன முறைமை இவ் ஆற்றுகைக்கு பலம் சேர்க்கின்றது.

சமூகத்தின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதிலும் சமூகப்பணியினை மேற்கொள்வதிலும் சிறந்த ஊடகமாக நாடகக்கலை விளங்குகின்றது. இதன் அடிப்படையில் வாசிப்பின் அவசியத்தினை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச்செல்கின்ற ஊடகமாக தெருவெளி ஆற்றுகையானது நிகழ்த் தப்பட்டது.



பார்வையாளர்களை நாடிச்சென்று தனது வடிவத்தின் ஊடாக கருத்தினை வெளிப்படுத்துகின்ற சிறந்த ஊடகமாக தெருவெளி நாடகங்கள் விளங்குகின்றன. இத்தகைய தெரு வெளி நாடககங்களுக்குரிய முழுமையான பண்புபகளைக் கொண்டமைந்து சிறந்த ஆற்றுகையாக பெரும் எண்ணிக்கை யாளர்களிடம் சென்றடைந்துள்ளமை சிறப்பிற்குரியதாகின்றது..

Gopara Gnanam
நமது எட்டாவது ஆண்டு விழா,
தைப்பொங்கல்
இவற்றை முன்னிட்டு
Textiles & Jewellery Shop
மாபெரும் மலிவு விற்பனை
18.01.2015 வரை


ஆனைத்து ஆடைகளும்
30% 50% 70 % வரை
தை மாதம் C பிரிவு
தங்க நகைச் சீட்டு
ஆரம்பம்.ஒரு பிரிமியர்
கிரைண்டர் அன்பளிப்பு!
Door to Door
பொதிச் சேவை
Germany-Sri-Lanka
35Kg 35€ - Colombo
35Kg 50€ பிற நகரங்கள்
Tel: 0231/5450028 Mob:01713306542
Rheinische Str. 81- 44137 Dortmund



உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.

Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal
rmb³
VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb³ ist Partner der Gothaer



# என் எதிர்கால இலட்சியம் ஓர் விண்வெளி வீரனாக வருவதேயாகும்!

## 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தில் செல்வன் இளங்குமார் கபிஷன்

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தில் சித்தியடைந்து சாதனை படைத்த செல்வன் இளங்குமார் கபிஷன்

ஓர் இலக்கை மனதில் வைத்து, அதற்கமைவாக நாம் செயற்பட்டால், அந்த இலக்கை எம்மால் இலகுவாக அடைய முடியும்''

**வெற்றிமணி கல்வி மையத்தின்** செயலாளர் திருமதி பகீரதி இளங்குமார் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு. வி. இளங்குமார் அவர்களின் புதல்வனும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவனுமான செல்வன் இளங்குமார் கபிஷன் அவர்கள் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தில் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார்.

இவர் பாடசாலையில் கற்பித்த விடயங்களுடன் மேலதிகமாக வீட்டில் இருந்தும் பயிற்சிகளை மேற்கொண்டார். பாடசாலையில் கற்பிக்கும் விடயங்களை நன்கு விளங்கிக் கொண்டு, அவ் விடயங்களை தனது மனதில் முழுமையாக பதித்து விடுவார். இவரது கிரகிக்கும் ஆற்றலானது ஒப்பீட்டளவில் உயர்வானதாகும்.
யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் திரு. நா. மகேந்திரராஜா அவர்கள் காலை நேரப் பிரார்த்தனையின் போது, " ஓர் இலக்கை மனதில் வைத்து, அதற்கமைவாக நாம் செயற்பட்டால், இந்த இலக்கை எம்மால் இலகுவாக அடைய முடியும்'' எனத் தெரிவித்தார். அதிபர் அவர்களின் ஆலோசனைக்கமைவாக, அன்றைய தினமே இவர் தான் கல்வி கற்கும் மேசைக்கு முன்பாகவுள்ள சுவரில், "நான் புலமைப்பரிசில் பரீட்சையில் 190 இற்கு மேற்பட்ட புள்ளிகளை எடுப்பேன்'' என எழுதி ஒட்டி வைத்து, அந்த இலக்கை அடைவதற்கு பெரிதும் முயற்சி எடுத்து, அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

### இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார்

இவர் கடவுள் மீது அதிக பக்தி கொண்டவர். எந்தவொரு பரீட்சைக்கும் செல்வதற்கு முன்னர், இவர் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று வழிபட்ட பின்னரே பரீட்சைக்குச் செல்லும் வழக்கத்தைக் கொண்டுள்ளார்.

கற்றலைத் தவிர போதியளவு நேரம் பொழுது போக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். அதிக நேரம் தொலைக்காட்சியில் அறிவு சார்ந்த நிகழ்வு களைப் பார்வையிடுவதிலும் செலவிட்டுள்ளார். அத்துடன், இவர் நூல்களை குறிப்பாக, மகாபாரதம், விஞ்ஞானிகளின் வரலாறு ஆகிய வற்றை மிகவும் ஆர்வத்துடன் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டவர்.



### கடவுள் நம்பிக்கையும் கல்வியில் விடா முயற்சியும்

எதிர்வரும் ஆண்டுகளில் நடைபெறவுள்ள புலமைப்பிரிசில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இவர் முன்வைக்கும் அறிவுரை" குறித்த இலக்கோடு கற்றலை மேற்கொண்டால், நிச்சயம் சிறந்த பலனை அடைவீர்கள்'' என்பதாகும். இவரது எதிர்கால இலட்சியம் ஓர் விண்வெளி வீரனாக வருவதேயாகும். தன்னம்பிக்கையும், விடா முயற் சியும், கடவுள் அருளும் ஒன்றாகப்பெற்ற மாணவனது இலட்சியம் நிறைவேற வெற்றிமணி வாழ்த்துகின்றது.

## நாளைமுதல் குடிக்க மாட்டேன்....

5ம் பக்கத் தொடர்...

வேலை முடிந்ததும் சிகரெட் அடிக்கும் பழக்கம் அல்லது மது அருந்தும் பழக்கம் இருந்தால் அதனை மாற்றி, ஒரு நடை கொடுங்கள். காலையில் புகைப்பிடிப்பதுடன் சேர்த்து காபி குடித்து வந்தீர்கள் என்றால் அதனை டீயாக மாற்றி பாருங்கள்.

### ஞாபகப்படுத்தும் பொருட்களை தூக்கி எறியுங்கள்

பழக்கத்தை கைவிடும் நாள் வரும் போது, அதனை நினைவுப்படுத்தும் அனைத்தையும் தூக்கி எறியுங்கள். சிகரெட்டின் உபகரணங்கள் உட்பட - மிஞ்சி போன சிகரெட்கள், லைட்டர்கள், தீப்பெட்டிகள், ஆஷ்ட்ரேக்கள், ஏன் உங்கள் காரில் உள்ள லைட்டர் முதற்கொண்டு தூக்கி எறியுங்கள். ஒரு காதல் காதலியை ஒரு காதலி ஒரு காதலனை மறக்க என்ன என்ன நினைவுப்பொருட்களை எல்லாம் தூக்கி எறிவார்களோ அதுபோல் சிகரட்டை ஞாபகப்படுத்தும் அனைத்தையும் எறியுங்கள் அல்லது காண்பதை தவிருங்கள்.
கவனத்தை திசைத் திருப்புங்கள் வேலை இடைவேளையின் போது சிகரெட் பிடிக்க செல்லாமல், உங்கள் கணிப்பொறியில் அமர்ந்து ஏதாவது ஒரு விளையாட்டை விளையாடுங்கள். உங்கள் நிறுவனம் அதற்கு தடை விதித்தால் தொலைப்பேசி உரையாடல், நடை கொடுத்தல் அல்லது பழங்கள் உண்ணுதல் போன்றவற்றில் ஈடுபடுங்கள்.
சிகரெட்டை மறக்க சில பரிந்துரைகள் சிகரெட்டின் மீது ஏக்கம் வரும் போது என்ன செய்யலாம் என்ற பட்டியலை தயார் செய்து கொள்ளுங்கள். சில பரிந்துரைகள்: ஒரு நடை கொடுத்தல், ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்தல், உங்கள் பிள்ளைகள் பேரக்குழந்தைகள் இவர்களுடன் விளையாடுதல், காரை கழுவுதல், அலமாரியை சுத்தப்படுத்துதல், முகத்தை கழுவுதல், பல் துலக்குதல், போன்றவைகள். நீங்கள் நினைத்தால் எதனையும் சாதிக்கலாம். சாதியுங்கள் சாதித்த மகிழ்வைக் குடும்பத்துடன் கொண்டாடுங்கள். ஆனால் ஒன்று அந்தக் கொண்டாட்டத்தில் மீண்டும் புகைத்தலை ஆரம்பித்துவிாதீர்கள்.

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# தமிழர் மரபுத் திங்கள் – தை





முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

காலம் கடந்து கொண்டு இருக்கிறது. நாள், திங்கள், ஆண்டு எனக் காலத்தின் கடப்பைத் தமிழர் கணித்து வைத்துள்ளனர். இக்கணிப்பீடு உலகில் ஏனைய இனங்களாலும் செய்யப்பட் டுள்ளது. இன்றைய தமிழ் இளைய தலைமுறை இக்கணிப்பீட்டைப் பற்றி அறியவேண்டும். தமிழர் பாரம்பரியத்தில் காலம் பற்றிய கணிப்பீடு வாழ்வியலோடும் இயற்கைத் தோற்றத்தோடும் இணைக் கப்பட்டுள்ளது. நாளின் கணிப்பீடு கதிரவன் தோற்றமும் மறைவும் கொண்டு செய்யப்பட்டுள்ளது. திங்களின் தோற்றமும் உருவும் மறைவும் கொண்டு திங்கள் கணிப்பிடப்பட்டுள்ளது. பருவகாலங் களில் ஏற்படும் இயற்கைத் தோற்றத்தின் மாற்றங்களைக் கொண்டு ஆண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.

இக்கணிப்பீட்டில் ஆண்டாள் மிக முக்கியமான இடம் பெறுகிறாள். ஒரு திங்களின் கால அளவை நிறைமதி கொண்டு கணித்துக் காட்டியவள். 'மார்கழித் திங்கள்' என அவள் சூட்டிய பெயர்தான் மார்கழித் திங்கள்பற்றிய முதல்தமிழிலக்கியத் தரவு எனலாம். ஆண்டாள் காலத்திற்கு முன்னைய பண்டைய இலக்கியங்களில் ஒரு நாளின் கடப்பைச் சுவரிலே கோடிட்டுக் கணக்கிட்ட தாகக் குறிப்புண்டு. ஆனால் ஆண்டாள் பாடிய திருப்பாவை ஒருதிங்களில் முப்பதுநாள் அடங்கும் என்பதைப் புலப்படுத்தியுள்ளது. பகவத்கீதையில் 'மாதங்களில் மார்கழி' பற்றிக் கூறப்பட்டுள்ளதை ஆண்டாள் உள்வாங்கித் திங்களின் தோற்றம், தேய்வு, வளர்ச்சி, மறைவு என்பதையும் அடிப்படை யாக வைத்து முப்பது நாள் என ஒரு வரையறையைச் செய்துள்ளாள். இந்த வரையறையில் மார்கழி ஆண்டின் நிறைவுத்திங்களாக அமைய ஓர்ஆண்டின் தொடக்கத்திங்களாக தைத்திங்களை தான் பாடிய நாச்சியார் திருமொழியிலே வகுத்துப் பதிவுசெய்துள்ளாள். தொடரும் மாசித் திங்க ளையும் குறிப்பிட்டுள்ளாள். இத்தகைய திங்கள் பற்றிய கணிப்பீடு மரபாக இருந்துள்ளதை முதலில் இலக்கியப் பதிவாக்கிய ஆண்டாள் வழிபாட்டுடன் அதை இணைத்துள்ளாள். அந்த வழிபாடு இன்று வரையும் தொடர்கிறது.

தைத் திங்கள் ஓர் ஆண்டின் சிறப்புடைய முதலாவது திங்களாக உலகமெங்கும் கருதப் பட்டு ஓர் ஆண்டின் பிறப்புத் திங்களாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. தமிழர் வாழ்வியலில் தைத் திங்களில் சில சிறப்பான நடைமுறைகள் இருந்துள்ளதை இலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன. புறநானூறு என்னும் புறப்பாடல்களின் தொகுப்பு நூலில் தைத் திங்கள் பற்றிய குறிப்பு வருமாறு அமைந்துள்ளது.

> "தைத்திங்கள் தண்கயம்போலக்
> கொளக்கொளக் குறைவுபடாஅக் கூழுடை வியனகர்"
> (புறநானூறு: 70: 6-7)

தைத் திங்களின்போது குளிர்ந்த நீரால் நிரம்பிய நீர்நிலையைப் போல அள்ள அள்ளக் குறைவு படாத தானியங்கள் நிறைந்த அகன்ற நகரம் என இங்கு குறிப்பிடும்போது தைத் திங்கள் ஒரு வளம் நிறைந்த திங்கள் என்பது விளக்கப்பட்டுள்ளது.

இன்னும் பரிபாடல் என்னும் நூலில் தை பற்றிய இரு பதிவுகள் உள்ளன. தைநீர், தவத் தைநீராடல், தைநீராடல் என்னும் தொடர்களில் தைத் திங்களுக்கும் நீராடலுக்கும் ஒரு தொடர்பு வழிபாட்டு நிலையில் இருந்ததை நன்கு உணரமுடிகிறது. இளம்பெண்கள் தாய்மாரோடு சென்று நீராடும் வழக்கம் இருந்துள்ளது. ஆனால் ஆண்டாள் இந்த நீராடும் நடைமுறையை மார்கழித் திங்களிலே செய்வதாகத் திருப்பாவையிலே பதிவு செய்துள்ளாள்.

எனவே ஆண்டின் தொடக்கத் திங்களாகத் தைத் திங்கள் மரபாகப் பேணப்பட்டு வந்ததை அறியமுடிகிறது. இம்மரபு விளைபொருள்களைப் பகிர்ந்துண்ணும் நாளாகவும் விளைபொருள் வளத்திற்கு பெரும் உதவியாக இருந்த கதிரவனை வழிபாடுசெய்யும் திங்களாகவும் அமைந்ததை யும் தமிழிலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.
புறநானூறு 168ஆம் பாடலில் வருமாறு அந்நடைமுறை விளக்கப்பட்டுள்ளது.

> "உழுது விதைக்காமல் பருவம் அறிந்து தூவிய சிறுதினை நன்றாக விளைந்து ஆண்டின்
> புது வருவாயாகக் கிடைத்துள்ளது. அந்தப் புதிய விளைபொருளை உண்ணுதற்கு ஒரு
> நாள் குறிக்கப்பட்டுள்ளது. அன்று முற்றத்திலே நுரைபொங்கும் ஆவின்பாலை மான்இறைச்சி
> புழுக்கும் புலவு நாறும் பானையிலே ஊற்றி அடுப்பிலே வைத்துச் சந்தன விறகால்
> நெருப்பூட்டிப் புன்கம் ஆக்குவர். அந்தப்புதிய புன்கத்தை அகலமான இலையிலே பகுத்து
> ஆண்மகன் வழங்க எல்லோரும் ஒன்றாய் இருந்து மகிழ்வாய் உண்பர்."

இந்த விளக்கம் தைத் திங்கள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் 'யாணர் நாள் புதிது உண்மார்' என்ற அடி ஒருமரபான செயற்பாட்டை விளக்குகிறது. புதியவிளைச்சலை ஒரு நாளிலே முதலுணவாகப் பகிர்ந்துண்ணும் வழக்கம் இருந்துள்ளது. அந்த விளைச்சலைப் பெறுவதற்குத் துணைநின்ற இயற்கையை நினைந்து விளைபொருளில் மடைசெய்யும் மரபுஉருவாகியது. முற்றத் திலே மடை இட்டு புதுவிளைச்சலுக்கு எல்லா நிலைகளிலும் துணைநின்ற கதிரவனுக்கு நன்றி கூறும் நாளாகத் தைத் திங்களின் முதல் நாள் தைப்பொங்கல் நாளாகப் பாரம்பரியமாகத் தமிழர் வாழ்வியலில் உருவாகிற்று.

இயற்கையோடு இணைந்திருந்த தமிழர் பாரம்பரியத்தை விளக்குவதாகவும் தைத்திங்களின் சிறப்பை விளக்குவதாகவும் அமைந்த தைப்பொங்கல் நடைமுறையின் ஊற்றுக்காலாகப் புறநானூற்றுப் பதிவு அமைந்துள்ளது. இயற்கையின் பேராற்றலாக நாம் காணுகின்ற நிலம், நீர், காற்று, ஞாயிறு, வானம் என்னும் ஐந்துவகைகளையும் ஒன்றாக எண்ணும் நாளாகத் தைத்திங்கள் முதல் நாள் தைப்பொங்கல் நாளாக நினைவுகூரப்படுகிறது. மனிதனோடு இணைந்து அவனுக்குத் துணை யாக நின்ற பறவைகளும் விலங்குகளும் இந்தநடைமுறையிலே இணைக கப்பட்டிருந்தன. அதனால் தைத்திங்கள் முதல்நாள் கதிரவன் பொங்கலாக அமைய இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலாக அமைந்தது.

விளைபொருள் தொடர்பான நடைமுறை என்பதால் 'உழவர் பொங்கல்' எனவும் புதிய பெயர் பிற்காலத்தில் வழங்கப்பட்டது. தினைப்பயிர்ச் செய்கையை அடுத்து நெற்பயிர்ச் செய்கை நடைபெற்றபோது காலம் நோக்கிப் பயிரிடும் செயற்பாடு தொடங்கியது. அதற்குரிய நீர்வளம் பெறக் கதிரவன் இன்றியமையாதவன். எனவே பயிர்ச்செய்கை வளம்பெற மழையும் ஏற்ற வெப்ப நிலையும் தந்து உணவுக் கொடைக்கான நெல்லரிசியைப் பெற உதவிய சூரியனுக்குப் பொங்கல் செய்து மடையிடுவதால் 'சூரியன் பொங்கல்' என உலகத்துவாழும் எல்லாமக்களும் பொங்கலை கொண்டாட தமிழர் மரபுப் பொங்கல் வழிகாட்டிநிற்கிறது. உணவுத் தேட்டம், உணவுப் பகிர்வு என்ற இரு செயற்பாடுகளும் வீடு, சமூகம், நாடு என்ற நிலையிலே ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதை எல்லோரும் நன்கு உணரத் தைப்பொங்கல் வழிகாட்டுகிறது. இன்னும் பண்டைய இலக்கியப் பதிவுகளிலே 'பொங்கல்' என்பது எழுச்சி எனப் பொருள் தருகிறது. தைத்திங்களோடு இணைந் திருக்கும் பொங்கல் என்ற சொல்லும் புத்தாண்டின் எழுச்சியையும் குறித்துநிற்கிறது.

தொடர்ச்சி 23 ம் பக்கம்...




ShaRun Saree
all indian traditional dresses
திருமணப் பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள்
இன்னும் பஞ்சாபிகள் அனைத்தும் நீங்கள்
விரும்பும் ரகத்தில் எம்மிடம்
தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்!
30 வீதம் முதல் 50 வீதம் வரை
விலைக்கழிவில்....
August-Macke.Str.79a
41470 Neuss.
02137/92 96 836
0178-35 79 015
0178-35 79 002



தைப் பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!


அனைவருக்கும் எங்கள் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

தமிழருவி மணியன்
தமிழ்நாடு


ஓவியங்கள் : ஸ்யாம்

“““பயணிகளின் கனிவான கவனத்துக்கு...“““ என்று அறிவிப்பாளரின் குரல் விட்டுவிட்டு ஒலித்தது. மூன்றாவது பிளாட்.்.பாரத்தில் பெங்களூரு எக்ஸ்பிரஸ் புறப்படத் தயாராக இருந்தது. சி1 ஏ.சி. சேர் காரின் கடைசி வரிசையில் கண்ணாடி ஜன்னல் ஓரம் அமர்ந்திருந்த பார்வதியின் மனம் அமைதி இழந்து அலை பாய்ந்தது. பக்கத்தில் அமர்ந்திருந்த இளம் ஜோடியிடம் பேச்சுக் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக உறங்குவதுபோல் விழி மூடிக்கிடந்தாள்.

பிற்பகல் 1.35... ரயில் புறப்பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வேகம் எடுத்தது. “““காபி... காபி“““ என்று குரல் கேட்டதும் பார்வதிக்குக் காபி குடிக்க வேண்டும் என்று தோன்றியது. கண் விழித்தால் பேச்சுக்கொடுக்க நேரும் என்ற நினைப்பில் அந்த விருப்பத்தை அவள் கைவிட்டாள். “““கொஞ்சம் காபி குடிக்கிறீர்களா?“““ என்ற கனிவான குரல் கேட்டு, விருப்பம் இல்லாமல் விழி திறந்தாள். பக்கத்தில் அமர்ந்திருந்தவள் குவளையை நீட்டியதைப் பார்த்து “““நோ... தேங்க்ஸ்“““ என்று மென்மையாக மறுதலித்தாள். “““உங்கள் முகத்தில் சோர்வு தெரிகிறது. காபி குடித்தால் ஓரளவு உற்சாகமாக இருக்கும்“““ என்று அந்தப் பெண் வேண்டியபோது, பார்வதியால் மறுக்க முடியவில்லை.

காபியைப் பருகியபடி அந்தப் பெண்ணை ஏறிட்டுப் பார்த்தாள் பார்வதி. இருபது வயது இருக்கலாம். மாநிறம், அடர்த்தியாகத் தீட்டப்பட்ட கண்கள் எண்ணெய்இட்டு இழுத்து வாரிய கூந்தல் காட்டன் புடைவையில் கட்டுண்டு கிடந்த வாளிப்பான உடல் கழுத்தில் மெல்லிய சரடுடன் புது மஞ்சள் தோய்ந்த தாலிக் கயிறு: வெண்புள்ளியில் சிறிய மூக்குத்தி கையில் வளையல் காதில் அளவான கம்மல். பேரழகியாக இல்லாவிட்டாலும், கோயில் கருவறையில் மங்கலாக ஒளி பரப்பும் அகல் விளக்கின் புனிதம் அவள் தோற்றத் தில் தென்பட்டது.

நாகரிகம் கருதிப் பேச வேண்டி நேர்ந்ததால், “““உங்கள் பெயர் என்ன?“““ என்று கேட்டாள் பார்வதி. “““புனிதா“““ என்று அவள் புன்னகைத்தாள். “““சமீபத்தில்தான் திருமணம் நடந்ததா?“““ என்று கேட்ட அடுத்த கணம், புனிதா தன் கதையைச் சொல்லத் தொடங்கிவிட்டாள். “““போன வாரம் பட்டுக்கோட்டைக்குப் பக்கத்தில் உள்ள எங்கள் கிராமத்தில் திருமணம் நடந்தது. இவருக்கு நான் அத்தை மகள். வாழ்க்கையில் நாம் நம்ப முடியாதபடி எவ்வளவோ நடக்கிறது. உங்களைப் போல நான் அழகு இல்லை. படிப்பும் பெரிசா இல்லை. எங்க கிராமம்தான் என் உலகம். அப்பாவுக்கு இவரை மருமகனாக்கிக்கணும்னு ஆசை. “அவனோட அழகுக்கும் அறிவுக்கும் நம்ம பொண்ணு சரிப்படாது. வீணா சம்பந்தம் பேசி அசிங்கப்பட வேணாம்'னு அம்மா தெளிவா சொல்லிட்டாங்க. ஆனா, போன மாசம் இவரே எங்க வீட்டுக்கு வந்து, “புனிதாவைக் கல்யாணம் செஞ்சுக்கறேன்'னாரு. அம்மா, அப்பாவுக்கு கைகால் பிடிபடலை. எனக்கு எல்லாமே கனவு மாதிரி இருந்தது. இப்ப இவர் பக்கத்துல இருக்கிறபோதும் நம்ப முடியாத மாயமா இருக்கு!“““

பார்வதி இருவரையும் சேர்த்துப் பார்த்தாள். அவன் அழகுக்கு அவள் பொருத்தமாக இல்லை. “இவளை மனைவியாகத் தேர்ந்தெடுத்து, இவனால் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது? அறிவுபூர்வமாகவும், இலக்கிய பூர்வமாகவும், கலாபூர்வமாகவும் இந்தப் புனிதாவோடு எதைப் பகிர்ந்துகொள்ளக் கூடும்? சமைப்பதும் கைகால் பிடித்துவிடுவதும்தான் திருமண வாழ்வில் பெண்ணின் பங்கென்று நினைக்கும் ஆணாதிக்கவாதியா இவன்? தன்னைவிட்டால் அத்தை மகளை யார் மணப்பார்கள் என்று தியாகம் செய்தவனா?' புரிந்துகொள்ள முடியாமல் குழம்பினாள் பார்வதி. அவளுடைய குழப்பத்தைத் தெளிவிப்பதுபோல் புனிதாவின் கணவன் வாய் திறந்தான். “““இவள் அழகில்லாதவள் என்ற தாழ்வுணர்ச்சியோடு போராடுபவள். அழகு கொஞ்ச காலம் வானவில்போல வர்ணஜாலம் காட்டும். இளமையும் அழகும் வில்லில் இருந்து புறப்படும் அம்பைவிட விரைவாகக் கழிந்துவிடும் என்பார்கள். முகத்தில் சுருக்கமும் தலையில் நரையும் வருவதை யார் தடுக்க முடியும்? அழகுக்காக நேசித்தால், அந்த அழகு பறிபோகும்போது நேசமும் பறிபோய்விடுமே. ஒரு பெண்ணின் பரிசுத்தமான பாசமும் பரிவும் அக்கறையும்தான் குடும்பத்துக்கு அழகு சேர்க்கும். புற அழகால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அர்த்தநாரீஸ்வரக் கோலத்தின் அர்த்தம் அறிந்தவன் நான். காந்திக்குக் கடைசி வரை கஸ்தூரிபாதான் அழகு. எனக்குப் புனிதாதான் எப்போதும் பேரழகு“““ என்று சிரித்த அந்த இளைஞனை ஆச்சர்யத்துடன் பார்த்தாள் பார்வதி.

அவளுடைய மனம் விஸ்வத்துடன் அவனைப் பொருத்திப் பார்த்தது. “என் விஸ்வம் ஏன் என்னை அலைக்கழிக்கிறான்?' என்று யோசித்தாள். அவள் கண்களில் நீர் திரண்டது. நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன. மீண்டும் உறங்குவதுபோல் பாவனை செய்தாள். புனிதா கணவனின் தோளில் தலை சாய்த்தாள். வண்டி காட்பாடியைக் கடந்து வேகமாக விரைந்துகொண்டு இருந்தது.

பார்வதியும் விஸ்வமும் கடந்த ஆறு மாதங்களாக ஒரே சா.்.ப்ட்வேர் நிறுவனத்தில் பணியாற்றி வந்தனர். இருவரின் அழகும் காதலில் இணைந்தது. அவர்கள் காதல், பார்வையில் தொடங்கி, பேச்சில் வளர்ந்து, பீச்சில் பெருகியது. ஒரு நாள் மாலை காபி ஷாப்பில் இருவரும் தனியாக அமர்ந்து காபி அருந்தியபோது, “““பாரு... நீயும் நானும் இனிமேலும் ஏன் தனித் தனியாக வெவ்வேறு பகுதிகளில் அறை வாசம் செய்ய வேண்டும்? ஒரு வீடு எடுத்து இருவரும் அதில் இருக்கலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?“““ என்று விஸ்வம் கேட்டதும் பார்வதி அதிர்ந்துபோனாள். “““என்ன விசு சொல்கிறாய்? திருமணம் ஆகாமல் எப்படி ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்க முடியும்? ஊர் சிரிக்கும். என்னால் இதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது“““ என்றாள். விஸ்வம் அவளை விடுவதாக இல்லை.

“““பாரு... நம்மைப்போல் படித்துவிட்டுக் கை நிறையச் சம்பாதிக்கும் இன்றைய தலைமுறையினரிடையே இது ரொம்பச் சாதாரண விஷயம். நம்மோடு வேலை செய்யும் ஆனந்தும் உமாவும்கூடக் கல்யாணம் ஆகாமலே ஒரே வீட்டில், ஒரே படுக்கையைத்தான் பகிர்ந்துகொள்கிறார்கள். இப்ப “லிவிங் டுகெதர் கல்ச்சர்' வேகமாகப் பரவி வருகிறது தெரியுமா?“““ என்றான் விஸ்வம். “““இவன் ஏன் இப்படி விபரீதமாகச் சிந்திக்கிறான்?“““ என்று கவலையோடு அவனைப் பார்த்தாள் பார்வதி.

“““விசு... எனக்கு இது சரியாகப் படவில்லை. நம் திருமணம்பற்றி யோசிப்போம். பெற்றோரிடம் பேசுவோம். அவர்கள் சம்மதிக்காவிட்டால், பதிவுத் திருமணம் செய்துகொள்வோம். உமாவையும் ஆனந்தையும் பார்த்து மனதை அலையவிடாதே!“““ என்று பார்வதி எழுந்துகொண்டாள். விஸ்வம் மனம் சுருங்கிப்போனான். பத்து நாட்கள் பறந்தோடின. விட்டுப்பிடிப்போம் என்று அவளும் பேசுவதைத் தவிர்த்தாள். இனி, பேசாமல் இருக்க வழி இல்லை. எம்.டி. கொடுத்த டிரான்ஸ்.்.பர் ஆர்டர் அவள் கையில் இருந்தது. விஸ்வத்திடம் சென்று, “““முக்கியமான மேட்டர். ஈவினிங் காபி ஷாப்பில் சந்திப்போம். உன்னிடம் பேசவேண்டும்“““ என்றாள்.

காபி ஷாப்பில் கூட்டமே இல்லை. விஸ்வமும் பார்வதியும் ஒரு மூலையில் இடம் பார்த்து அமர்ந்தனர். பார்வதி டிரான்ஸ்.்.பர் ஆர்டரை அவனிடம் கொடுத் தாள். படித்துப் பார்த்தான். பெங்களூரு கிளைக்கு அவள் மாற்றப்பட்டு இருக்கிறாள் என்பதை அறிந்து திகைத்தான். ஏ.சி-யின் குளுமையையும் மீறி அவன் முகம் வியர்த்தது. “““என்ன செய்யப்போகிறாய்?“““ என்று கேட்டான். “““நீதான் சொல்ல வேண்டும் விசு. திருமணத்துக்கு நீ சம்மதித்தால், இந்த ஆர்டரைக் கிழித்துப்போடுவேன். இங்கேயே வேறு ஆபீஸில் வேலை தேடுவேன். வேண்டாம் என்றால், வீட்டில் இருந்து உனக்கு உதவி செய்வேன். என்ன சொல்கிறாய்? “லிவிங் டுகெதர்' கதையெல்லாம் நம் சமூகத்துக்குச் சரிப்படாது!“““ என்ற பார்வதியை ஏளனமாகப் பார்த்தான் விஸ்வம்.“““பாரு... திருமணம் என்பது அங்கீகரிக்கப்பட்ட விபசாரம் என்று ஷா சொன்னது உனக்குத் தெரியாதா? சந்தேகத்தில் உருவான ஓர் அருவருப்பான கட்டமைப்புதான் திருமணம்.

தொடர்ச்சி 21ம் பக்கம்.

T.T.S.Brothers GmbH&Co.KG



உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

# தமிழகத்தில் 30 ஆயிரம் போலி டாக்டர்கள்! அட யாழ்ப்பாணத்திலும் உண்டாமே?



கமலகாசன் நடித்து சக்கைபோடு போட்ட படம் வசூல்ராஜா (டாக்டர்எம்.பி.பிஸ்.) இப்படத்தில் கமல் போலி டாக்டராக நடித்திருப்பார். நல்ல படங்கள் கதைகள் உண்மைக் கரு இல்லாமல் பிறப்பதில்லை. இதோ போலிடாக்டர்கள் பற்றிய சில செய்திகள்.

### இந்திய மருத்துவ சங்க தலைவர் தகவல்

போலி டாக்டர்கள் கைது என்ற செய்தி தமிழக நாளிதழ்களில் அடிக்கடி இடம் பெறும் சாதாரண மான விஷயமாகி விட்டது.

மக்கள் தொகை பெருகி வரும் நிலையில், அவர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய அளவிற்கு டாக்டர்கள் ,மருத்துவர்கள் இல்லை என்று ஒரு புறம் சொன்னாலும் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 30 ஆயிரம் போலி டாக்டர்கள் உள்ளதாக இந்திய மருத்துவ சங்க தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மருத்துவ சங்கத்தின் 280-வது கவுன்சில் கூட்டம் அண்மையில் நாமக்கல்லில் நடந்தது. கூட்டம் முடிந்ததும் மாநில தலைவர் பாலசுப்பிர மணியன் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர் ," தற்போது அரசு அதிகாரிகள், பொதுமக்கள் என அனைவரும் மருத்துவதுறை மீது அதிருப்தியில் உள்ளனர். இதற்கு மருத்துவதுறையில் எங்காவது நடைபெறும் விரும்பத்தகாத நிகழ்வு காரணமாக உள்ளது.

நாங்கள் செய்யும் நல்ல செயல்கள் வெளியே வருவது இல்லை.

தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 30 ஆயிரம் போலி டாக்டர்கள் உள்ளனர். இவர்கள் மாவட்டத்திற்கு ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை உள்ளனர்.

இவர்கள் வாங்கும் கட்டணம் குறைவாக இருக்கலாம். ஆனால் விளைவு ஆபத்தானது. கடந்த ஆண்டு, தமிழகத்தில் மட்டும், 2,000-க்கும் அதிகமான போலி டாக்டர்களை, போலீஸார் கைது செய்தனர்.

இவர்கள், நீதிமன்றத்தில், 500, 1,000 ரூபாய், அபராதம் கட்டி விட்டு, மீண்டும்,அதே வெள்ளைக் கோட்டை மாடியபடி மருத்துவ சிகிச்சை அளிக்கின்றனர். இவர்கள் வாங்கும் கட்டணம் குறைவாக இருக்கலாம். ஆனால் விளைவு ஆபத்தானது. எனவே, அரசு இவர்களை ஒழிக்க வேண்டும். மருத்துவமனை ஒழுங்குபடுத்தும் சட்டம் போலி டாக்டர்களை ஒழிக்க உதவும் என நம்புகிறோம்." என்றார்

### யாழ்ப்பாணத்திலும் "போலி" டாக்டர்கள்.?

யாழப்பாணத்திலும் இயங்கும் சில வைத்திய சிகிச்சை நிலையங்கள் போலியானவை அங்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்களும் போலியா னவர்கள்.

குறிப்பாக பல சிகிச்சை நிலையங்கள் சில அவ்வாறு இயங்குகின்றன. அங்கு சிகிச்சை அளிக்கும் போலி வைத்தியர்களின் சிகிச்சை யினால் பலர் பாதிக்கபப்ட்டுள்ளனர். குறித்த சிகிச்சை நிலையங்களில் போலி வைத்தியர்கள் போலி தாதியர்கள் போலி தொழிநுட்ப உத்தியோ கஸ்தர்களே கடமையாற்றுகின்றனர்.

அந்த வைத்திய சிகிச்சை நிலையங்களோ அங்கு வைத்திய சிகிச்சைக்கு பயன்படுத்தும் உபகரணங் களோ சுகாதாரமற்றவை. அண்மையில் போலி சிகிச்சை நிலையம் ஒன்றில் பல மிதப்புக்கு சிகிச்சை பெற்று பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச் சைக்காக வந்திருந்த போது பல மிதப்புக் காக அவருக்கு போடப்பாட " கிளிப் " வேலி



அடைப்பதற்கு பயன்படுத்தும் கம்பி கொண்டு தயாரிக்கப் பட்டது என கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும். இவ்வாறான சிகிச்சை நிலையங்களில் வைத்தியர்களின் பெயர்களுக்கு முன்பாகவோ அல்லது பெயர்களின் பின்னாலோ பட்டங்கள் எதுவும் இருக்காது. பிரபல வைத்திய நிபுணர்கள் என்றே எழுதி இருப்பார்கள். இந்த போலி சிகிச்சை நிலையங்கள் போலி வைத்தியர்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருப்பதடன் ஊடாகவே அவர்கள் தம்மை பாதுகாத்து கொள்ளலாம் என மேலும் தெரிவித்தனர். அத்துடன் யாழ். நகர் பகுதியில் பல மருந்தகங்கள் (பாமசிகள்) அனுமதியின்றி இயங்கி வருகின்றன அவை குறித்தும் அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டனர்.

தன்னலமற்ற சேவைசெய்யும் பலநூறு டாக்டர்கள் வாழும் தமிழ்மண்ணில் ஒரு சிலரால் நல்வர்கள் வல்லவர்கள், பெயரும் பாதிக்கப்படும். டாக்டர் தொழிலின் புனிதத்தை அவர்கள் பேணிலால் யாவருக்கும் நன்மையே!

GTV
தொலைக்காட்சியின்
யேர்மனி கிளை அலுவலகம்
15.01.2015
முதல் புதிய
முகவரியில்
Rheinische str-72,44137 Dormund
தொடர்புகட்கு:- 0049-0231-10876360



# ஒரு இடத்தில் இருக்க முடியாமல் ஒரே இடத்தில் நோகிறதா?

## குத எலும்பு அழற்சி

டாக்டர் எம்.கே.முருகானந்தன்

உள்ளே நுழைந்த அந்த இளம் மாணவியின் முகத்தில் இனம் புரியாத தயக்கம். 'இருங்கோவன்' கதிரையை அவளை நோக்கி நகர்த்தினேன். உட்காரவில்லை.
'இருக்கிறாள் இல்லை வலிக்குதாம்' என இடைமறித்தாள் அம்மா.
'எங்கை வலி' என்று கேட்டதும் அந்தச் சின்னத் தேவதை வெட்கப்பட்டாள். மேலும் பல கேள்விகள் கேட்டதும் அது வால் எலும்பு வலி என்பது எனக்குப் புரிந்தது. அவள் வெட்கப்படுவதில் நியாயம் இருக்கிறதுதான்.
தேவதைக்கு வாலா என அதிசயிக்காதீர்கள். உங்களுக்கும் எனக்கும் உள்ளது அவளுக்கு மட்டும் இல்லாது போகுமா?
மனிதன் உட்பட மிருகங்களுக்கு (Vertebrates) முள்ளந்தண்டு (முதுகெலும்பு) இருக்கிறது. இது ஒரு எலும்பு அல்ல. பல தனித்தனி எலும்புகளின் சேர்க்கைகளால் ஆனது என்பது உங்களுக்குத் தெரியும். கழுத்தில் ஆரம்பித்து முதுகு வழி தொடர்ந்து இடுப்புப் பகுதியையும் கடந்து இறுதியில் முடிவது இந்த வால் எலும்புகளில்தான்.


இவ் எலும்பை ஆங்கிலத்தில் coccyx என்பார்கள். தமிழில் குத எலும்பு, வால் எலும்பு, உள்வால் எலும்பு என்று எப்படி வேண்டுமானலும் சொல்லலாம்.

இவை பொதுவாக எந்த ஈடாட்டமும் இன்றி செயலற்று வாழாதிருப்பவை. எனவே இவற்றில் நோய் ஏற்படுவது குறைவு. ஆயினும் சில தருணங்களில் நோய் ஏற்படவே செய்யும்.

அந்தக் குத எலும்பில்தான் இவளுக்கு வலி. படுக்கையில் கிடத்தி, பிட்டப் (குண்டி) பகுதி தசை மடிப்புகளை விரித்து, மலவாயிலுக்கு சற்று மேலே உள்ள குத எலும்பின் நுனிப் பகுதியைத் தொட்டபோது கடும் வலி இருப்பது புரிந்தது. அக்கம் பக்கம் உள்ள சருமத்திலோ சதைப் பகுதிகளிலோ வீக்கம் வலி வெப்பம் எதுவுமே இல்லை என்பதை நிச்சயப்படுத்தி வேறு நோய் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

குத எலும்பு அழற்சி

இவ்வாறு குத எலும்பில் வலி ஏற்படுவதை குத எலும்பு அழற்சி (Coccydynia) எனலாம். ஆயினும் அதன் அருகில் உள்ள ஏனைய பகுதிகளிலும் இதுபோன்ற வேறு வலிகள் ஏற்படலாம் என்பதால் கவனம் எடுக்க வேண்டும். உதாரணமாக மலவாயில் கட்டிகள், மூலக் கட்டிகள், இடுப்பு எலும்பு வலிகள், தசைப்




பிடிப்புகள் போன்றவையும் அவ்விடத்தில் வலியைத் தோற்றுவிப்பதுண்டு.
இந்த வலியானது கடுமையானது அல்ல என்றபோதும் 'அம்மல்' வலியாகத் தொடரும்.
அவ்விடத்தை அழுத்தும் போது மிகக் கடுமையாக இருக்கும். திடீரெனக் குண்டி அடிபட உட்கார்ந்தாலோ, துவிச்சக்கர போன்ற அழுத்தும் இருக்கைகளிலும், முச்சக்கர வண்டி போன்ற குலுக்கும் வாகனங்களிலும் பயணம் செய்தாலோ மோசமாகும்.
இந் நோய் ஏன் ஏற்படுகிறது என்பதைத் தெளிவாகச் சொல்வது சிரமம். பொதுவாக அடிபட உட்காரல், விழுதல். பின்புறமாக சுவரோடு மோதுதல் போன்றவை காரணமாக இருக்கலாம்.
இதைக் கண்டறியவோ நோயை உறுதிப்படுத் தவோ பரிசோதனைகள் எதுவும் அவசியமில்லை. நோயாளி சொல்வதைக் கேட்டு மருத்துவர் பரிசோதித்துப் பார்ப்பதன் மூலம் நோய் நிர்ணயம் செய்ய முடியும். அருகில் உள்ள தசைப் பகுதிகளிலோ எலும்புகளிலோ பிரச்சனை இருக்கலாம் எனச் சந்தேகித்தால் மட்டும்; CAT Scan-MRI Scan போன்ற பரிசோதனைகள் அவசியமாகும்.இந்த வலி வந்தவுடன் மருத்துவரை நாடி ஓட வேண்டிய அவசியமில்லை. அடிப்பகுதி அண்டாதவாறு குஷன் அல்லது துணிகள் வைத்து மென்மையாக்கப்பட்ட இருக்கைகளிலேயே உட் கார வேண்டும். நீண்டநேரம் தொடர்ந்து உட்காருவதையும் தவிர்க்க வேண்டும்.

### மருத்துவம்

பரசிட்டமோல் அல்லது வீரியம் கூடிய வலி நிவாரணிகள் வலியைத் தணிக்க உதவும்.
ஆயினும் நரம்புகளை அமைதிப்படுத்தும் மருந்துகள் கூடுதலாகப் பலன் தரலாம்.
ஸ்டீரொயிட் ஊசி மருந்தை அவ்விடத்தில் ஏற்றுவது ஆச்சரியகரமான முறையில் வலியைத் தணிக்கும். வலியைத் தணிப்பது மட்டுமின்றி நோயிலிருந்து பூரண விடுதலையை பெரும்பாலும் கொடுக்கும். அனுபவமுள்ள மருத்துவர்கள் இதைத் தங்கள் மருத்துவ ஆலோசனை அறையில் வைத்தே போடக் கூடியதாக இருக்கும்.
சில வகை மசாஸ் முறைகளும் பயிற்சிகளும் உதவலாம். வலி கடுமையாகவும் தொடர்ந்து தொல்லை கொடுப்பதகவும், ஏனைய சிகிச்சை களுக்கு தணிவதாக இல்லை எனில் சத்திர சிகிச்சை செய்யப்படலாம். Coccygectomy எனப்படும் இந்தச் சிகிச்சையில் அந்த குத எலும்பை அகற்றுவார்கள். ஆயினும் அதற்கான தேவை பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

### நீங்கள் செய்யக் கூடியவை

சுடு ஒத்தடம் கொடுப்பது, ஐஸ் வைப்பது போன்றவை உதவக் கூடும். ஆயினும் அந்த இடத்தில் இவற்றைச் செய்வது மிகுந்த இடைஞ்சலானது என்பதை மறுப்பதற்கில்லை.
வலி உள்ள இடம் மீண்டும் தாக்குப்படாதவாறு கவனமாக இருக்க வேண்டும். அதேபோல அவ்விடத்திற்கு ஆறுதல் கொடுப்பது அவசியம்.



ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மெதுமையான இருக்கைகளில் உட்கார வேண்டும். மெத்தை, தலையணை, குஷன் போன்றவற்றை இருக்கை யில் வைத்து அதன் மேல் உட்கார வேண்டும். உட்காரும்போதும் திடீரென அடிபட உட்காராது, மெதுவாக கைபிடிகளைப் பிடித்து பாரம் அடியில் தாக்காதவாறு மென்மையாக உட்கார வேண்டும்.
நடுப்பகுதியில் குழி வைத்து அப்பகுதி அண்டா தவாறு உட்காரக் கூடிய கார் டியூப் போன்ற இருக்கைகள் கிடைக்கின்றன. முதலில் கூறிய அந்தக் குட்டித் தேவதை அத்தகைய ஒரு இருக்கையைப் பயன்படுத்தி கொழும்பிலிருந்து கதிர்காமம் வரை நலமே சுற்றுப் பிரயாணம் செய்ய முடிந்திருந்தது.
எலும்பு உள்ள இடத்தில் அண்டாதவாறு பள்ளம் விடப்பட்ட குஷன்கள் (Coccyx (tailbone) cushions) விற்பனைக்கு கிடைக்கிறதாக அறிகிறேன்.
Coccyx-Cushion-Tailbone-Cushion-
இடுப்பு எலும்புப் பகுதியில் உள்ள தசைககளைத் தளரச் செய்யும் பயிற்சிகள் (pelvic floor relaxation) கொடுப்பது உதவும். ஆழமாக மூச்சு எடுத்து மலவாயில் சலவாயில் ஆகியவற்றை அண்டியுள்ள தசைகளை தளரச் செய்வது இதுவாகும். பொதுவாக சிறுநீர் கழியும் போது இவ்வாறு தசைகள் தளர்வதுண்டு.
பொதுவாக மனதை அலட்டிக் கொள்ளாது மேற் கூறிய வாழ்க்கை முறைகளையும் பயிற்சி களையும் செய்ய நோய் குணமாகும். இப் பெண்ணிற்கு அவற்றால் வலி தணியாததால் ஊசி ஏற்றிக் குணமாக்க வேண்டியதாயிற்று.




உங்கள் அனைத்து இல்லக் கொண்டாட்டங்களுக்கும் 100 இருக்கைகளுடன் நீங்கள் விரும்பும் சோடனைகளுடன்

all you can eat Buffet daily from 11.00-22.00 only 6,-€

Om Namaste
Indisches Restaurant

every Sunday
from 17.00-22.00
Vegetarian
all you can eat Buffet
10 vegetarain Currys
Rice,Salad,Soup,Samosa,
Desserts and and...
only 9,90 €

உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்திய உணவுகளை சுவையாக தயாரித்து அனைத்தையும் இந்நாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.

Offnungszeit: 11.00 -24.00



www.om-namaste@.com
e.mail: om-namaste@.de
facebook:om namaste

-கொத்துரொட்டி
-புரியாணி
-மசாலாத்தோசை
-பேப்பர் தோசை
-சீற்றூண்டிகள்
-Original Naan Pizza
இன்னும் இன்னும் இன்னும் ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

உடன் தொடர்பு கொள்ளுங்கள்!
Brückstr 33
44135 Dortmund
0231 33 48 52 82

# சிறுவர் அரங்கம்

## கதை சொல்ல ஓர் கதை...

மீரா. குகன்



## தைப் பொங்கலும் தாங்க்ஸ் கிவிங்கும்

ரஜித்தும் மைக்கேலும் மிக நெருங்கிய நண்பர்கள் . வழமைப் போல் அன்றும் விளையாடிக்கொண்டிருந்த வேளையில்இ மைக்கேலின் தொலைபேசி அழைப்புமணியினால் அவர்கள் விளையாட்டு கொஞ்சம் தடைப்பட்டது.


மைக்கேலின் அம்மா அவனை உடனே வீடு திரும்பும்மாறு தொலைபேசியில் கேட்டுக்கொண்டார். ஆனந்தமான விளையாட்டு இடையில் தடைப்படுவதை பொறுக்காத ரஜித் மைக்கேலிடம் „உடனே நீ போக வேண்டுமா ? வழமையாக நீ வீடு திரும்புகிற நேரம் இன்னும் ஆகவில்லையே" என்று குறைப்பட்டான்.

அதற்கு மைக்கேல். „என்ன ரஜித் மறந்து விட்டாயா? நாம் அமெரிக்கர் இன்று தாங்க்ஸ் கிவிங் கொண்டாடுகிறோம் அல்லவா . அம்மா இன்று ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்துள்ளார் . எமது உறவினர்கள் சிலரும் வருகிறார்கள் . எமக்கு இந்நாள் ஒரு முக்கிய நாளாகும் . நாம் எல்லோரும் ஒன்று கூடி விருந்தை உண்பதற்கு முன்னர் நாம் எல்லாவற்றுக்கும் நன்றி கூறியப்பின்னரே அம்மா சமைத்த விதம் விதமான உணவை உண்டு ரசிப்போம் . ரஜித்இ எனது கலாச்சாரம் உன் கலாச்சாரத்திலிருந்து மிகவும் வேறுப்பட்டது . நாம் நன்றி கூறுவதற்கு மட்டுமே ஒரு விசேட நாளாக இந்த தாங்க்ஸ் கிவிங்கை கொண்டாடுகிறோம்" என்று கூறிக்கொண்டே போன மைக்கேலை ரஜித் இடை மறித்தான்.

„மைக்கேல் எமது தமிழர் கலாச்சாரத்திலும் தை மாதம் பதினான்காம் நாள் எமது முக்கிய உணவான அரிசியை பெற உதவி செய்யும் அந்த சூரிய பகவான் தொடக்கம் அங்கே எமது ஊரில் வயல்களில் நெல் உழ உதவும் மாடுகள் என எல்லோருக்கும் நன்றி கூறும் திருநாளாக நாம் தைப்பொங்கலை கொண்டாடுகிறோம்.

நாமும் உங்களைப் போன்றே ஆனால் அதி காலையிலேயே எழுந்து சூரியனுக்கு படையல் செய்து புத்தாடை அணிந்து பலவகையான இனிப்பு பண்டங்களையும் தயார் செய்து எமது உறவினர்களுடன் பகிர்ந்து உண்டு மகிழ்வோம். ஒன்றே ஒன்று தான் இங்கே வித்தியாசப்படுகிறது .


அதாவது நாம் ஒரு புது ஆண்டின் தொடக்க நாளில் நன்றி கூறி தொடக்கி வைக்கிறோம், நீங்கள் ஆண்டு முடிவுக்கு வருகையில் நன்றி கூறுகிறீர்கள். ஆகவே எமது மதம் மொழி வேறுப்பட்டாலும், கலாச்சாரங்கள் வேறாக இருந்தாலும், நாமிருவரும் எப்படி நெருங்கிய நண்பர்களாக இருக்கிறோமோ அதே போன்றே எமது சமயங்களும் நல்ல நல்ல விடயங்களை எமக்கு சொல்லிக்கொடுத்து எம்மை நல்வழிப்படுத்துகிறது.
ரஜித் கூறுவதைக்கேட்டு மைக்கேல் ஆச்சரியப்பட்டான்.



அவர்கள் இருவரதும் நட்பு மேலும் இறுகியது போன்று இருவருமே உணர்ந்தனர் .

## உங்களுக்குத் தெரியுமா!

### கர்ப்பம் தரித்து குழந்தை பெறுகின்ற ஒரே ஒரு ஆண் வர்க்கம்!



இந்த உலகத்திலேயே ஆண் வர்க்கத்தை பொறுத்த வரை கர்ப்பம் தரித்து குழந்தை பெறுகின்ற ஒரே ஒரு உயிரினம் கடல் குதிரைதான். கடல் குதிரைகளிடையே உடல் உறவு என்பது கிடையாது. பரஸ்பரம் சீண்டிக் கொள்கின்றன.

இச்சீண்டல்களை தொடர்ந்து பெண் கடல் குதிரையின் உடல் சிலிர்த்து விடுகின்றது. ஆண் கடல் குதிரையின் வயிற்றுப் பகுதியில் இனப் பெருக்க பை என்கிற உறுப்பு காணப்படுகின்றது.ஆணின் இவ்வுறுப்புக்குள் பெண் கடல் குதிரை மிகவும் நுட்பமான முறையில் முட்டைகளை உட்செலுத்தி விடுகின்றது. ஆண் கடல் குதிரை கர்ப்பம் தரித்து விடுகின்றது. ஆண் கடல் குதிரையின் வயிற்றில் சுரக்கின்ற ஒரு வகை திரவம்தான் குட்டிகளுக்கு உணவு. மூன்று வாரங்களின் பின் குட்டிகளை வெளித் தள்ளி விடுகின்றது ஆண் கடல் குதிரை. ஒரு பெரிய படையை போல குட்டிகள் வெளியில் வந்து விடுகின்றன. பிரசவ வேதனை மிகவும் கொடுமையானது தான்.

1. சிலந்திப் பூச்சிக்கு எட்டுக் கண்கள் உண்டு.
2. இறாலுக்கு இதயம் தலையில் இருக்கிறது
3.ஆப்கானிஸ்தானில் ரயில் கிடையாது.
4இந்தியாவில் தமிழில் தான்"பைபிள்"முதலில் மொழிபெயர்க்கப்பட்டது.

**5.ஆண் சிங்கம் சாப்பிட்ட பின்னரே பெண் சிங்கம் சாப்பிடும். (தமிழ்ச் சிங்கமோ)**



6. கத்தரிக்காயின் தாயகம் இந்தியா தான்.
7. பிரேசில் நாட்டு தேன் கசக்கும்.
8.முன்னாள் இந்திய ஜனாதிபதியாகிய அப்துல் கலாம் சிறந்த வீணை கலைஞரும் ஆவார்.

9. உலகில் கடற்கரை இல்லாத நாடுகள் 26 ஆகும்.
10.அமெரிக்காவை விட சகாரா பாலைவனம் பெரியது






அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# உள்ளொன்று வைத்துப் புறமொன்று...



ஸ்ரீரஞ்சினி

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்", என்றார், வள்ளலார்.
எமது உறவுகள், எம்முடன் உண்மையாகவிருக்க வேண்டுமென எதிர்பார்க்கும் நாம், அந்த உறவுகளுடன் உண்மையாக இருக்கின்றோமா?
நேர்மை என்ற சீரிய வாழ்க்கைப் பெறுமானத்தை எமக்குள் விதைப்பதற்காக சீராளனும் பூபாலனும் முலாம்பழம் விற்ற கதை எமது கீழ் வகுப்புப் பாடத்திட்டத்தில் (இலங்கையில்) சேர்க்கப்பட்டிருந்தது, அது வெற்றி பெற்றிருக்கின்றதா?
இவை பற்றிய சிந்தனைகளைத் தூண்டுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.
"காதலர்கள், துணைவர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் அல்லது மேலதிகாரிகளுக்கு நாங்கள் உணர்வதை, நினைப்பதை அல்லது செய்வதைச் சொல்லாமலிருக்கும்போது, ஒருவகையான மனச் சிறையில் நாங்கள் அடைபட்டுப் போகின்றோம்", என்கிறார், உளவழி மருத்துவர் (psychotherapist) Dr. Brad Blanton.
மேலும், பொய் சொல்வதே, மனிதர்களின் மனத்தகைப்புக்கு முக்கியகாரணமாக இருக்கிறது எனக் குறிப்பிடும் இவர், இந்த மனத் தகைப்பிலிருந்து விடுபடுவதற்கு, 'முற்றாக உண்மையாயிருத்தல்' (Radical-Honesty) எனும் செயல்முறையைப் பின்பற்றுதல் சிறந்ததொரு வழியாக அமையும் எனப் பரிந்துரைக்கின்றார்.
'முற்றாக உண்மையாயிருத்தல்', எனப்படும் அந்தச் செயல்முறை பின்வரும் படிமுறைகளைக் கைக்கொள்ளும் படி எங்களுக்கு ஆலோசனை சொல்கின்றது.
உண்மை சொல்வதைத் தவிர்த்தல், உண்மையைத் திரிபு படுத்தல், உண்மை சொல்லாமல் விடுதல் போன்ற சூழ்நிலைகளில் நாங்கள் பொய் சொல்கின்றோம் எனபதை நாமே அவதானித்தல்.
பொய் சொல்வதால் எவருக்காவது நன்மை செய்கின்றோமா என ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தல் ... குறித்த ஒருவரை உண்மையிலிருந்து பாதுகாக்கத்தான், அந்தப் பொய் என எங்களை நாங்களே ஏமாற்றுகின்றோமா அல்லது உண்மையைச் சொல்வதற்கு வேண்டிய அல்லது பிரச்சினைகள்.'.நிராகரிப்புக்களை எதிர்கொள்வதற்கான துணிவு எங்களிடம் இல்லையா என்பதை உணரல்.

பொய் சொன்னதை ஒப்புக்கொள்ளல். உண்மையாக இருத்தல்
குழந்தைகள் சம்பந்தபட்ட விடயத்தில் அல்லது உண்மை கொஞ்சம் மாற்றப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், எவரையும் பாதிக்காத வகையில், எங்கே எல்லை போடுவது எனத் தெரிந்திருத்தல்.
உறவுகளில் நேர்மையாக இருத்தல், மிகவும் முக்கியமானதொரு வாழ்க்கைப் பெறுமானம் எனப் பலர் கருதுகிறார்கள். துன்பம் தரும் விடயமானாலும்கூட உண்மை சொல்லப்படுவதையே அனேகமானவர்கள் விரும்புகிறார்கள். தம்மைப் பாதிக்கும் விடயங்கள் தமக்குத் தெரியாமல் இருப்பது நல்லது என வேறு சிலர் நினைக்கக் கூடும். இருந்தாலும், பொய்யோ அல்லது ரகசியமோ ஒரு உறவில் இருக்கும்போது, அந்த உறவின் இயக்கவியலை அது நிச்சயமாகப் பாதிக்கவே செய்யும், என்கிறார், Dr. Blanton.



ஸ்ரீரஞ்சினி

எங்களுக்குப் பொய் சொல்லப்பட்டுள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ளும் அந்தக் கணம், குறித்த நபர் மீது பல வருட காலமாக நாம் கட்டியெழுப்பிய நம்பிக்கையைச் சுக்கு நூறாக உடைத்துவிடும். அதன் பின்னர் அந்த நபரை மீண்டும் எங்களால் நம்ப முடியாமலிருக்கும். அத்துடன் அந்த நம்பிக்கைத் துரோகம் மாறாத மன வலியை அளிக்கும்.

எனவே எங்களுடைய நாணயத்தைப் பாதுகாப்பதுடன், மற்றவர்களையும் கருத்தில் கொள்ளலும், மரியாதையுடன் வாழலும் நேர்மையாக வாழ்வதற்கு உகந்த வழிகள் எனலாம்.
உறவுகளுடன் நேர்மையாக இருக்கும்போது, எல்லாம் நன்றாக இருக்கின்றது, நாம் நன்கு சமாளிக்கின்றோம் என வெறுமனவே நடிக்காமல், எமது வாழ்க்கையில் நாம் சிறப்பாகத் தொடர்பாடக் கூடியதாக இருக்கும். எனவே, எதிர்பாராத சம்பவங்களால், நேர்மை தவறிப் போகும் நேரங்களில், அந்தக் குழப்பங்களிலிருந்து வெளியேறுவதற்கு பாதிக்கப்பட்டவருடன் சமரசம் செய்துகொள்ளல் மிகவும் நல்லது.
கஷ்டமான நேரங்களில் கூட உண்மையாக இருத்தல், தீர்மானங்களை எடுப்பதற்கான சந்தர்ப்பங்களை அனைவருக்கும் வழங்குவதுடன் சுயமரியாதையும் மற்றவர்களுக்கு நாம் வழங்கும் மரியாதையும் வெளிப்படுத்துகிறது. அதனால்தான் உண்மையிலேயே நேர்மையாக இருக்க விரும்புபவர்கள், சூழவுள்ளவர்களிடமிருந்து தகவல்களை மறைப்பதற்காகச் சூழ்ச்சி செய்வதில்லை, பொய் சொல்வதில்லை, ஏமாற்றுவதில்லை.
உண்மையான நான் என்பது யார்? உண்மையான நேர்மையை நேரத்துக்கு நேரம் நாங்கள் மாற்ற முடியுமா? எமக்கு வசதியானபோதும், மற்றவர்கள் எங்களை அவதானிக்கும் போதும் மட்டும்தானா நாங்கள் நேர்மையாக இருக்கின்றோம்? கண்டுபிடிக்கப்பட்டு விடுவோம் என்ற பயம்தான் நாங்கள் உண்மையாக இருப்பதற்குக் காரணமாகவுள்ளதா? குறித்த விடயத்தைச் செய்தால், தண்டனை கிடைக்கும் அல்லது பிரச்சினை வரும் எனத் தெரிந்ததால்தான் நாங்கள் நேர்மையாக இருக்கின்றோமா? அல்லது நேர்மையாக இருப்பது தான் எமது இயல்பா? என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தல், எம்மை நாமே அறிந்து கொள்வதற்கு உதவிசெய்யும்.
நேர்மைக்கும் நேர்மையின்மைக்கும் இடையே ஊசலாடியபடி எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் வாழுவோமானால் சலனத்துக்கான ஆபத்து மிக அதிகமாகவே இருக்கும். அத்துடன் பயம் மற்றும் பேராசைக்கு நாம் உட்படும் போதுதான், எமது உண்மைத் தன்மை அனேகமாக வெளிப்படுகின்றது. அந்தத் தீவிரமான கணங்களில் நாம் செய்யும் தேர்வுகள்தான் எங்கள் இயல்பை, ஆளுமையை ஆழமாகப் புலப்படுத்துகின்றன, என்கிறார்கள், உளவியலாளர்கள்.
மேலும், எம்மைப் போலவே ஏனைய மனிதர்களையும் நாம் பார்ப்பதால் மற்றவர்களை நம்ப முடியாது என்றோ அல்லது அவர்கள் நேர்மையற்றவர்களாக இருப்பார்கள் என்றோ நாம் எண்ணுவது கூட, அவர்களை விட எங்களைப் பற்றிய எமது உணர்வுகளையே அது வெளிப்படுத்துகின்றதுஇ என்கிறார்கள் உளவியலாளர்கள். அதாவது, மற்றவர்களை எவ்வளவு தூரம் நாம் நம்புகின்றோம் என்பது, நாங்கள் எவ்வளவு நேர்மையுள்ளவர்களாக இருக்கின்றோம் என்பதை எங்களுக்குக் காட்டும் ஒரு வழியாக உள்ளது.
சில வேளைகளில், எந்த நேரமும் நேர்மையாக இருப்பது எங்களுக்குத் தீமையாகக்கூட அமையலாம். எங்களை எங்களுடைய துணைவர்கள் விவாகரத்துச் செய்யலாம், அல்லது வேலையிலிருந்து நாங்கள் நீக்கப்படலாம். இருந்தாலும்கூட மற்றவர்களை ஏமாற்றுவதை விட அது சிறந்ததாக இருக்கும் அத்துடன் மீதியாக எஞ்சியிருக்கும் எங்கள் உறவுகள் ஆரோக்கியமானதாக அமையும்.
எங்களுடைய உறவுகளுடன் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் எங்கள் வாழ்க்கையை நாங்கள் வாழப் போகின்றோம் என்று நாங்கள் முடிவெடுக்கும்போது, மற்றவர்களிடமிருந்து மரியாதை, நேர்மை போன்றவை எங்களுக்குப் பிரதியுபகாரமாகக் கிடைக்கும். இது எங்களுடைய உண்மையான சுய வெளிப்படுத்தலுக்கும் வளமான வாழ்க்கைக்கும் உதவுவதை நாங்கள் பார்க்கக் கூடியதாகவிருக்கும்.





Essen மாநகரில் புதிய உதயம்

Oviyan textiles

ஓவியன் ஆடைகள் உலகம்

Öffnungszeiten 11.00-19.00 Uhr

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான அழகிய பஞ்சாபிகள், இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள், ஓவியன் ஆடைகள் உலகம்!

Handy 0177 73 98 346 / 0157 5721 7563

Ihn.Balasundaram
brobert@aol.nl

எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்

Baedecker Str.11
45128 Essen

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# அடுப்படி





## சஸ்வான் பிரைட் றைஸ்
## (Schezwan fried rice)




சஸ்வான் சோஸ் தயாரிப்பதற்கு (Ingredients for Schezwan Sauce)

### தேவையான பொருட்கள்

செ.மிளகாய் 8, 4 உள்ளி, இஞ்சி,தலா 1.்.4 தே.க, வினிகர் 1/4 தே.மிளகு தூள் 1/4 தே.க, சோயா சோஸ் 3 துளி, தக்காளி சோஸ் 1 தே.க, சமையல் எண்ணெய் 1 மே.க , உப்பு தேவைக்கு

### செய்யும் முறை

செத்தல் மிளகாயை இளம் சுடு தண்ணீரில் 1/2 மணித்தியாலம் ஊறிய பின் மெல்லிய சூட்டில் அடுப்பில் 15 நிமிடம் அவிந்த பின் வடித்து ஆற வைத்து பேஸ்ற் போல கொஞ்சம், கொஞ்சமாக தண்ணீர் விட்டு அரைத்து வைக்கவும். பின்னர் ஒரு கடாயில் எண்ணெய் விட்டு இஞ்சி, பூண்டை நிறம் மாறாமல் மெல்லிய தியில் 2 நிமிடம் வதக்கி மிளகாய், தக்காளி சோஸ், சோயா சோஸ், வினிகர்,உப்பு மிளகு தூள், சேர்த்து 5 நிமிடம் வதக்கி இறக்கவும். இந்த சோஸ் கடைகளிலும் கிடைக்கும்.

### பிரைட் றைஸ் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள்

வஸ்மதி அரிசி 1கப், பீன்ஸ்3/4கப், கரற் 3/4 கப், கோவா3/4கப், குடை மிளகாய் பச்சை1/3 கப்,மஞ்சள்1/3 ,கப் , உள்ளி 4 பல், இஞ்சி சிறு துண்டு,மிளகு தூள்1 மே.க,வெங்காயத் தாள் 1 மே.க, பச்சை தாள் 1 மே.க (எல்லா மரக் கறிகளையும் குறுண லாக வெட்டவும்) எண்ணெய் 2 மே.க, உப்பு தேவைக்கு, சஸ்வான் சோஸ் 2 மே.க

### செய்யும் முறை

அரிசியை கழுவி 15 நிமிடம் ஊறிய பின் தண்ணீரை வடித்து 2 கப் தண்ணீர் விட்டு வெந்ததும் 1.மே.க எண்ணெய் விட்டு கிளறி ஆற விடவும்.ஒரு பாத்திரத்தில் 1மே.க எண்ணெய் விட்டு 5 நிமிடம் பீன்ஸ் வதக்கி, கரற்,கோவா,குடை மிளகாய், இஞ்சி, உள்ளி, வெள்ளை வெங்காயத் தாள் 3 நிமிடம் வதக்கி கடைசியில் பச்சை தாள், உப்பு,மிளகு தூள், சஸ்வான் சோஸ் எல்லாவற்றையும் சேர்த்து 3 நிமிடம் அவிய விட்டு சாதத்தை யும் கலந்து பரிமாறவும்

புவனம் தர்மரட்ணம்

## உள்ளொன்று வைத்துப் புறமொன்று...

13ம் பக்கத்தொடர்ச்சி...

மாறாக, நேர்மையின்மை, மறைவிடத்தில் வாழ முற்படும் ஒரு மனநிலையைத்தான் எங்களுக்குள் தோற்றுவிக்கும். அத்துடன் நேர்மையின்மை கண்டுபிடிக்கப்பட்டு விடுமோ என்ற மனத்தகைப்பும் கவலையும் எந்த நேரமும் எங்கள் மனதுக்குள் நின்று எங்களை வாட்டியபடி இருக்கும். மனத்தகைப்பு அதிகமாகவுள்ள போது, இரத்த அழுத்தம், சலரோகம் போன்ற நோய்களுக்கான சாத்தியங்கள் அதிகரிக்கின்றன, என்கிறார்கள் மருத்துவர்கள்.

நாம் அடிப்படையில் நேர்மையானவராக இருந்தாலும்கூட, சில சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒரு நன்மையைப் பெறுவதற்காகப் பொய் சொல்லியிருக்கலாம். உண்மையிலேயே நாங்கள் எங்களுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் என்றால், நேர்மையில்லாமல் இருந்தமைக்காக நாங்கள் துன்பப்படுவோம். எனவே, உண்மையிலேயே நேர்மையின்மையால் எதையும் நாங்கள் பெற்றுக்கொள்ள முடியாது, இல்லையா?

பெற்றோர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும், கலாசாரத்தைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும் என்றெல்லாம் நாங்கள் எல்லோரும் பொதுவாகப் பேசுகின்றோம். கலாசாரம் எனும் போது, உணவு, மொழி, உடை, கவின்கலைகள், மத நம்பிக்கை போன்ற கண்ணால் பார்க்கக்கூடிய இயல்புகள்தான் எமது மனக்கண்ணின் முன் அதிகளவில் தோன்றுகின்றன. மாறாகஇ வாழ்க்கைப் பெறுமானங்கள்இ சிந்தித்தல் முறைஇ உறவுகளை அணுகும் விதம், எது சரி எது பிழை என்ற நம்பிக்கை,தொடர்பாடல் வகை, மாற்றத்துக்கான இயல்புடமை, முரண்பாடுகளை மதித்தல் போன்ற கண்ணுக்குத் தெரியாத இயல்புகள்தான் ஒரு நல்ல கலாசாரத்தின் அடிப்படையாக இருக்கின்றன என்பதை நினைப்பதற்குச் சிலவேளைகளில் நாம் மறந்து போகின்றோம்.

இப்போதெல்லாம், ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளில் ஒன்றான நேர்மை எங்களிடமிருந்து அருகிக் கொண்டு போவதை நாங்கள் பார்க்கக் கூடியதாக உள்ளது. இலங்கையில் நாம் வாழ்ந்தபோதுஇ எங்களுடைய வாழுமிடம், வேலை செய்யுமிடம் என்பவற்றை நினைத்தபடியோ அல்லது நிரந்தரமாகவோ மாற்றுவது என்பது சுலபமான விடயமல்ல. ஆனால் இங்கு அதற்கான வழிகள் இருப்பதுடன் குறித்த ஒருவரைச் சந்திக்காமல் தவிர்ப்பதற்கும் வழிகள் உள்ளன. அத்துடன் நம்பிக்கைத் துரோகத்துக்கு முகம் கொடுக்கும்வரைஇ அந்த வலியின் கொடுமை எப்படியிருக்கும் என்பது எவருக்கும் தெரிவதில்லை. அதனால், எங்கள் வீட்டுக்குள் வெள்ளம் வரும்வரை சூழ நிற்கும் வெள்ளம் பற்றி நாங்கள் அதிகம் கவலைப்படுவதில்லை. இவை யாவும் நேர்மையின்மை இங்கு அதிகமாவதற்கான காரணங்களாகவிருக்கலாம்.






பணத்தைக் கடனாக வாங்கிவிட்டு, காதல் எனச் சொல்லிப் பழகிவிட்டு, எப்போது அதிலிருந்து தப்பிக்க நினைக்கின்றோமோ, அப்போது எமது சுயநலங்களுக்காக, எந்தவித மனிதாபிமானமின்றிச் சட்டங்களைக் கூடத் துஷ்பிரயோகம் செய்வதற்கு நாம் பழகிவிட்டோம். குறித்தவர்களுடான தொடர்பை இல்லாமல் செய்வதற்காக, அவர்கள் எம்மைத் துன்புறுத்துகிறார்கள் எனக் குற்றம் சாட்டிஇ அவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளல் ஆகாது எனப் பொலிஸ் மூலம் எச்சரிக்கைச் செய்தி அனுப்பக்கூடக் கற்றுக்கொண்டோம்.

உடல் பலமும் மனப்பலமும் உள்ள போது மனச்சாட்சியை மேவலாம். மறைந்து வாழலாம். ஆனால், ஒரு நாளைக்கு நாம் விதைத்ததை அறுவடை செய்ய வேண்டிய கட்டம் கூட எம் வாழ்வில் வரலாம். மாதவியுடன் களிப்பான வாழ்வை வாழ்ந்து விட்டு, ஊடல் வந்ததும் பிரிந்து கண்ணகியிடம் திரும்பவும் சென்ற கோவலன் மாதவியைச் சலதி (பொய் பேசுபவள்) என வைகின்றான். அப்படி அவளைப் பொய்க் குற்றம் சாட்டியதால்தான் அவனும் பொற்கொல்லனால் ஏமாற்றப்பட்டானா எனக் கூட மனதில் கேள்வி எழுகின்றது. இல்லையா?

எனவே, எங்களுடைய பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக, நேர்மையாக இருப்பதற்காக, நாங்கள் செய்த தவறுகளை, நேர்மையின்மையை, நம்பிக்கைத் துரோகங்களை ஒத்துக்கொண்டு, எங்கள் செய்கைகளால் மன வலியுற்ற எமது உறவுகளுக்கு இன்றே ஆவன செய்வது நல்லதல்லவா?

உசாத்துணை:
Radical Honesty. "Brad Blanton, Ph. D." Radical Honesty. Accessed November 15, 2014. http://www.radicalhonesty.com/about/who-we-are/brad-blanton/.WikiHow. “How to Practice Radical Honesty.” WikiHow. Accessed November 15, 2014. http://www.wikihow.com/Practice-Radical-Honesty.



MAYRAA

Happy Pongal

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
பொங்கலைமுன்னிட்டு உங்களுக்காக
50% வரை மலிவு விற்பனை!



Rheinische Str.71a/44137 Dortmund Tel:+49 231 5320421-0
அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்









# காதலிலும் தாயின் பரிவு!

## அம்மா என்றழைக்க நீ இங்கு வேண்டும்

**இஞ்சாருங்கோ!** ஒருக்கால் வந்திட்டுப்போங்களேன்! ஐயா ஒருக்கா இவனைப்பிடியுங்கோ நான் சாமி கும்பிட்டு வாறேன். குஞ்சன் ஏனடா வேலைக்கு போவில்லையே வருத்தமென்றால் சொல்லிப் போட்டு நில்லுங்கோவேன்! குமார் என்னப்பா வாயுக்க என்ன முட்டையே! படத்திற்கு போவதா இல்லையா என்பதைச் சொல்லித் தொலையுங்களேன்.

இப்படித் தங்கள் தங்கள் கணவன்மாரை பலவிதமாக அழைப்பார்கள் பெண்கள்.

இதில் நீங்கள் நிச்சயம் ஒரு வகையாக இருப்பீர்கள் இதில் எதுவும் இல்லை என்றால் நாதா! நந்தவனத்தில் பூக்கொய்து கொண்டு வரச்செல்கின்றேன் நாதா விடைகொடுங்கள் என்ற பாட்டன்காலத்து ஆளாகத்தான் இருப்பீர்கள்.

இங்கே ஒவ்வொரு அழைப்பிற்கும் ஒவ்வொருவிதமான கணவன் மனைவி உறவு முறைகள் அமைந்து இருக்கிறது.

கணவனை நண்பனாக,இறைவனாக,தலைவனாக, தந்தையாக, பிள்ளையாக இப்படி பலமுறைகள். இதில் பிள்ளையாகக்காணும் முறையே இன்று நாட்டில் அதிகம்.

எனக்கு அவரோடு சேர்த்து ஐந்து பிள்ளைகள். என்ன என்றாலும் அவருக்கு நான் வேண்டும். மூக்கைப்பிடித்தா வாயை ஆவண்ணக் கூடத் தெரியாது! நான் பக்கத்தில் இல்லை என்றால் அவருக்கு ஒன்றும் செய்யத் தெரியாது. இப்படித்தான் பக்கத்து வீட்டு பார்வதி இவராலை எங்கள் வீட்டுப்படி மிதிச்சு ஆறுவருடமாச்சு. ஒருநாள் அவசரமாக வீட்டில் தேயிலை முடிஞ்சுது கொஞ்சம் இருந்தால் கொட்டித் தாங்கோ என்று என்னுடைய அவரிடம் கேட்டிருக்கிறாள். இவரும் அவ வீட்டில் இல்லை வந்தபின் கேட்டு வாங்கு என்று சொல்லிவிட்டு கதவைச் சாத்திவிட்டார். பார்வதிக்கு எப்படித் தெரியும்? இந்த மனுஷனுக்கு வீட்டில் ஒரு தேயிலை இருக்கும் இடம் கூடத்தெரியாது என்று. அவள் நினைத்துக்கொண்டாள் மனைவிக்கு தெரியாமல் கொடுத்தால் அவள் வந்து கத்துவாள் என்றுதான் தேயிலை கொடுக்கவில்லை என்று. அந்தக் கோபத்தில்தான் அவள் ஆறுவருடம் இந்தப் படியும் மிதிக்கவில்லை.

.

இப்படி தன்னுடைய அவருக்கு ஒன்றும் தெரியாது தெரியாது என்று சொல்வது கூட கணவனில் உள்ள வெறுப்பில் என்று எண்ணி விடாதீர்கள். இதுவும் ஒரு வகைக் காதல்தான். இது கணவனை காதலனாக இன்றிப் பிள்ளையாகக் காணும் காதல். இந்த உறவு முறையை எவ்வளவு அழகாக வெளிப்படுத்துகிறார்கள் கவிஞர்கள்.

அடித்தாலும் அணைத்தாலும் நான் உன்தன் பிள்ளை
நான் உன்தன் பிள்ளை! அம்மா என்றளைக்க
நீ இங்கு இல்லை- மடி மீது விளையாடும்
சேயாக வேண்டும் - நானாக வேண்டும்

இப்படியாக கணவன்-மனைவி உறவில் பிள்ளயாக தாயாக தந்தையாக நின்று காதலை வெளிப்படுத்துவதைக்காணலாம்.

நான் ஒரு குழந்தை
நீ ஒரு குழந்தை
ஒருவர் மடியிலே ஒருவரடி

கண்ணன்வருவான்
கதைசொல்லுவான்
வண்ணவண்ணத் தொட்டில்கட்டித்
தாலாட்டுவான்
குழல் எடுப்பான்
பாட்டிசைப்பான்
வலம்புரிச் சங்கெடுத்துப்
பால் ஊட்டுவான்
எனக்கென்றும்
உனக்கென்றும்
உறவு வைத்தான்...
கண்ணன் ஒரு கைக்குழந்தை
கண்கள் சொல்லும் பூங்கவிதை

தாலாட்ட வருவாளே!
பூ மஞ்சம் தருவாளே!

அன்பே அன்பே!
நீ என் பிள்ளை
**தேகம் மட்டும் காதல் இல்லை**
நீ வாழும் காலம் தோறும்
என் ஜீவன்
உன்னைத் தேடும்

தாலாட்டுப்பாடி தாயாக வேண்டும்
தாளாத என் ஆசை சின்னம்மா
வெகு நாளாக என் ஆசை சின்னம்மா

ஏன் கணவன் மனைவி ஆனதிற்குபின்பு மட்டும்தானா? இளைமைக் காலத்தில் காதல் அரும்பும் வேளையிலும் ஏன்! குழந்தைப் பருவத்திலே, கட்டி அணைக்கத் துடிக்காத அந்தப் பருவத்திலும் கட்டி வெல்லத்தை ஊட்டி மகிழும் சிறுவர் சிறுமியரைப் பார்த் திருக்கிறோம். தன் விருப்புக்குரியவருக்கு வீட்டில் இருக்கும் மிட்டாயை எவருக்கும் தெரியாமல் எடுத்துச்சென்று அவருக்கு கொடுக்கும் அன்பை கண்டிருக்கிறோம். ஒரு கல்லூரியில் பன்னிரண்டு வயதுச் சிறுமியின் காதல் கடிதம் பிடிபட்டது.

அதில் எழுதியிருந்தது. இதுதான்.

ஏன் நேற்று மழையில் நனைந்து கொண்டு பாடசாலை முடிய வீடுசென்றீர்கள். இன்று அதுதான் இந்த இருமல்! கடையில் சாப்பிடவேண்டாம், வருத்தம் வருமாம்.. சைக்கிள் இறுக்கி ஓடாதீர்கள் முக்கியமாக டபிள்வைத்துக் கொண்டு உளக்காதீர்கள் எனக்கு உங்களைப் பார்க்க நெஞ்சுவலிக்கிறது. ஆண்டவனைக் கும்பிடுங்கள். வகுப்பில் நீங்கள் பின் வாங்கில் இருந்து படிப்பது எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. உங்களுக்கு பக்கத்தில் இருப்பவர்கள் உங்களைப் படிக்க விடமாட்டார்கள்.

இதுதான் அந்தக்கடிதம் இதில் காதலா? தாய்ப் பாசமா மேல் ஓங்கி நிற்கிறது.கையெடுத்துக் கும்பிடவைக்கிறதே! இப்பாசம்.

இப் பாசத்தை. இனி மேலே உள்ள பாடல்களில் பாருங்கள்.

**காதல் என்பது உடலுக்குள் இருந்தாலும் அது உயிருடன்தான் உறங்கு கின்றது. அன்றும் இன்றும் பாடல்களில் அங்கும் இங்குமாக இந்த தாய் உணர்வு இருப்பதை காணலாம்.**






மாதம்தோறும் முதல் வாரத்தில் வெற்றிமணி வெளிவருகின்றது

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்



**2015 உங்களுக்கு எப்படி!**

# நாளை நமதே! நம்பிக்கை தான் வாழ்க்கை!

**உங்கள் வாழ்வு வளமாக!**
**முதல் படியுங்கள்.**
**பின் முயலுங்கள்!**

சேவியர்


அலை வேகமாக ஓடி வருகிறது அதை எதிர்கொண்டு ஓடிப் போகிறான் ஒரு சிறுவன். அலை அவனைப் புரட்டிப் போடுகிறது. சத்தமாய்ச் சிரிக்கிறான். உடலெங்கும் உப்புத் தண்ணீர். உள்ளே ஓடிய அலை மீண்டும் அவனைத் துரத்துகிறது, அவன் உற்சாகக் கூக்குரலுடன் அதை எதிர்கொண்டு ஓடுகிறான். ஒரு பந்தயக் குதிரையை அடக்கி விடும் முனைப்புடன் அலையின் முதுகில் தாவுகிறான். மீண்டும் விழுகிறான், எழுகிறான், ஓடுகிறான். அலைகளோடான அவனுடைய விளையாட்டு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

வாழ்க்கையும் இந்த அலை விளையாட்டில் அடங்கி விடுகிறது. விழுகின்ற மறு கணத்தில் எழுந்து ஓடும் சிறுவனைப் போல வெற்றியாளர்கள் தங்களுடைய பயணத்தை மீண்டும் மீண்டும் அலைகளோடு தொடர்கிறார்கள். அழுது கொண்டல்ல, உற்சாகக் கூக்குரலுடன். முயற்சியின் வெற்றிக் கணத்தில் அவர்கள் அந்த அலைகளைத் தாண்டி உள்ளே செல்கிறார்கள். அப்போது கடல் தனது பிரம்மாண்டத்தை அமைதியாய் அவர்களிடம் சமர்ப்பித்து விடுகிறது. அலைகளைக் கண்டு அச்சத்துடன் ஒதுங்கி விடுபவர்கள் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டு வீடு திரும்புகிறார்கள். மூழ்குபவர்கள் மட்டுமே முத்தெடுக்கிறார்கள்.

நதி தனது பயணத்தில் எதிர்படும் எதைக் கண்டும் அஞ்சுவதில்லை. முட்கள் கிழித்து விடுமென கலங்குவதில்லை. ஈரக் கால்களில் பாறைக் கற்கள் மோதுமே என தயங்குவதில்லை. அஞ்சாமல் முன்னேறும் போது கூர்மையான கற்கள் கூட எதிர்ப்பு முட்களை விரைவிலேயே உதிர்த்து விட்டு கூழாங்கற்களாய் மாறுகின்றன. ஓடும் நதி அருவியில் விழுகிறது. விழுகின்ற இடத்தில் காலொடிந்து கிடப்பதில்லை நதி. அதன் ஆக்ரோஷமே அந்த வினாடியில் தான் ஆரம்பமாகிறது.

தண்ணீருக்குப் பயந்து நீச்சலை நிராகரிப்பவர்களும், விழுந்து விடுவோமோ எனும் அச்சத்தில் சைக்கிளைத் தொடாதவர்களும் பயணத்தைத் தொடர முடியாது. அவர்களுடைய வாழ்க்கை காலொடிந்த கிணற்றுத் தவளையாகவே நொண்டியடிக்கும். அச்சம் உங்கள் கால்களைப் பிடித்து இழுக்கும் போது, நம்பிக்கை எனும் கைகள் கொண்டு வெளிச்சத்தை இழுத்து எடுங்கள். அச்சம் என்பது புதை குழி, நம்பிக்கை என்பது விதை குழி ! விளக்கைக் கொளுத்தி குடத்தால் மூடி வைத்தால், வெளிச்சம் வெளிவருவதும் இல்லை. விளக்கு தொடர்ந்து எரிவதும் இல்லை.

உங்கள் மீதான நம்பிக்கையே உங்கள் வெற்றிக்கான முதல் சுவடு. கடவுள் படைப்பில் நீங்கள் தனித்துவமானவர் எனும் நம்பிக்கை முதலில் இருக்க வேண்டும். உங்களுடைய திறமைகளின் மேல் நீங்கள் வைக்கும் நம்பிக்கை உங்களை வழிநடத்தும். எத்தனை அடர்த்தியான இருட்டையும் ஒரு சின்ன வெளிச்சம் விரட்டி விடும். இருட்டு ரொம்ப அடர்த்தியாய் இருக்கிறதே என விளக்கு அழுவதில்லை. எத்தனை இருட்டுகள் வந்து மோதினாலும் ஒரு வெளிச்சம் அணைந்து போவதும் இல்லை. சோதனைகளின் பேரணியை விட நம்பிக்கையின் ஊரணியே முக்கியம்.




ஒரு சிற்பி இருந்தான். ஒரு முறை அவனிடம் சென்ற ஒருவர் சிற்பத்தின் மூக்கு சரியில்லை, காது சரியில்லை என குறை கூறிக்கொண்டே இருந்தார். சிற்பியோ எதையும் காதில் வாங்காமல் செதுக்குவதிலேயே குறியாய் இருந்தார். குறை சொன்னவருக்கு கோபம் வந்து விட்டது. "இவ்வளவு சொல்றேன் பதிலே சொல்லலையே" என்றார். சிற்பி சொன்னார், "உனது வேலை குறை சொல்வது, எனது வேலை சிலை செய்வது. அவரவர் வேலையை அவரவர் சிறப்பாய் செய்கிறோம். அவ்வளவு தான்". குறை சொன்னவர் வந்த வழியே போனார்.

சிற்பி தன் மேல் வைத்த நம்பிக்கை சிலையில் தெரிந்தது. அடுத்தவர்கள் எதிர்பார்ப்பது போல சிலையை வடிவமைக்க நினைத்தால் தோல்வியே மிஞ்சும். அல்லது சிலை சிற்பிக்குப் பிடிக்காமல் போய்விடும். சிற்பியின் சிலை பிறருக்குப் பிடிக்காமல் போவது சகஜம், ஆனால் சிற்பிக்கே பிடிக்காமல் போவது துயரம் !

சிலை என்பது வாழ்க்கை. அதைச் செதுக்கும் சிற்பி நாம். நமது வாழ்க்கையை நாம் தான் செதுக்க வேண்டும். அடுத்தவர்களுடைய பாராட்டுக்காகவோ, விமர்சனத்துக்காகவோ நமது வாழ்க்கையை மாற்றத் துவங்கினால் தோல்வி அங்கே ஆரம்பமாகிவிடும். அடுத்தவர்கள் நமது வாழ்க்கைக் கப்பலை ஓட்டும் சுக்கானாகவோ, நமது பயணத்தை நிறுத்தும் நங்கூரமாகவோ ஏன் இருக்க வேண்டும் ? நம்பிக்கை மனிதர்கள் தங்கள் வாழ்க்கைப் பட்டத்தின் நூலை தங்கள் கைகளில் தான் வைத்திருப்பார்கள்.

தொடர்ச்சி 17ம் பக்கம்...




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## நாளை நமதே

.....16ம் பக்கத் தொடர்ச்சி

நம்பிக்கை நீர்த்துப் போகும் போது தான் அடுத்தவர்களோடான ஒப்பீடை செய்யத் துவங்குகிறது மனம். அடுத்தவன் என்னை விட உயர்வானவன் என நினைப்பது மட்டுமல்ல, அடுத்தவன் தன்னை விடத் தாழ்ந்தவன் என நினைப்பது கூட தவறான அணுகுமுறையே. ஒன்று தாழ்வு மனப்பான்மை, இன்னொன்று அகந்தை மனப்பான்மை. இரண்டுமே நமக்குத் தேவையில்லை.



ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணாதிசயம், ஒவ்வொரு திறமை, ஒவ்வொரு வாழ்க்கை முறை. அரளிச் செடியில் ஆம்பல் முளைப்பதில்லை. வெள்ளரிக் கொடியில் திராட்சை விளைவதில்லை. ஒவ்வொரு பூவும், ஒவ்வொரு கனியும் அதனதன் இயல்பிலிருந்தே விளைகின்றன.

புல்லாங்குழலுக்குத் தான் துளைகள் தேவை, மிருதங்கத்துக்கு அல்ல. ஐயோ எனக்கு துளைகள் இருக்கிறதே என புல்லாங்குழல் புலம்பலாமா ? அல்லது எனக்குத் துளைகள் தான் வேண்டும் என மிருதங்கம் முரண்டு பிடிக்கலாமா ?

அடுத்தவர் இயல்பில் நுழைய முயன்றால் தோல்வியே மிஞ்சும். நீரில் வாழ்வது மீனின் இயல்பு, நீரில் தான் வாழ்வேன் என மான்கள் நினைத்தால் அழிவு. எனவே அடுத்தவரோடு உங்களை ஒப்பீடு செய்யாதீர்கள். உங்களை நீங்களே அங்கீகரியுங்கள். நீங்கள் எப்படி இருந்தாலும் அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். காலையில் கண்ணாடியில் தெரியும் உங்கள் முகம் உங்களுக்கு உற்சாகத்தைத் தந்தால், அன்றைய தினம் முழுவதும் உங்களுடைய பயணம் இனிமையாய் இருக்கும்.

அனுபவம் ஆசான் என்பார்கள் உண்மை தான். அதற்காக ஒவ்வொரு தோல்வியையும் அனுபவித்துத் தான் கற்க வேண்டுமென்பதில்லை. தனது தோல்விகளிலில் இருந்து பாடம் கற்பவன் புத்திசாலி. அடுத்தவர் தோல்விகளிலிருந்து பாடம் கற்பவர் அதி புத்திசாலி. தோல்விகள் உங்களுக்குப் பாடங்கள் தான் சொல்லித் தரவேண்டுமே தவிர, பயங்களை அள்ளித் தரக் கூடாது. தோற்காத மனம் வெற்றிகளை ரசிப்பதில்லை. வெயிலே இல்லாத தேசத்தில் நிழலுக்கு என்ன மரியாதை ?

வெற்றி என்பது பொருளாதாரத்தின் எல்லைகளை விரிவாக்குவதோ, புகழின் வெளிச்சப் பிரதேசங்களை அதிகரிப்பதோ மட்டுமல்ல. அது இதயங்களைச் சம்பாதிப்பது. தங்கத்தால் மாளிகை கட்டி வைத்தாலும் ஆளில்லாத தீவெனில் அதில் என்ன பயன் ? அரவணைக்க கரங்கள் இல்லாத தேசத்தில் நீங்கள் கோடி வரம் பெற்றிருந்தும் என்ன பயன் ? நீங்கள் அன்பு செய்யப்படுகிறீர்கள் என உணர்வது தான் உலகிலேயே மிகப்பெரிய ஆனந்தம். அந்த ஆனந்தத்தை நீங்கள் பிறருக்குக் கொடுக்கத் தயங்காதீர்கள். நம்மை எல்லோரும் அன்பு செய்ய வேண்டும் என விரும்புவதில் தவறில்லை, ஆனால் அதற்கு முன் நாம் பிறரை அதை விட அதிகமாய் அன்பு செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்பது தான் முக்கியம். நாம் விதைக்காதவற்றை அறுவடை செய்ய முடிவதில்லை.




முக்கியமாக, வாழ்க்கையின் வெற்றி என்பது சிகரத்தை அடைவதில் அல்ல. அந்த சிகரத்தை நோக்கிய பயணத்தில் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பயணத்தில் கிடைக்கும் சுவாரஸ்யமான மலர்களின் சங்கமமே வெற்றி எனும் மாலை. இலக்கை நோக்கிய ஓட்டமே ரசிக்கப்பட வேண்டிய விஷயம். அப்போது தான் ஒவ்வொரு கணமும் உங்களை மகிழ்வுடன் பயணிக்க வைக்கும். அந்தப் பயணத்தில் சின்னச் சின்ன இலட்சியங்களை உருவாக்கி உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள். மைல் கற்கள் என்பவை நீங்கள் எவ்வளவு தூரம் பயணித்தீர்கள் என்பதைச் சொல்லும் அடையாளம் மட்டுமே.

கடைசியாக ஒன்று. மரம் மேலே எழும்ப எழும்ப வேர்கள் பூமியின் ஆழத்தில் போய்க்கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் அது தடம் புரளாமல் வலுவாய் நிற்கும். அதே போல நாம் எவ்வளவு உயரம் செல்கிறோமோ, அவ்வளவு தூரம் பணிவையும், தாழ்மையையும் மனதில் ஆழமாய்க் கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் கர்வத்தில் கரை புரளாமல் இருக்க முடியும். வலிமை என்பது எளிமையில் என்பதை உணருங்கள். உலகின் வலிமையான நபர் யார் என என்னைக் கேட்டால் அன்னை தெரசா என்பேன். எந்த ஒரு மெல்லிய மலரைக் கொண்டும் வீழ்த்தி விட முடிகின்ற பலவீனம் அவருடைய உடல். ஆனால் ஆர்ப்பரித்துப் பொங்கும் கடலாய் அவரது பிறரன்பு. அதுவே அவரது பலம். எத்தனை களம் புரளும் செந்நீரும் தராத வெற்றியை அன்பின் ஒரு துளிக் கண்ணீர் தர முடியும் என்பதே அன்பின் வலிமை.

அறிவுரைகள் சொல்வது எளிது. அறிவுரைகளின் படி வாழ்வது இனிது !
இனிய வாழ்த்துகள். !










அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

## நிகழ்வின் நிழல்கள்







## யேர்மன் சிறுவர்களும் கொண்டாடிய தீபாவளி!

கெம்பன் (Kempen) நகர சபை வியர்சன் (Kreis Viersen) வட்டார சபை உறுப்பினர் திரு.ஜெயரட்டினம் கனீசியஸ் (Jeyaratnam Caniceus) அவர்களின் அனுசரணையுடன் 24.10.14 அன்று நகரசபை மண்டபத்தில் தீபாவளி கலைநிகழ்ச்சிகளுடன் மிகவும் கோலாகலமாக இடம் பெற்றது.

திரு.ஜெயரட்டினம் கனீசியஸ் அவர்களுடன் இணைந்து கெம்பன் நகர முதலாவது உதவிமேயர் குத்து விளக்கேற்றிவைக்க திரு.தேவகுருபரன் அவர்களின் இசைமாலையுடன் பி.ப. 15.30 மணியளவில் ஆரம்பமாகிய இவ்விழாவில் நூற்றுக்கு மேற்பட்ட பல்லின பல்மத மக்களுடன் யேர்மன் மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

யேர்மனிய சிறார்கள் கரங்களில் விளக்கு ஏந்தி ஆடிய நடனம் அனைவரின் கவனத்தையும் ஈர்தது. கிறீபீல்ட் நடன ஆசிரியை திருமதி ரஜனி சத்திய குமார் அவர்களின் மாணவிகள்ளின் பரதநாட்டிய நடன நிகழ்வுகள் அனைத்து மக்களுக்கும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது

# வலிக்கும்! ஆனால் வலிக்காது!!

குழந்தைகள் விளையாடும் போது கவனித்திருக்கிறீர்களா ? கீழே விழுந்து அடிபட்டாலும் அதை வெகு இயல்பாய் எடுத்துக் கொண்டு மீண்டும் விளையாட்டைத் தொடரும். ஆனால் அடிபட்ட இடத்தில் கொஞ்சம் இரத்தம் கொட்டினால் உடனே அழ ஆரம்பித்துவிடும்.

சில வேளைகளில் தலை வலிக்குமோ என நினைத்தால் தலை வலிக்க ஆரம்பிப்பதை நம்மில் சிலரும் உணர்ந்திருக்கக் கூடும். அப்படியானால் வலிக்கும், மனதுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது அல்லவா ?





வலிக்கும்

இதைத் தான் விரிவான ஆராய்ச்சியாக நடத்தியது ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகம். இதன் முடிவு வியப்பளிக்கிறது.

அதாவது அதிகமாய் வலிப்பதும், குறைவாய் வலிப்பதும் எல்லாமே நமது மனது நினைப்பதைப் பொறுத்து தான் அமைகிறது என்பதே அது.

இந்த ஆராய்ச்சிக்காக கைகளில் அடிபட்டுக் காயமடந்தவர்கள் பலர் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களுடைய கைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்ணாடி மூலமாக அவர்களுக்குக் காட்டினர். இந்தக் கண்ணாடிகளில் சில கையை வீக்கமடைந்திருப்பது போலக் காட்டின, சில வீக்கமான கையை சாதாரண கையாய் காட்டின.

இந்த காட்சிப் பிழைகள் வலியில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டு வந்ததை ஆராய்ச்சியாளர்கள் ஆச்சரியத்துடன் பதிவு செய்து கொண்டனர்.

கை வீக்கம் அதிகமாய் இருப்பதைப் பார்த்தவர்களின் வலி நரம்புகள் தூண்டப்பட்டு அதிக வலி அடைந்தனர். கை வீக்கம் குறைவாய் உணர்ந்தவர்களின் வலி பெருமளவு குறைந்து விட்டது.

இந்த ஆராய்ச்சியின் மூலம் மனதுக்கும் வலிக்கும் இடையேயான நுட்பமான இணைப்பு நிரூபிக்கப்பட்டுள்ளது.

மனதில் உறுதி வேண்டும் என சும்மாவா சொன்னார்கள் ?






பண்டிதத் கார்த்திக்

கருமாரி அம்மன் துணை

முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தைக் கணிப்பார், அத்தோடு கைரேகையும் பார்க்கப்படும்.

முகம் பார்த்தல் - கை பார்த்தல்

வியாபாரங்கள், எதிரிகள், உடல்நிலை, வேலை, குழந்தையின்மை, திருமணம், பணம், குடிபோதை, காதல், விவாகரத்து, கண்திருஷ்டி, குடும்ப ஒற்றுமை, படிப்பு, வாகனப்பொருத்தம், பிரச்சினையாவிற்கும் தீர்வுகாணப்படும்.

மந்திரம், தந்திரம், காத்துக் கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்.





பேசும் மொழி: தமிழ்

வாரத்தில் 7 நாட்களும் 10.00 முதல் 20.00 வரை சந்திக்கலாம்

private & confidential

HEINRICHSTR 26 | 44137 DORTMUND | GERMANY | + (0) 49 15212 921733 | + (0) 49 15216260484





திருக் கல்யாண மாலை

திருமணச் சேவை!

ஐரோப்பா தழுவிய சேவை!

ஒருத்தனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன்
எப்போ! எங்கோ! முடிவாக இருக்கும்
முடிவை திருமணமாய் முடிக்க
நாம் உதவுவோம்.

அ.கீதன்
Schwerte, Germany.
e.mail: geethan@hotmail.de

Tel: phone 0049 2304 250 058 7, 0049 176 3065 6695



AMERICANADA HOLIDAYS



உலகம் எங்கும் வலம் வர
குறைந்த விலையில் தரமான
விமானச்சேவைகளின்
விமானச்சீட்டுக்களைத்
தருகின்றோம்.

JESSICA SUGIRTHAN
ALFRED FAUST STR 28
28277 BREMEN

TEL: 0421-1654404
MOBIL: 0176-89019655


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# தெய்வத் திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டியின் சமூகப் பணிகள்

கு.கோபிராஜ் M.A சண்டிலிப்பாய் வடக்கு



கிளிநொச்சியில் அறக்கொடைவிழா – 2004



கிளிநொச்சி அரசாங்க அதிபருடன் சிவத்தமிழ்ச்செல்வி

எல்லாம் வல்ல தெல்லிப்பளை துர்க்கை அம்பாளுடன் இரண்டறக் கலந்து விட்ட எங்கள் அம்மா துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெரும் பணியை நோக்கும் போது 1982 ம் ஆண்டு மாசி மாதம் 3ம் திகதி துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை 09 பெண் குழந்தைகளுடன் ஆரம்பித்து வழிபாடு, பஜனை, யோகாசனம், கோலம் போடுதல், மாலை கட்டுதல், தலைமைத்துவம், குடிசைக் கைத்தொழில் போன்ற இந்துப் பண்பாட்டு ஒழுக்கத்துடன் வளர்த்து வந்தார்.

ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்ட அதேவேளை நோயாளரை நேசிப்பதிலும் அன்னை அக்கறையோடு இருந்து நோயாளருக்கு ஆறுதல் வார்த்தை கூறல் , சத்திரசிகிச்சை , செயற்கைகால் பொருத்துதல்,புற்றுநோயாளர் போன்றவர்களை நேசித்ததுடன் உதவிகளையும் வழங்கி வந்தார். அத்துடன் யாழ் போதனா வைத்தியசாலை , தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை போன்றவற்றுக்கு பல உதவிகளையும், உபகரணங்களையும் வாங்கி கொடுத்தார்.

இளம் வயதில் கணவனை இழந்து குடும்பச்சுமையோடு உள்ள இளம் விதவைகளுக்கு மாதா மாதம் உதவி வழங்குவார். அத்துடன் ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு கற்றல் உபகரணங்களை அன்னை மாதந்தோறும் வழங்கினார்.

அன்னதான பணியாக செவ்வாய் , வெள்ளிக் கிழமைகளில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும் வெள்ளிக்கிழமைகளில் தேவஸ்தானத்திலும் அன்னதான பணி இடம்பெறுவதை அவதானிக்கலாம். யுத்தகாலப் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் தேவஸ்தானத்தில் தஞ்சமடைந்தனர். தேவஸ்தான வீதியில் சரஸ்வதி மண்டபத்தின் அருகில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு உடை , வகுப்பு நாட்களில் சிற்றுண்டி , தேநீர் வசதிகள் செய்து கொடுக்க ஊக்குவித்தார்.

பிரதிபலன் கருதாது அம்மையார் சொற்பொழிவு ஆற்றியதுடன் சமய மாநாடுகள் இலக்கிய மாநாடுகள் ஈழத்தில் அதிகம் நடைபெற அன்னை காரணமாக இருந்து தமிழையும் சைவத்தையும் காத்தார்.

துர்க்கைஅம்பாள் ஆலயத்தில் சமயமரபு மாறாது இருக்க சிவாச்சாரியாரை அமர்த்தி மந்திரம் , கிரியை , பாலனை , சாந்தி போன்றவற்றை அமுலாக்குவதில் அன்னைக்கு நிகர் அன்னையே ஆவார்.

யாழ்குடாநாட்டின் 1995 இடப்பெயர்வின் போது அந்தணக்குடும்பங்களுக்கு உதவும் பெருங்கருணையுடன் பல நிதி உதவிகளையும் சரீர உதவிகளையும் செய்து அந்தணர் ஆன்மீகப்பணிக்கு தொண்டாற்றினார். அத்துடன் சைவ சித்தாந்த ஆய்வு நூலகம் , சிறுவர் இல்லம் , முதியோர் இல்லம் , அறக்கொடை நிதியம் போன்றன சிறப்பாக முன்னெடுக்கப்படுவதைக் காணலாம்.

இதனைவிட ஈழத்துக்கு அப்பால் லண்டன் , மலேசியா , இந்தியா , சிங்கப்பூர் , பிஜிக் தீவு போன்ற தமிழர் வாழும் பகுதிகளுக்கு சைவ பிரச்சாரம் மேற்கொள்ள அன்னை சென்றார். நாவலர் அந்நியரால் அழிக்கப்பட்ட சைவ சமயத்தை நிலைநாட்ட அரும்பணியாற்றியதுடன் சிவத்தமிழ் செல்வியும் நாவலர் வழியில் தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

எதிர்வரும் 07.01.2015 அன்னையின் 90 வது பிறந்தநாள் ஆகும்.சிவத்தமிழ்ச்செல்வி அமரத்துவம் அடைந்தாலும், அவரது சேவையும், நோக்கும் இந்தமண் உள்ளவரை செழித்து நிற்கும். யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அவரது பிறந்தநாள் நிகழ்வும், அறக்கொடை நிகழ்வும் சிறப்பாக நடைபெற உள்ளது. அன்றைய தினம் புலம்பெயர் வாழ் தமிழர்கள் அன்னையை நினைவுகூர்ந்து பிராத்தனைகளிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபடவேண்டும்.

படங்கள் நன்றி:சிவத்தமிழ்

## அம்மன் அருள்பெற்ற மகள்

இன்றெம தன்புச் சிவத்தமிழ்ச் செல்வி
எம்முடன் வாழ்ந்திருந்தால்
குன்றுயர் விளக்கின் அகவைதொண் ணூறைக்
கொண்டாடி மகிழ்ந்திருப்போம்!

ஆயினும் என்ன அன்னையின் நினைவை
யார்தனும் மறந்ததில்லை
தூயவர் துர்க்கா துரந்தரி சுடராய்த்
தொடர்ந்தே வாழுகின்றார்!

நல்லறி வென்ன நாநல மென்ன
நாமகள் போல்நடந்தார்
சொல்லரும் நல்லை நாவலர் பெருமான்
தொண்டுகள் துணிந்துசெய்தார்!

மாசறு சைவத் தமிழ்மகள் வறிய
மக்களின் வாழ்வுயர
தேசுயர் தொண்டுகள் பற்பல செய்தே
தெய்வத்தைப் போல்திகழ்ந்தார்!

வாழிய தெல்லிப் பழைநகர்வளரும்
மாபுகழ் துர்க்கை யம்மன்
வாழிய அம்மன் அருள்பெற்ற மகளும்
வாழிய வாழியவே!

கவிஞர் வி. கந்தவனம்






சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாவின் போது (07.01.2005) முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்,பேராசிரியர் அ.சண்முகதாஸ்,இன்றைய தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ,சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் ,அவர்களுடன் சிவத்தமிழ்ச்செல்வி.

Akchaya Digital Photography& Decoration
Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration
உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.
Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474








அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்







அனேகமாக கொட்டாஞ்சேனை பஸ் ஸ்ராண்டில் ஏதாவது நொண்டிச் சாட்டுகள் சொல்லிக் காசு கேட்டபடி நிற்பான் அவன். காசு கிடைத்ததும் குடிப்பதற்காகச் சென்று விடுவான்.
அன்றும் அப்படித்தான்.
மருதானைக்குப் போக பஸ்சுக்குக் காசு வேண்டும் என்றான்.
தரலாம், இதிலே நின்று கொள் என்றேன். என் கைகளைப் பார்த்தபடி நின்றான்.
மருதானை பஸ் வந்தது. பஸ்சினுள் ஏறிக் கொள், நடத்துனரிடம் காசைக் குடுக்கின்றேன் என்றேன்.
மெதுவாக நழுவி விலகினான்.

# காதோடு காதாக!



கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்



## கொடுத்து வைத்தவன்

பொன்னர்:

"குமாரை நான் மருமகனாக அடைய நான் கொடுத்து வைத்தவன்". எண்டு நீ பெருமையாகச் சொல்லிக் கொண்டுதிரிகிறாய். ஆனால் குமார் படுகிற அவமானம் உனக்குத் தெரியாது.
கனகர்:

நீ கொடுத்துவைச்சது எண்டு சொல்ல சனம் எவ்வளவு சீதனம் வாங்கினான் எண்டு குமாரைக் குடையுதுகளாம்.

### எங்களுக்கு எவரும் காதுகுத்தத்தேவை இல்லை

பொன்னர்:

முன்னர் ஆண்பெண் என இருபாலாரும் காதுகுத்தி நகைஅணிந்தனர். காது குத்தி நகை அணிவதைப் பெண்ணினம் தொடர்கின்றது. ஆனால் காதுகுத்துவதை நிறுத்தியிருந்த ஆண் இனம் இப்பொழுது காது குத்தி நகை அணிகிறது.
என்ன நடக்கிறது எண்டு ஒன்றும் விளங்க வில்லை.

கனகர்:
காது குத்தினால் அறிவுத்திறன் அதிகரிக்கும் என்று அக்குபஞ்சர் சிகிச்சை சொல்கிறது. இந்த அடிப்படையில்தான் முன்னம் எல்லோரும் காது குத்தினர்.
பின்னர் ஆண்கள் தங்களுக்கு அறிவு அதிகம் எங்களுக்கு எவரும் காதுகுத்தத்தேவை இல்லை எண்டு விட்டுவிட்டார்கள்.
இப்பொழுது காது குத்தாததால் வந்த வினையை உணர்ந்து காது குத்தி நகை அணிகிறார்கள்.
பொன்னர்:
கனகர் அண்ணை! எனக்கு ஏற்கனவே காதுகுத்தியாச்சு!




திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது
விழா ஒழுங்கமைப்பு K S இல் நிச்சயிக்கப்படுகிறது!




அழைப்பிதழ்கள் அன்பளிப்பு பொருட்கள் மணவறை
பலூன் அலங்காரம் மண்டப அலங்காரம், ஐயர் ஒழுங்கு,
மங்களவாத்திய ஒழுங்கு பூமாலை ஒழுங்கு,
மணமகள் அலங்காரம் புகைப்படம் வீடியோ,
ஒளி ,ஒலி அமைப்பு DJ
கேக் வகைகள் சிற்றுண்டி
சைவ, அசைவ உணவு.
குளிர்பானங்கள்

KS Services









தொடர்புகளுக்கு:
Tel. 0049 21025300247
Mobil. 004917610247194
Mobil. 00491722192035
E-Mail. info@ksservices.de
Web. www.ksservices.de
KS Services
Berliner Str. 49- 40880 Ratingen

வாகன ஒழுங்கு தங்குமிட வசதி.
ஐரோப்பா தழுவியசேவை.
இன்னும் பல சேவைகள்
உங்களின் எண்ணங்கள்
எங்களின் கை வண்ணங்களில்

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# கனவுப்பூ தொடர்ச்சி 9ம் பக்கம்

அதில் ஒருவரை ஒருவர் ஆதிக்கம் செய்யவும் ஒருவர் மீது ஒருவர் சந்தேகம்கொள்ளவும்தான் இடம் உண்டு. பாதுகாப்பு என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்ட சிறை அது. விலங்கு பூட்டப்பட்ட கைதிகளுக்கும், கணவன் மனைவிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. நட்பு, சுதந்திரம், மகிழ்ச்சி எல்லாம் அதில் பறிபோய்விடும். கல்யாணமாகிவிட்டால் ஒருவரை ஒருவர் ஒற்றுப் பார்ப்போம். பொறாமை நெருப்பில் கருகிப்போவோம். சண்டையிட்டு அமைதி இழப்போம். நம் முன்னோர்கள்கூடத் திருமணம் இல்லாமல்தான் முதலில் வாழ்ந்தார்கள். “லிவிங் டுகெதர்' இந்த மண்ணுக்கு ஒன்றும் புதிது அல்ல. எல்லாமே சைக்கிள்... ஒரு வட்டம்தான். நேற்று இருந்தது இன்று மாறிவிட்டது. இன்று இருப்பது நாளை நிச்சயம் மாறும். சம்பிரதாயங்களும் சடங்குகளும் நம் முன்னோர்களின் முட்டாள் தனத்தில் உருவானவை. படித்தவள் நீ... கொஞ்சம் புரொக்ரஸிவா யோசி““ என்று படபடப்புடன் பேசினான் விஸ்வம்.

காபி ஷாப்பில் அடுத்தவருக்குக் கேட்காதபடி மிகவும் மெலிதாகப் பார்வதி பேசத் தொடங்கினாள். ““விசு... நம் முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. பிளேட்டோவில் இருந்து ஓஷோ வரை நானும் படித்திருக்கிறேன். உன் ஷா சொன்னதும் எனக்குத் தெரியும். சரி... ஒரே வீட்டில், ஒரே படுக்கையை நானும் உன்னுடன் பகிர்ந்துகொள்கிறேன். எனக்குக் குழந்தை வேண்டும். திருமணம்தானே என் குழந்தைக்குச் சட்டபூர்வமான அங்கீகாரத்தைச் சமூகத்திடம் பெற்றுத் தர முடியும்? குழந்தையைத் தவிர்த்துவிட்டுக் கூடி வாழலாம் என்கிறாயா? இதுதான் ஷா சொன்ன பச்சை விபசாரம்...““ என்று ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாக வெளிப்படுத்தியவளை எப்படி வழிக்குக் கொண்டுவருவது என்று விளங்காமல் குழம்பினான் விஸ்வம். பார்வதி அவனை ஸ்நேக பாவத்துடன் பார்த்தபடியே காபி யைப் பருகினாள்.

““பாரு... ஒன்றைப் புரிந்துகொள். அந்தரங்கம் புனிதமானது. லிவிங் டுகெதரில் மூன்றாவது நபருக்கு இடம் இல்லை. நாம் விரும்பும் வரை மகிழ்ச்சியுடன் சேர்ந்து வாழலாம். வேண்டாம் என்றால், எந்த வலியும் வேதனையும் இல்லாமல் அவரவர் வழியில் பிரிந்து செல்லலாம். கோர்ட், வழக்கு, விவாகரத்து என்று மற்றவர் மூக்கை நீட்ட அவசியமே இல்லை. சம்பிரதாய வேலிக்கு வெளியேதான் மகிழ்ச்சியான வாழ்க்கை இருக்கிறது. புரிந்துகொள் ப்ளீஸ்...““ என்ற விஸ்வத்தின் நோக்கும் போக்கும் பார்வதிக்குப் பிடிபடவில்லை.


““ஸாரி விசு... குழந்தைபற்றியே சிந்திக்காமல் பேசுகிறாய். வாழ்க்கை என்பது வெறும் படுக்கை சமாசாரம் என்று நினைப்பவர்களுக்கு, உன் சித்தாந்தம் சரிப்படலாம். விரும்பியபோது சேர்ந்தும், கசந்தபோது கைகழுவியும் விலங்கைப் போல் வாழ எனக்கு விருப்பம் இல்லை. நான் நாளை பெங்களூரு புறப்படுகிறேன். நீ என்னை நேசிக்கிறாயா, என் உடம்பை நேசிக்கிறாயா? புரியவில்லை. வாழத் தொடங்குவதற்கு முன்பே விவாகரத்துபற்றி நீ சிந்திப்பது உன் அன்பு குறித்தே என்னைச் சந்தேகப்படச் செய்கிறது. ஐ டேக் லீவ் ஆ.்.ப் யூ. பை!““ என்று சொல்லிவிட்டு விருட்டென்று எழுந்து காபி ஷாப்பில் இருந்து வெளியேறி ஆட்டோவில் ஏறினாள் பார்வதி. அவளுக்குப் பின்னால் விரைந்து வந்த விஸ்வம் செய்வதறியாது நின்றான்.

இரவு 8.30. பெங்களூரு சிட்டி ரயில் நிலையத்தில் வண்டி வந்து நின்றது. புனிதாவும் அவள் கணவனும் விடைபெற்றுக்கொண்டார்கள்.

பார்வதியின் நெருங்கிய தோழி கமலாவும், அவளுடைய காதல் கணவன் ராமநாதனும் அவளை வரவேற்க வந்திருந்தனர். கார் கமலாவின் வீட்டை நோக்கி விரைந்தது. ராமநாதன் தன் அறைக்குப் போனான். கமலாவும் பார்வதியும் மாடிஅறைக்குள் நுழைந்தனர். கமலாவின் கழுத்தைப் பார்த்த பார்வதிக்குப் புனிதாவின் மஞ்சள் படிந்த தாலிக் கயிறு நினைவில் நிழலாடியது.

““என்னடி கமலா... உன் கழுத்தில் தாலியைக் காணோம். பதிவுத் திருமணத்தில் மோதிரம் மாற்றிக்கொண்டீர்களா?““ என்று சிரித்தபடி கேட்டாள் பார்வதி. ““எனக்கும் ராமுவுக்கும் சடங்குகளில் நம்பிக்கை இல்லை. அன்பில் இணைந்தவர்களுக்கு அடையாளச் சின்னம் எதற்கு? பதிவுத் திருமணம் என்பது சடங்கு அல்ல. சேர்ந்து வாழ்வதற்கான சான்று. குழந்தைக்கான சமூக அங்கீகாரம். கரைக்குள் நடந்தால்தான் ஆறு. இல்லையென்றால் அது காட்டாற்று வெள்ளம். சமூகக் கட்டுப்பாடு என்பது நமக்கு நாமே ஏற்படுத்திக்கொண்ட ஒழுங்கமைப்பு. அதைக் காப்பாற்றுவதற்குத்தான் இந்தக் கல்யாணம் எல்லாம். அதற்காக, தாலியைக் கழுத்தில் தொங்கவிட்டு, கால்களில் மெட்டியணிந்து, ஒன்பது முழம் புடைவையைச் சுற்றிக்கொண்டு, சமையலறைக்கும் படுக்கைஅறைக்கும் இடையில் முடங்க வேண்டும் என்று அவசியம் இல்லை. ஆமாம்! உன் விஸ்வம் என்ன சொல்கிறான்?““ என்றாள் கமலா.

““அவன் லிவிங் டுகெதர் மயக்கத்தில் இருக்கிறான். அது சரிப்படுமா கமலா?““ என்று கேட்டுவிட்டுப் பதிலை எதிர்பார்த்தாள் பார்வதி.



““அடிப் பாவி. இவனையும் இந்த நோய் பிடித்துக்கொண்டதா? பாரு... கனவுப் பூவில் வாசம் வருமா? கனவில் பூ கவர்ச்சி காட்டும். வாசம் தராது. லிவிங் டுகெதரும் அப்படித்தான். எந்தப் பந்தமும் இல்லாத விடுதலை அதில் கவர்ந்திருக்கும். ஆனால் உண்மையான காதல், பாசம், உறவு என்று எந்த வாசமும் அதில் வீசாது. விஸ்வம் வீசும் வலையில் விழுந்துவிடாதே. நன்றாக ஓய்வெடுத்துக்கொள். உனக்கு ஆபீஸ் குவார்ட்டர்ஸ் கிடைக்கும் வரை இங்கேயே இருக்கலாம். எங்களுக்கு எந்தச் சிரமமும் இல்லை““ என்று சொல்லிவிட்டு, மாடிப்படியில் இறங்கினாள் கமலா.

பார்வதி அறைக்குள் தனியானாள். விரக்தியும் வெறுமையும் கலந்து உணர்வு வாழ்வின் மீது பற்றின்மையை அவளுள் படரச் செய்தது. ஜன்னல்களைத் திறந்துவைத்தாள். வானில் வெண்ணிலா சிரித்தது. அறை விளக்குகள் அனைத்தையும் அணைத்தாள். கட்டிலில் சாய்ந்து படுத்தாள். “உன் மீது இருக்கும் நம்பிக்கையில்தான் தனியாக வேலை பார்க்க அனுப்பிவைக்கிறோம். குடும்ப மானத்தைக் கெடுத்துவிடாதே. சரியான வரனை நாங்கள் பார்த்து முடித்ததும் சொல்லுவோம். அப்புறம் நீ வேலைக்குப் போவதும் போகாததும் உன் புருஷன் விருப்பம்' என்று சொன்ன அம்மாவை நினைத்தாள். “எனக்கென்று நியாயமான விருப்பங்கள் எதுவும் இருக்கக் கூடாதா?' என்று மனம் கசந்தாள். “ஆணாதிக்க உலகம்' என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

புனிதாவும் அவள் கணவனும் நினைவில் வந்து நின்றனர். “புனிதா பழைய பஞ்சாங்கம். ஆனால், அவள் கணவன் இல்லறத்தின் உன்னதம் அறிந்தவன். கமலாவின் கணவன் மட்டுமென்ன? அவளுக்குப் பூரண சுதந்திரம் தந்திருக்கிறானே! இவர்களை ஆணாதிக்கவாதிகள் என்று எப்படிச் சொல்ல முடியும்? “லிவிங் டுகெதர்' என்று பிதற்றும் விஸ்வம்தான் பெண்ணைப் போகப் பொருளாகப் பார்க்கும் ஆணாதிக்கவாதியாக இருக்க முடியும் என்று நினைத்த பார்வதியின் இதயம் வலித்தது. நினைவுகளின் நீள்கரங்களில் இருந்து விடுபட்டு நிம்மதியாக உறங்க முயன்றபோது அவளுடைய கைபேசி சிணுங்கியது. இந்த நேரத்தில் யாராக இருக்கக்கூடும் என்று யோசித்தபடி அதை எடுத்தாள். விஸ்வம் பெயர் பளிச்சிட்டது.

பேசுவதா, வேண்டாமா என்று தவித்தாள். நின்ற கைபேசியின் அழைப்பு அந்த இரவில், ஒளி மங்கிய இருளில் மீண்டும் தொடர்ந்து சிணுங்கிக்கொண்டே இருந்தது. நன்றி:விகடன்

**படித்ததில் பிடித்தது**
**சுபா–யாழ்ப்பாணம்**


KSR BRIDAL ARTIST

தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு
அழகூட்ட எம்மை நாடுங்கள்.மணப்பெண் அலங்காரம்.
மாலைகள் மற்றும் பூச்செண்டுகள்
அனைத்தும் ஓர் இடத்தில்.

**Make up**......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
**Threading** Eye brow Face.....
**Facial**..........
**hair style**
**hair straightening**
**hair curls**

Video & Foto
E-mail : **kajas.makeup@hotmail.de**
facebook : **KSR Bridal Artist**
**KSR BRidal**
Tel:02323 39 88 470
contact : **015236649870**






**அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

# செலவே இல்லாத தண்ணீர்ச் சிகிச்சை!



உடல் இளைப்பது முதல் புற்றுநோய் பாதிப்பு குறைவது வரை செலவே இல்லாத மருந்து ஒன்று இருக்கிறது தெரியுமா? அது தான் தண்ணீர்.

ஏதோ உணவு, சிற்றுண்டி சாப்பிடும் போது மட்டும் தண்ணீர் குடிப்பது போதாது. தண்ணீர் குடிப்பதை பழக்கப்படுத்த வேண்டும். தண்ணீர் தொடர்பான பழங்கள், காய்கறிகளை அதிகம் சேர்க்க வேண்டும். பல ஆயிரக்கணக்கில் பணம் கறந்து சொல்லித் தரப்படும் “வாட்டர் தெரபி' உட்பட முலிகை தெரபிகளை நாம் ஏன் இப்போதே ஆரம்பிக்கக் கூடாது? நீங்கள் ஆரம்பியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுங்கள்.

என்னதான் உடற்பயிற்சி செய்தாலும், டானிக் சாப்பிட்டாலும், உடல் எடை குறையாது. ஆனால், தொடர்ந்து தண்ணீர் குடித்து வாருங்கள், ஒரு மாதத்திலேயே ரிசல்ட் தெரிந்து விடும். உடல் எடையை அதிகப்படுத்திக் காட்ட இளைஞர்கள், இன்டர்வியூவுக்கு செல்லுமுன் கண்டபடி தண்ணீர் குடித்துச் செல்வர். இது சரியல்ல. உண்மையில், உடல் எடையை கூட்டிக் காட்ட தண்ணீர் பயன்படாது. அது உடலை பாதிக்கும். தினமும் குறிப்பிட்ட அளவு சாப்பிட்டு வந்தால் உடல் எடை அதிகரிப்பை கட்டுப்படுத்தும் என்பது தான் உண்மை.

உடலில் கலோரியை கட்டுப்படுத்த மருந்து தேவையல்ல, தண்ணீர் தான் முக்கியத் தேவை. தண்ணீர் சாப்பிட்டால், வயிற்றில் இருந்து ஆரம்பித்து, குடல், சிறுநீரகம் என்று எல்லா இடத்தையும் சுத்தப்படுத்தி, எலும்பு, தசைகளையும் எந்த பாதிப்பும் இல்லாமல் சீராக்கி சென்று கடைசியில் வெளியேறி விடுகிறது.

இப்படி செய்வதால்தான் சிறுநீரக பிரச்சினை,குடல் பிரச்சினைஎன்று எதுவும் வராமல் இருக்கிறது சிலருக்கு.

ஒரு நாளைக்கு எட்டு முதல் பத்து டம்ளர் வரை தண்ணீர் குடிக்கலாம். ஆப்பிள், சாத்துக்குடி, ஆரஞ்சு என்று பழங்களாகவும் சாப்பிடலாம். அவற்றில் 70 சதவீதம் வரை தண்ணீர் சத்து தான் உள்ளது. தினமும் ஏதாவது ஒருவேளை மட்டும் பழங்களாக சாப்பிட்டால் மிகவும் நல்லது.

# ஒரு கொசுவர்த்தி 100 சிகரெட்டுகளுக்கு சமம்






## கொசுவுக்கு வலையா இல்லை நம் உயிருக்கு விலையா?

இலங்கை அல்லது இந்தியாவிற்குச் சென்றால் நாம் நமது உறவினர்கள் வீட்டில் கொசுத்தொல்லைக்கு கொசுவர்த்தியைக் கொழுத்திவிட்டுப் படுப்போம். (அந்தக்காலத்திலும் ஊரில் கொசுத்தொல்லை இருந்ததுதான் (அது நமக்கு இல்லை எங்கள் அம்மா அப்பாவிற்குத்தான். கொசுவுக்கே நாம் தொல்லை கொடுத்த காலம் அது.) கொசுவில் இருந்து எம்மை பாதுகாப்பதாக எண்ணி நமது ஆரோக்கியத்தையே கெடுத்துக்கொள்கின்றோம்.

கொசுவர்த்தியில் இருந்து வெளிப்படும் புகையை சுவாசித்ததால் நுரையீரல் புற்றுநோய் வரும் ஆபத்து ஏற்படும் என புனேவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் சுதீப் சால்வி தெரிவித்துள்ளார். நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மூடப்பட்ட அறையில் ஏற்றி வைக்கப்பட்ட கொசுவர்த்தியில் இருந்து வெளிவரும் புகையை சுவாசிப்பது 100 சிகரெட்டுகள் புகைப்பதற்கு சமம் என சீனா மற்றும் தைவான் நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளதாக தெரிவித்தார். நன்றி தினமலர்






இது நம்நாட்டில் கற்பூர ஆராதனை!



யாழில் 12.12. 2014 அன்று லிங்கா படம் திரையிடப்பட்டது. ரஜனி ரசிகர்கள் இதற்காக சுமார் 4 அடியில் பெரிய கேக் ஒன்றைச் செய்து , ரஜனியின் படத்திற்கு கற்பூர ஆராதனை காட்டி அதனைப் படைத்துள்ளார்கள்.


தமிழ்நாட்டில் பால அபிஷேகமும் கற்பூர ஆராதனையும்





## தமிழர் மரபுத் திங்கள் - 8ம் பக்கத் தொடர்ச்சி

தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியத்தில் தைத்திங்களின் பூசம் எனப்படும் நட்சத்திர நாள் சிறப் பான நாளாகக் கருதப்பட்டதைப் பக்தி இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. இந்நாளில்தான் சம்பந் தர் பூம்பாவையைப் பதிகம்பாடி உயிர்பெற்றெழச் செய்தார். முருகன் சூரனை அழிப்பதற்காக அன்னை பராசக்தியிடம் வேல் பெற்ற நாளாகவும் வள்ளியைத் திருமணம் செய்த நாளாகவும் வழங்கப்படுகிறது. அட்டமூர்த்திகளையும் வழிபடும் நாளாக இயற்கை வழிபாட்டுடன் இந்தநாள் இணைந்துள்ளது. இதன் மூலம் தமிழர் வாழ்வியலில் தைத்திங்கள் வழிபாட்டுத் திங்களாக அமைந்திருந்ததை உணரமுடிகிறது.

இன்று மேலைத்தேசக் காலக்கணிப்பு உலகமெங்கும் பின்பற்றப் படுவதால் ஆங்கிலப் புத்தாண்டின் தொடக்கமாக ஜனவரி மாதம் சிறப்புப் பெற்றுள்ளது. ஆனரல் தமிழர், ஜப்பானியர் தைத்திங்களைத் தமது மரபான புத்தாண்டாகக் கருதிக் கொண்டாடுகின்றனர். வடநாட்டுப் பண்பாட்டின் தாக்கத்தால் தமிழரது பண்பாட்டில் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பு எனக் கொண்டாடும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. மேலை நாடுகளில் மரபுத் திங்கள் என்ற நிலை உருவாக்கம்பெறவில்லை என்றே கருதக்கிடக்கிறது. ஆனால் கனடா நாட்டிலே புலம்பெயர் தமிழர்களின் குடியேற்றத்தால் தைத்திங்கள் மரபுத்திங்களாக அரச அறிவிப்பைப் பெற்றுள்ளது.

இது உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கு ஒரு புதிய தகைமையை வழங்கியுள்ளது. தமிழரின் மரபான பண்பாட்டு விடயங்களை நினைவுகூரவும் காலத்திற்கும் களத்திற்கும் ஏற்ற வகையில் மீட்டுருவாக்கம் செய்யவும் இளைய தலைமுறைக்குத் தமிழர் மரபைப் பயிற்றவும் இந்தத் தைத்திங்களைப் பயன்படுத்துவதற்கு நல்லதொரு வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

தமிழர் பண்பாடும் மொழியும் உலகமயமாதல் என்னும் புதிய கோட்பாட்டைச் செயற்படுத்த மரபுத் திங்களாகத் தைத்திங்கள் அமைந்திருப்பது ஒரு வரலாற்றுப் புகழையும் தந்துள்ளது. தைத் திங்களில் தண் மண்டலமிட்டதைத் தமிழில் முதலிலே பதிவுசெய்த பெண்ணாக மரபுத் திங்களை எல்லோரும் உணரவைத்த ஆண்டாள் அதன் மூல ஊற்றாக விளங்குகிறாள்.

ஒரே கூரையின் கீழ்

BCN·TRAVELS


இலங்கை இந்தியா கனடா சிங்கப்பூர் அவுஸ்ரேலியா ஐரோப்பிய நாடுகள்
உட்பட அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சிட்டைகள்

gothab Finance

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
Baufinanzierungen, Privatkredite & Versicherungen

15.01.2015 முதல் புதிய முகவரியில்
Rheinische Str. 72, 44137 Dortmund



# கூச்சம்

## தயக்கம், வெட்கம், கூச்சம், பயம் இனிமேல் இல்லை !

நண்பர்களிடையே மணிக்கணக்காய் அரட்டையடிப்பவர்களில் பலர் நான்கு பேர்கூடியிருக்கும் இடத்தில் நான்கு வார்த்தை பேசச் சொன்னால் காணாமல் போய்விடுவார்கள். காரணம் கூச்சம்.
பள்ளிக்கூடங்களில் புதிதாய் நுழையும் மழலைகள் ஆசிரியர்களிடமும், பள்ளியிலுள்ள சக மாணவர்களிடமும் பேசக் கூட பல வேளைகளில் பெரும் கூச்சப்படுவார்கள். அதுவும் மேடைகளில் ஏறி பேசவேண்டுமெனில் அவ்வளவு தான்! வார்த்தைகள் வராமல் வியர்த்துக் கொட்டுபவர்கள் தான் அனேகம்.

வேலை விஷயங்களில் இந்தக் கூச்சம் பலரை வெறுங்கையுடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கவும் செய்கிறது. வேலைக்கான நேர்முகத் தேர்வுகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றில் இந்த கூச்சத்தின் பிள்ளைகள் தொடர் தோல்விகளையே சந்திக்கின்றனர்.

இந்த கூச்சம் மட்டுமில்லாமல் இருந்திருந்தால் வாழ்க்கையில் பல உன்னதமான இடங்களுக்குச் சென்றிருப்பேனே என புலம்பும் இத்தகைய மக்களை வியக்க வைக்க வந்திருக்கிறது புதிய ஆராய்ச்சி ஒன்று.

அதாவது கூச்சமடையாமல் தைரியத்துடன் செயல்பட வேண்டிய ஊக்கத்தைத் தரும் மருந்தை அறிவியலார் கண்டறிந்துள்ளனர். இந்த மருந்தை ஸ்பிரே போல தயாரித்து நேர்முகத் தேர்வு போன்ற இடங்களுக்குச் செல்லும் முன் முகர்ந்து கொண்டால் மனதுக்கு ஊக்கம் கிடைக்குமாம். அல்லது மாத்திரை வடிவில் இதைத் தயாரித்து உட்கொள்ளச் செய்தால் தயக்கமெல்லாம் தயங்காமல் ஓடி விடுமாம்.

இனிமேல் காதலைச் சொல்ல வருடக் கணக்காய் தயங்கித் தயங்கித் திரிய வேண்டிய தேவையில்லையென வேறு வேலையே இல்லாத இளைஞர்கள் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம்.

ஆக்ஸைடோசின் எனப்படும் ஒரு ஹார்மோன் தான் இந்த தயக்கம், வெட்கம், கூச்சம் போன்றவற்றையெல்லாம் விரட்டும் அதிசய மருந்தாக உருவெடுக்கிறது.
ஆக்ஸைடோசின் என்பது உடலுறவின்போதும், குழந்தைப் பிறப்பின் போதும் உடலில் சுரக்கும் ஒரு ஹார்மோன். இது தான் தாய்க்கும் சேய்க்குமான உறவு இறுக்கத்துக்கும் காரணியாக இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.


அமெரிக்கா, யூ.கே, ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் ஒட்டு மொத்தமாக அங்கீகரித்துள்ள இந்த ஆக்ஸைடோசின் ஆராய்ச்சியின் அடுத்த கட்டமாக இதன் வணிக வழிகள் ஆலோசிக்கப் பட்டு வருகின்றன. அதாவது இந்த ஹார்மோனைக் கொண்டு ஸ்பிரே, மருந்து, பானம் போன்றவற்றைத் தயாரிக்கும் வழிகளைக் குறித்து மும்முரமான ஆய்வுகள் நடக்கின்றன.

இந்த ஹார்மோன் இயற்கையின் வரப்பிரசாதம் எனலாம். அறுவை சிகிச்சை இல்லாமல் சுகப் பிரசவம் நடந்தால் குழந்தைக்கும் தாய்க்கும் இடையேயான உறவு பலமாக இருக்கும் என்பது ஒரு ஆராய்ச்சி முடிவு. காரணம் பிறப்பின் போது சுரக்கும் இந்த ஹார்மோன் !
இந்த ஹார்மோன் இருந்தால் மன அழுத்தம் இல்லாமல் மகிழ்ச்சியான மனநிலை உருவாகுமாம்.
இப்படி இந்த ஹார்மோனைக் குறித்து அடுக்கடுக்காய் ஆச்சரியங்களை வரிசைப்படுத்திக் கொண்டே இருக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

இனிமேல் காலம் மாறலாம். நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் முன் ஒரு மாத்திரையைப் போட்டுக் கொள்ளும் காலம் விரைவில் வரலாம். அல்லது வீடுகளில் நிம்மதியான சூழல் நிகழ வீடுகளில் தெளிக்கும் வாசனைத் திரவியங்களாகவும் இவை வடிவமெடுக்கலாம் !
பொறுத்திருந்து பார்ப்போம், அறிவியலின் அடுத்த கட்ட வளர்ச்சியை !




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்



படம்:வெற்றமணி

# அனுபவமே உயர்ந்தது

பார்வையற்ற இளைஞன் ஒருவனை சிலர் புத்தரிடம் அழைத்து வந்தனர். அவர்கள் “இந்த இளைஞன் வெளிச்சத்தை பற்றி எவ்வளவு சொன்னாலும் நம்ப மறுக்கிறான்” என்று கூறினர். அப்போது பார்வையற்ற இளைஞன் “வெளிச்சத்தை நான் தொட்டு பார்க்க வேண்டும். சுவைத்து பார்க்க வேண்டும். அதன் வாசனையையோ அல்லது ஓசையையோ நான் உணர வேண்டும். இவை எதுவும் இல்லாத வெளிச்சம் என்ற ஒன்று இருப்பதை நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?” என்றான்.

அனுபவமே உயர்ந்தது-புத்தர்

அவனுடன் வந்தவர்கள் புத்தரிடம், “நீங்கள் தான் வெளிச்சம் உண்டு என்பதை அவன் நம்பும்படி செய்ய வேண்டும்” என்று கூறினர். அதற்கு புத்தர், “அவன் உணர முடியாத ஒன்றை அவனை நம்ப வைக்கும் செயலை நான் செய்ய மாட்டேன். இப்போது அவனுக்கு தேவை பார்வை. வெளிச்சம் பற்றிய விளக்கமல்ல. அவனுக்கு பார்வை வந்து விட்டால், விளக்கம் தேவைபடாது. அவனைத் தகுந்த மருத்துவரிடம் அழைத்துச் சென்று பார்வை கிடைக்கச் செய்யுங்கள்” என்று கூறி அனுப்பினார்.

புத்தர் கூறியதை ஏற்று பார்வையற்ற இளைஞனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர். சிகிச்சை முலம் அவனுக்கு பார்வையும் கிடைத்தது. உடனே அந்த இளைஞன் புத்தரிடம் ஓடி வந்து, “வெளிச்சம் இருக்கிறது” என்று கூறினான். உடனே, புத்தர், “வெளிச்சம் இருக்கிறது என்று அவர்கள் கூறிய போது ஏன் நம்ப மறுத்து விட்டாய்?” என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞன், “கண் தெரியாத என்னால், எவ்வாறு வெளிச்சத்தை உணர முடியும்? அவர்கள் சொன்னதை அப்படியே நான் ஏற்றுக் கொண்டிருந்தால், இன்னும் நான் கண் தெரியாதவனாகவே இருந்திருப்பேன்” என்றான்.

அனுபவத்தால் உணர வேண்டிய ஒன்றை ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் உணரவைக்க முடியாது என்பதை புத்தர் இந்த நிகழ்ச்சியின் மூலம் சீடர்களுக்கு புரிய வைத்தார்.

## இது அரசியல் அல்ல!! ஆன்மீகமே!

யார் சொன்னது நாம் புத்தரின் தத்துவங்களுக்கு எதிரானவர் என்று. அதனை ஏற்காதவர்களுக்கு அல்லவா நாமும் எதிரானவர்கள்.

மேலே உள்ள விகாரை இலங்கையில் ஆநுரதபுரமாவட்டத்தில் அமைந்துள்ளது. அழகாக துப்பரவாக பழமையைப் பேணிபாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள். பார்ப்பதற்கு மகிழ்வாக உள்ளது.


ஆக! இப்படி அல்லவா புரதான இடங்களைப் பாதுகாக்கவேண்டும் என சொல்லிச் சொல்லி மகிழவேண்டும் போல் உள்ளது.

இருந்தாலும் சொல்ல முடியவில்லை. காரணம் இதனைக் காண்பதற்கு மூன்று நாட்கள் முன்பே திருகோணமலை மற்றும் கன்னியா வென்னீர் ஊற்று யாவும் சென்றுவந்தேன். அங்கு சரித்திரம் துப்பரவாக இல்லாமல் குப்பையாக இருந்தது.

ஒரே நாட்டில் புத்தபோதனை எப்படி இருக்கின்றது. நாம் புத்தரி போதனைகளை மதிக்கின்றோம். மதிப்போம். எனவே பௌத்தநாடாக இலங்கையை மாற்ற நினைப்பவர்கள் முதலில் புத்தரின் கொள்கைளை பேதனைகளை நடைமுறைப்படுத்தட்டும். இது அரசியல் அல்ல ஆன்மீகமே!




# கருவைப் பாதிக்கும் தாயின் அழகுசாதனப் பொருட்கள் !!!



சேவியர்

இன்றைய வணிக உலகம் எல்லோரையும் அமிலக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறதோ என்று தோன்றுகிறது. புற்றீசல் போலக் கிளம்பும் அழகுசாதனப் பொருட்கள் கருவிலிருக்கும் குழந்தையையே பாதிப்படைய வைக்கிறது எனும் அதிர்ச்சிகரமான ஆராய்ச்சி முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளனர் ஸ்காட்லாந்திலுள்ள எடின்பரா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

எல்லோரையும் போலவே தாய்மை நிலையிலிருக்கும் பெண்களும் கிரீம்களும், ∴பெர்பியூம்களும் பயன்படுத்துவது நாம் அறிந்ததே. ஊடகங்களும் தேவையற்ற பல பொருட்களை "தாயின் அத்தியாவசியத் தேவை " எனக் கூவிக் கூவி விற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அது தாய் தன்னை அறியாமலேயே தன் குழந்தைக்கு வழங்கும் நோய் என்பதை இந்த ஆய்வு வருத்தத்துடன் சொல்கிறது.

## அளவிற்கு மிஞ்சினால் அழகும் நஞ்சே!

அதிலும் குறிப்பாக கருவில் இருக்கும் குழந்தை ஆணாய் இருந்தால் அந்தக் குழந்தைக்கு பிற்காலத்தில் ஆண்மைக் குறைவு, குறைந்த உயிரணுக்கள் எண்ணிக்கை போன்ற சிக்கல்கள் வருவதற்கு வாய்ப்பு அதிகமாம்.

எட்டு வாரம் முதல் பன்னிரண்டு வாரம் வரையிலான தாய்மைக் காலத்தில் கருவிலிருக்கும் குழந்தைகளின் இனப்பெருக்க உறுப்புகள் உருவாகின்றன. சில ஹார்மோன்கள் இந்த கால கட்டத்தில் தூண்டப்பட்டு ஆண் குழந்தைகளின் இனப்பெருக்க உறுப்புகளுக்கான அடித்தளத்தை அமைக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் தாய் பயன்படுத்தும் அழகுப் பொருட்கள் குழந்தையின் ஹார்மோன் தூண்டுதலைத் தடை செய்கின்றன. டெஸ்டோஸ்ரோன் எனும் ஒரு குறிப்பிட்ட ஹார்மோன் ஆண்களின் இனப்பெருக்க வளர்ச்சிக்கு பெரிதும் தேவையானது. அதன் மீது இந்த அழகு சாதனப் பொருட்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இப்படியெல்லாம் பட்டியலிட்டு தாய்மை நிலையில் இருக்கும் பெண்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்துகின்றார் இந்த ஆராய்ச்சியை முன்னின்று நடத்திய பேராசிரியர் ரிச்சர்ட் ஷார்ப் என்பவர்.

இந்த அமிலங்களால் புற்று நோய் வரும் வாய்ப்பு கூட இருப்பதாக அவர் அச்சம் தெரிவிக்கின்றார். எனவே தாய்மை நிலையில் இருக்கும் பெண்கள் அழகு சாதனப் பொருட்களை அறவே தவிர்ப்பதே நல்லது என அவர் வலியுறுத்துகின்றார்.

# சூடுபிடிக்கும் தேர்தல் களம்!

## மகிந்தவை தொடர்ந்து ஆட்சியில் அமர்த்தி தாலாட்டு பாட நாங்கள் முட்டாள்கள் அல்ல! மனோ

பொது எதிரணி கூட்டணிக்கு, தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்த கூட்டு இருக்கின்றது என்று அரசாங்கம் சொல்லித்திரிகிறது .ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்த கூற்றுக்கு துணையாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இதை ஒரு பெரிய விவகாரமாக நேற்றும் பேசியுள்ளார்.

விமல் வீரவன்ச, சுசில் பிரேமஜயந்த, மஹிந்தானந்த அளுத்கமகே, உதய கம்மன்பில என்று ஒரு கூட்டமே இதை திரும்ப, திரும்ப பேசி வருகிறது.

இவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். உண்மைதான், எமக்கு ஒப்பந்தம் இருக்கின்றது. அதுவும் இரகசிய ஒப்பந்தம் அல்ல, பகிரங்க ஒப்பந்தமே இருகின்றது. ஆனால், எமது ஒப்பந்தம் கூட்டமைப்புடன் அல்ல.

எமது ஒப்பந்தம், கூட்டமைப்புக்கு வாக்களித்த, வடக்கில், கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடன்தான் இருக்கின்றது என அவிசாவளையில் நேற்று மாலை நடைபெற்ற எதிரணி தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றிய ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் மனோ மேலும் கூறியதாவது,ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வடக்குக்கு வாக்கு தேடி போயுள்ளார். மகிந்தவுக்கு யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவுக்கும், மன்னாருக்கும், கிழக்கிலே மட்டக்களப்பிற்கும், திருகோணமலைக்கும், அம்பாறைக்கும் சென்று வாக்கு கேட்க முடியும் என்றால், எங்களுக்கு வடக்கிற்கும், கிழக்கிற்கும் சென்று வாக்கு கேட்க முடியாதா?

வடக்கு, கிழக்கு இரண்டுமே இந்த நாட்டின் மாகாணங்கள். அங்கே வாழும், 16 இலட்சம் தமிழர்களில் பத்து இலட்சம் பேர் வாக்காளர்கள். அவர்களின் பெயர்கள் இந்த நாட்டு தேர்தல் ஆணையாளரின் வாக்காளர் இடாப்பில் உண்டு.

ஆகவேதான் அவர்களின் வாக்குகளை நாங்கள் நாடுகின்றோம். ஆகவேதான் அந்த மக்களுடன் நமக்கு பகிரங்கமாக ஒப்பந்தம் இருக்கின்றது என்று இந்த மேடையில் இருந்து பகிரங்கமாக கூறுகிறேன். ஒப்பந்தம் ஒன்றை செய்து மகிந்தவை தொடர்ந்து ஆட்சியில் அமர்த்தி தாலாட்டு பாட, தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் முட்டாள்கள் அல்ல.

நாங்களும் முட்டாள்கள் அல்ல. இந்த தேர்தல் பாராளுமன்ற தேர்தல் அல்ல. மாகாணசபை, உள்ளூராட்சி தேர்தலும் அல்ல. இது ஒரு தேசிய தேர்தல். இன்று, முழு நாடுமே ஒரு தேர்தல் மாவட்டமாக மாறிவிட்டது.

இதில் பல சின்னங்கள் இல்லை. விருப்பு வாக்கு இலக்கங்கள் இல்லை. பத்தொன்பது பேர் போட்டியிட்டாலும், போட்டி இரண்டு பேருக்கு இடையில்தான். அது வெற்றிபெறும் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தோல்வியடையும் மகிந்த ராஜபக்சவுக்கும்தான்.

மைத்திரியின் சின்னம், அன்னம் என்ற எங்கள் சின்னம். மகிந்தவின் சின்னம் வாயில் போட்டு மெல்லும் வெற்றிலை என்ற சின்னம். இது இன்று முழு நாடும் அறிந்த தகவல். வடக்கின், கிழக்கின், மலையகத்தின், இங்கே மேலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று சேர்ந்துவிட்ட தகவல். இந்த தகவலை மேலும் விளக்க நாளை முதல் மலையகம், வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்கு எதிரணி தலைவர்களுடன் நான் வருவேன்.

இக்கூட்டத்தில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விமான நிலையத்தை மூடி, ஊழல் செய்தவர்கள் தப்பியோடாமல் தடுக்கப்படும் என்று கூறியது......

மைதிரிபால சிறிசேன கட்டுநாயக்க விமான நிலையத்தை மூடி, ஊழல் செய்தவர்கள் தப்பியோடாமல் தடுக்கப்படும் என்று கூறியது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பொதுவாகவே, நீண்ட காலம் ஆட்சியில் இருந்தவர்கள், தேர்தல் ஒன்றில் தோற்கடிக்கப்படும் போது, நாட்டை விட்டு இரவோடு இரவாகத் தப்பியோடுவது வழக்கம். அல்லது இராணுவத்தின் துணையுடன், அதிகாரத்தை இறுகப் பற்றிக் கொள்வதற்கு முயற்சிப்பார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவைப் பொறுத்தவரையில், இரவோடு இரவாக நாட்டை விட்டு தப்பிச் செல்லும் முடிவை எடுப்பார் என்று நம்புவதற்கில்லை. ஏனென்றால், அவர் உள்நாட்டில் இருந்து கொண்டு எத்தகைய நிலைமைகளையும் எதிர்கொள்வதற்கு அவ்வளவாக அஞ்சவேண்டிய நிலை இல்லை.


Kaneen electronics
15 வது ஆண்டில்..
ATHAVAN TV
ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
ஆதவன் தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஆதவனில் ஒளிபரப்பவேண்டுமா! எம்மை நாடுங்கள். எமது துல்லியமான ஒளிப்பதி, ஒலிப்பதி உங்கள் நிகழ்ச்சிகளை மெருகூட்டும்.
500 இருக்கைகள் கொண்ட Wuppertal மண்டபம் வாடகைக்கு பெறுவதற்கும் வீடியோ போட்டோ எடுப்பதற்கும் எம்மை நாடுங்கள்
Schevenhoferweg-24
42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de

Mathan
Finanz Coach & Finanz-Adviser
காப்புறுதிகளிலும் கடன் எடுப்பதிலும் காசை எப்படி மீதப்படுத்தலாம்!
வீட்டுக்கான கடன் வட்டி 1.75வீதம் முதல் (10 வருடங்களுக்கு நிலையானது)
தனிப்பட்ட கடன்களுக்கான வட்டி 3.45 %
காப்புறுதிகள் 20 வீதம் மீதப்படுத்தலாம்
வீடு வாங்கும் போது பிள்ளைகளுக்கான விஷேட சலுகைகள் !
mit staatlicher Förderung
z.B. Familie mit 2 Kindern
908 € pro Jahr
Zuschuss für die Immobilie.
Auch ohne Eigenkapital möglich.
finanzcoachffm@gmail.com
069 9586 4440 Mobil: 0174 / 3112258


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்



# நாடகம் வீட்டில் நாடகம்!

தொலைக்காட்சி சீரியல்களை நான் பார்ப்பதில்லை. பார்க்காமல், உள்ளே நான் சமர்த்தாக கம்ப்யூட்டர் முன் அமர்ந்து வேலை பார்த்துக்கொண்டு இருந்தாலும், ஹாலில் இருந்து வரும் அலறல் தீம் பாட்டுக்களும், அழுகை ஒப்பாரிகளும், அலட்டல் சவால்களும் என் செவிப்பறையைத் துளைத்து, ரணகளப்படுத்திக் கொண்டு உள்ளே போய் அதிர்கின்றன. இந்தக் கஷ்டத்துக்குதான் நான் காதே செவிடானாலும் பரவாயில்லை என்று யு.எஸ்.பி. எம்.பி-3 போட்டுக்கொண்டு பாட்டுக் கேட்பது! செவிடாகிற காது, நல்ல பாட்டுக்களைக் கேட்டுத்தான் செவிடாகட்டுமே!

தாய்க்குலங்கள் விழுந்து விழுந்து பார்க்கும்படியாய் அப்படி என்னதான் இருக்கிறது சீரியல்களில் என்று எனக்குப் புரியவில்லை. சாப்பிடும்போதோ, அல்லது காபிக்காகக் காத்திருக்கும்போதோ, ஹாலில் இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கும் டி.வி-யில் ஏதாவது ஒரு சீரியல் காட்சியைப் பார்க்க நேரிடும். எந்தக் காட்சியும் புதுசாகவே இராது. திரும்பத் திரும்பப் பார்த்துப் பார்த்துப் புளித்துப் போன காட்சிகளாகவேதான் இருக்கும்.

கோட்டா சீனிவாசராவே தேவலை என்கிற அளவுக்கு இரண்டு பெண்கள், 'ஏய்... ஏய்...' என்று எதிரெதிரே விரல் விட்டு 'உன்னை அழிச்சுடறேன் பார்! உன்னைத் தொலைச்சுடறேன் பார்!' என்று சவால் விட்டுக்கொண்டு இருப்பார்கள். ஒவ்வொருத்திக்கும் 50 வயதுக்கு மேல் இருக்கும். 'பாட்டிகளுக்கு ஏன் இந்த பஞ்ச் டயலாகெல்லாம்?' என்று கேட்கத் தோன்றும்.

முன்பெல்லாம் சினிமாக்களில் வில்லனாக நம்பியாரோ, அசோகனோ, அல்லது அவர்களைப் போன்ற வில்லன் நடிகர்களோதான் வந்து, யாரையாவது கொல்கிற சதித் திட்டம் பற்றிப் பேசுவார்கள். சபதம் எடுப்பார்கள். அப்போது அவர்கள் வெளிப்படுத்துகிற கோபமும் முறைப்பும் போதாதென்று, அவர்களின் முகத்தில் கீழ்ப்பக்கத்திலிருந்து சிவப்பு வெளிச்சம் பாய்ச்சி, இன்னும் கொடூரமாகக் காட்டுவார்கள். சீரியல்களில் அதெல்லாம் இல்லை. காலேஜ் போகிற டீனேஜ் பெண் கூட சர்வ சாதாரணமாகக் கொலை செய்துவிட்டு, தேமே என்றிருக்கிறது. குடும்பத்துக்குத் தெரிந்தால், அவர்களும் ஒன்றும் அதிர்ச்சி அடைய மாட்டார்கள். 'அடடா! அவசரப்பட்டுட்டியேம்மா! என் கிட்டே சொல்லியிருந்தா, அவனை நானே கொன்னிருக்க மாட்டேனா? சரி, போகட்டும்... இனிமே யாரையும் கொல்லாம பார்த்து நடந்துக்க' என்று பக்குவமாக எடுத்துச் சொல்வார்கள்.

சவால் இல்லையென்றால் அழுகை! யாராவது இளம் பெண் ஒருத்தி, எவனிடமாவது ஏமாந்து, கற்பைப் பறிகொடுத்து, விக்கி விக்கி அழுதுகொண்டு இருப்பாள். அவளைத் தேற்ற வரும் பெண்ணும் சேர்ந்து அழுவாள். இப்படியாக ஒரு கும்பலே கூடி ஒப்பாரி வைத்து அழும்.

சீரியல் கேரக்டர் யாராவது செத்துவிட்டால், டைரக்டருக்குக் கொண்டாட்டம்தான். பின்னே, அந்த ஒப்பாரிகளை வைத்தே இரண்டு மூன்று நாள் ஓட்டிவிடலாமே! பிணத்தைக் குளிப்பாட்டுவது, காது, மூக்கில் பஞ்சு வைப்பது, பாடை கட்டுவது, பானை உடைப்பது என்று சுடுகாட்டுக்குக் கொண்டு போய்க் கொளுத்துவது வரையில் எல்லாவற்றையும் விலாவாரியாகக் காட்டாவிட்டால் ஜென்மம் சாபல்யம் ஆகாது டைரக்டருக்கு!

இதெல்லாம் போக, நான் எப்போது எந்த சீரியல் காட்சியைப் பார்த்தாலும், நம்ப முடியாத, லாஜிக் இல்லாத சம்பவங்கள்தான் கண்ணில் படுகின்றன.

உதாரணமாக, அவசரமாக யாராவது ஒருவர் ஆட்டோவைக் கை காட்டி நிறுத்துவார். எங்கே போகவேண்டும் என்று இவரும் சொல்ல மாட்டார் அவரும் கேட்க மாட்டார். ரேட் பேச மாட்டார். ஆட்டோ கிளம்பியதும்தான் 'எங்கே போகணும் சார்?' என்று கேட்பார். இவர் எந்த இடம் சொன்னாலும் மறுக்காமல் போவார். எந்த சீரியல் ஆட்டோக்காரரும் 'இங்கே வர மாட்டேன்' என்று மறுப்பது இல்லை. 'மீட்டருக்கு மேல் போட்டுக் கொடுங்க' என்று கேட்பதில்லை.

அப்படித்தான், யாராவது தேடிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தால், வாசல் கதவு திறந்தே கிடக்கும். தேடி வருபவர் ஹாலுக்கு வந்தால் அங்கே ஒருவர் கூட இருக்க மாட்டார். இரண்டு மூன்று குரல் கொடுத்ததும்தான், இந்த அறையிலிருந்து ஒருவர், அந்த அறையிலிருந்து ஒருவர் என நாலைந்து பேர் வருவார்கள்.

டெலிபோனில் எதிர்பாராத ஒரு செய்தி வரும். எதிர்முனை வைக்கப்பட்டு விடும். ஆனால் இவர் வைக்காமல், ரிசீவரின் வாய்ப் பகுதியை ஒருமுறை முறைத்துப் பார்த்துவிட்டுத்தான் (என்ன தேடுகிறாரோ?) மெதுவாக வைப்பார்.

ஒரு திருடன் திடுதிடுவென்று ஓடுவான். சட்டென்று ஒரு குப்பைத் தொட்டி பின்னால் மறைந்து கொள்வான். அவனைத் துரத்தி வருபவர்கள் கரெக்டாக அந்தக் குப்பைத் தொட்டி அருகில் நிற்பார்கள். அங்கே இங்கே பார்ப்பார்கள். பின்பு ஆளுக்கொரு பக்கமாக ஓடுவார்கள். மறந்தும் குப்பைத் தொட்டியின் பின்னால் பார்க்க மாட்டார்கள்.

காணாமல் போன ஒருவரைத் தேடிக்கொண்டோ, அல்லது அது பற்றிப் பேசிக் கொண்டோ இருக்கும்போதுதான் யதேச்சையாக (!) டி.வி-யில் செய்தி ஓடிக்கொண்டு இருக்கும். அதில், இவர்கள் தேடுகிற ஆசாமி பற்றிய செய்தி வாசிக்கப்படும்.

ஏழெட்டு பேர் பேசுகிற காட்சியாக இருந்துவிட்டால், எல்லாரும் ஒரு வரிசையில் நின்றபடிதான் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வார்கள். எல்லாரும் கேமராவில் விழ வேண்டுமே!

சாப்பாட்டுக் காட்சி வராமல் இருக்காது. அதில் ஏதாவது பிரச்னைகள் அலசப்படும். யாராவது ஒருத்தர் கோபித்துக்கொண்டு, சாப்பாட்டுத் தட்டிலேயே சோற்றின் மீதே கை கழுவிக்கொண்டு எழுந்து போவார்.

எத்தனைப் பெரிய தொழிலதிபராக இருந்தாலும், அவசர போன்கால் வராதபடிக்கு ஸ்விட்ச் ஆ.ஃப் செய்யப்பட்டிருக்கும். அல்லது, அது எங்கேயோ இருக்கும் இவர் எங்கேயோ இருப்பார். செல்போனைக்கூட கையில் எடுத்துக்கொள்ளாத பிஸி தொழிலதிபர்!

சிங்கப்பூர் போகணுமா, அமெரிக்கா போகணுமா, உடனே, இப்போதே கிளம்பிவிடுவார்கள். நினைத்தால் அத்தனை பேரும் ஜப்பானில் இருப்பார்கள் நியூயார்க்கில் இருப்பார்கள். எப்போது பாஸ்போர்ட் எடுக்கிறார்கள், டிக்கெட் எப்படி இவர்களுக்கு உடனே கிடைக்கிறது என்பதெல்லாம் ஆச்சரியம்!

கத்தியை எடுத்துக் குத்திக்கொள்ளப் போவாள் ஒருத்தி. வேண்டாம் என்று வெளியிலிருந்து ஒருவன் பதறி ஓடி வந்ததும், வேகமாக வயிற்றில் சொருகப் போன கத்தியை ஒரு நூலிழை முன்னதாக பிரேக் பிடித்து நிறுத்திவிடுவாள். அது எப்படித்தான் சாத்தியமாகுமோ அவளுக்கு மட்டும்!

தூக்கு மாட்டிக் கொள்ள நினைத்தால், அவர்களுக்கு வசதியாக அந்த அறையில் கயிறு, ஸ்டூல் எல்லாம் தயாராக இருக்கும். தேடி எடுக்க வேண்டிய அவசியமே இராது. அவர்களைக் காப்பாற்ற வருகிறவரும், பூட்டியிருக்கும் கதவை முதலிலேயே முட்டி மோதித் திறக்க மாட்டார். உள்ளே தற்கொலை செய்துகொள்ளப் போகிறவர் நிதானமாக .ஃபேனில் கயிற்றைக் கட்டி, ஸ்டூலில் மீது ஏறி, சுருக்கைக் கழுத்தில் மாட்டிக் கொள்கிறவரை இவர் வெளியே இருந்தபடி தற்கொலை முயற்சி வேண்டாம் என்று நயமாக எடுத்துச் சொல்லிக்கொண்டு இருப்பார். கடைசியாகத்தான் கதவை மோதித் திறப்பார். ஓடிப் போய் அந்தக் கடைசி விநாடியில்தான் அவரைத் தாங்கிப் பிடிப்பார்.

ஒருவர் ஒரு தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ள முயல்கிறார். கிடைக்கவில்லை. மீண்டும் முயல்கிறார். இப்படி அடுத்தடுத்து எத்தனை முறை முயன்றாலும், ஒவ்வொரு முறையும் அத்தனை எண்களையும் டொக் டொக்கென்று அழுத்திக்கொண்டு இருப்பாரே தவிர, ரீ-டயல் என்கிற ஒரு விஷயம் இருப்பதே சீரியலில் போன் பேசுகிறவர்களுக்குத் தெரியாது.

சீரியல் அபத்தங்களைப் பற்றி என் மகள், மகனிடம் பேசிக்கொண்டு இருந்தபோது, அவர்கள் கேலியும் கிண்டலுமாகச் சொன்னவைதான் மேலே உள்ளவை. இன்னும்கூட அபத்தங்கள் இருக்கலாம். பதிவு தாங்காது!







பேராசிரியர்
அ.சண்முகதாஸ்

## வாழ்த்துக் கூறும் பன்றிகள்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது நாமெல்லோரும் கொண்டுள்ள நம்பிக்கை. ஆண்டெல்லாம் மக்களுக்கான உணவு தரும் பணிசெய்த உழவர்கள் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்த நெற்பயிர்க் கதிர்கள் நன்றாக முற்றிவிட்டன. நெல்மணிகள் அவற்றிலிருந்து பெறுவதற்கு முன்னர் உழவன் மனத்திலே இபப்யிர் விளைச்சலோடு தொடர்புடைய இறையருள், நன்றாக உழைத்த மாடுகள், நெல்லுத் தின்ன வந்த குருவிகள், பன்றிகள் எல்லாமே நினைவுக்கு வருகின்றன. கதிரிலே ஒரு கைப்பிடி அரிந்து இறைவனுக்கு புதிது படைக்க வைத்துவிடுகிறான். தைப்பொங்கலன்று கதிரவனுக்கு பொங்கலிட்டு அடுத்தநாள் தன்னோடு உழைத்த மாடுகளுக்காக மாட்டுப் பொங்கலிடுகிறான். இதே வேளை நெல்லுத் தின்ன வந்த குருவிகளையும் பன்றிகளையும் மறக்கவில்லை

வயலுக்குக் கள்ளமாக வந்து நெல்லுத் தின்னுகின்ற பன்றிகள் குருவிகள் செய்கின்ற தந்திரங்களை யெல்லாம் எண்ணி மனதுக்குள் மகிழந்தவன் அவற்றைப் பாடல்களாக ஆக்கி எல்லோரும் கேட்டு மகிழப் பாடினான். அதுதான் பின்னர் செப்பனிடப்பட்ட 'பன்றிப் பள்ளு', 'குருவிச் சிந்து' என்னும் நாட்டார் இலக்கியங்களாயின. பன்றிப்பள்ளு கதை ஒரு கனவுடன் தொடங்குகின்றது. ஊரெல்லாம் நல்ல மழைபெய்து வயல்கள் எல்லாம் செழிப்பாயிருப்பதாக தன் மனைவி கண்ட கனவை கணவன் பன்றி கேட்டு, செந்நெல் விளைகின்ற காலம் நாங்கள் காட்டுப் பிழைப்பை விட்டு நாட்டுக்குப் போவோம் என்று குட்டிகளுடன் புறப்பட்டு நன்றாக விளைந்த வயல்களுக்குள் வந்து விடுகின்றன. அப்பொழுது தாய்ப்பன்றி பிள்ளைகளுக்கு முன்னேற்பாடான சில அறிவுரைகளைக் கூறுகின்றது. அவற்றுள் ஒன்று,

“நெல்லுத் தின்னும் ஆசையாலே
பல்லைக் கில்லைப் பேர்த்திடாமல்
மெல்ல மெல்ல நன்னி நன்னித் தின்னுங்கோ மக்காள்”

காவற்காரன் வருவான் கவனமாக ஒழிந்து நின்று பார்த்து அவன் போன பின்னர் சாப்பிடுங்கள். சூடடித்துவிட்டால் சாப்பிட முடியாது. எனவே “சேறும் பாடுமாயுழக்கித் தின்னுங்கோ மக்காள்” என்று கூறுகிறது. குட்டிகள் சாப்பிட்டு முடிய அவற்றை ஓடிப்போய் தூங்கும்படி கூறும் தாய்ப்பன்றி, தூங்குதற்கு முன்னர் நெல்லுத் தந்த மானிடர்க்கு நன்றி கூறுங்கள். அது மட்டுமன்றி,

“நாடும் செழிக்கவேணும்
மாதா பிதா வாழவேணும்
என்று சொல்லித் தெய்வத்தையே கெஞ்சுங்கோ மக்காள்.”

என்று கூறுகின்றது. காட்டுக்குள்ளே இருந்து நாட்டுக்குள்ளே வந்த பன்றிகளும் மானிட உணர்வும், நாட்டுணர்வும், தேசிய உணர்வும் கொள்கின்றன.



ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304/ 16721
Tel: 02304- 910 9445
0177 20 16 941
தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு
Robert koch Str.5
58239 Schwerte

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
உங்கள் தாய் மொழியில்....
ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.
பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள்
கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery

தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel:0711 61 58 976 Mob:0170 33 44 059
Ludwig Str.92- 70197 Stuttgart

மங்கல இசைக் குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர் குமரகுரு
அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
0049 2271 670236


Dresdener Str.6
50126 Bergheim
Germany
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.ரகுராமன்
Mob: 0049 157 89 15 95 71


ஸ்ரீ துர்க்கா
ஜோதிட நிலையம் பிரசாத்

உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்
பண்டித் துர்க்கா பிரசாத்
தலைமுறை தலைமுறையாக ஜோதிடக்கலை
பயின்று வரும் ஜோதிட வித்துவான்
அனைத்து மதத்தினரும் வரலாம்
முகநாடி கைரேகை ஜோதிடர் அனுபவமுள்ள
எண்கணித ஜோதிடர் ஆலோசனை மற்றும் தீர்வுகள்
வியாபாரம்- எதிரிகள் -உடல்நிலை -வேலை குழந்தையின்மை-திருமணம் - பணம்
குடிபோதை- காதல்- விசா -வீரகரத்துவழக்குகள் -கண்திருஷ்டி
-குடும்பஒற்றுமை படிப்பு மற்றும் பல...மந்திரம்- தந்திரம்
-காத்துக்கறுப்பு -பிடைபிசாசு என்ன
இருந்தாலும் நிவாணம் செய்து தரப்படும்.

100% Guaranteed result
0151 753 27 376 // 01521 29 46 268
Gartenstr 185 -41236 Mönchengladbach-Germany

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி


சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450


GAAYATREE PARTY SERVICE
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு
உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும்
சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.
கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி
இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு
இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும்
ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.
e.mail:gaayatree-cs@live.de

TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck
Stuttgart
Gaayatree Party Service


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

# மனம் நினைப்பதை எடுத்துக் கொடுக்கும் ரோபோக் கைகள்!







மூளை கட்டளையிட அதன்படி ரோபோக் கைகளால் சொக்ளேட் எடுத்து சாப்பிடுவதைக் காணலாம்.

**சிவ ஜெனனி**

ரோபோக்கள் இதுவரை தொழிலகத்தில் பல வேலைகளைச் செய்து வந்தது. இப்போ மனிதனது உடற் தொழில்பாட்டின் ஒரு பகுதியையும் செய்ய முற்படுகின்றது. விபத்துக்களால் நோயினால் உடல் அங் கங்கள் தொழிற்பட முடியாமல் பலர் இவ் வுலகில் வாழ்கின்றார்கள்.

அவர்களுக்கு கைகொடுக்கும் ரோபோ ஒன்று உருவாகியுள்ளது. இந்த ரோபோக்கள் இப்போது மனிதருக்கு பொருத்தப்பட்டு பரீட்சிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில்


.2003 இல் இருந்தே Jan Scheuermann என்பவர் கழுத்துக்குக் கீழ் அவரது உணர்ச்சிகளை இழந்திருந்தார் பக்கவாதம் காரணமாக. இவருக்கு வயது 55.
இபோது இவர் அவருடைய robot கைகளை வைத்து சில சிக்கலான அசைவுகளையும் செய்கின்றார். அதாவது வெற்றிகரமாக பல பொருட்களை ஒரு இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு இடமாற்றுவது மற்றும் பொருட்களை விரல்களால் எடுக்கவும் செய்கிறார். இந்த robot system கருவி Jennifer Collinger ராலும் அவரோடு பணிபுரியும் சக தொழிலாளர்களாலும் University of Pittsburgh, Pennsylvania வில் உருவாக்கப்பட்டுள்ளது. Jen Scheuermann னின் மூளைக்குள் இரண்டு சிறிய மின் முனையானது கட்டங்கள் (electrode grids) பொருத்தப்பட்டன. மூளைக்குள் இடது இயக்கப் புறணி (motor cortex) அண்மையில் உள்ள பகுதியில் பொருத்தப்பட்டது ஏனெனில் அங்கு தான் வலது கை அசைவுகளுக்கு பொறுப்பு.

அந்த electrodes சை ஒரு computer ருடன் இணைக்கப்பட்டன. இதன் மூலம் Jan னுடைய மூளையின் electrical செயற்பாட்டுகளை அறியக் கூடிய தாயிருந்தது. அந்த electrical pattern னை வைத்து computer வழி முறைகள் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வழிமுறைகளை வைத்து நிசத்தில் அந்த robotic கைகளை அசைக்க முடிகிறது. இந்தமாதிரி விரல் அசைவுகள் பெருவிரல் அசைவுகள் கிள்ளுவது போன்ற அசைவுகள் இதுவரையில் ஒருவராலும் சாதிக்கப் படவில்லை. இந்த முயற்சி செய்து இன்னும் அதிகமாக சாதித்தால் Jan போன்றவர்கள் அவர்களுடைய வேலைகளை வேறொருவருடைய துணையும் இல்லாமல் அவர்களே தனியாக செய்யலாம். இது இன்னும் ஆனால் பொது மக்களுக்கிடையே உலாவத் தொடங்கவில்லை.

ஒன்று இயங்காதபோது அதனை இயங்க வைக்க முயலும்போதுதான் இது வரை இயங்கியதன் ஆச்சரியம் புரிகின்றது. ஒவ்வொரு உயிரின் அசைவுகளும் உணர்வுகளும் ஆச்சரியமே. மனிதன் இழந்ததை மீண்டும் பெறும் வித்தை ஆச்சரியம் என்றால் அந்த வித்தையை நடத்தும் அவனது மூளை இன்னம் ஆச்சரியம் அல்லவா!

படத்தில் பெண் Jan Scheuermann தனது (மனம்) மூளை கட்டளையிட அதன்படி ரோபோக் கைகளால் சொக்ளேட் எடுத்து சாப்பிடுவதைக் காணலாம்.

வெற்றிமணி
ஆன்மீக இதழ்
சிவத்தமிழ்
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
90 வது அகவை
சிறப்பிதழாக மலர்ந்துள்ளது
பிரதிக்கு முந்துங்கள்
முத்திரை அனுப்பின்
இலவசமாக பிரதிகள்
அனுப்பிவைக்கப்படும்
தொடர்புகளுக்கு
வெற்றிமணி–யேர்மனி

ஆதிவாசி லீடர், கனக துர்க்கா பூஜாரி
பண்டித் லட்சுமன் ராஜ்
கருமாரி அம்மன் துணை
முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தை கணிப்பார்
அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும்
FACE READING
வியாபாரங்கள் - எதிரிகள் - உடல்நிலை - வேலை - குழந்தையின்மை
திருமணம் - பணம் - குடிபோதை - காதல் - விவாகரத்து
வழக்குகள் - கண்திருஷ்டி - குடும்ப ஒற்றுமை - படிப்பு
வாகனப் பொருத்தம் - மற்றும் பல... பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்
பேசும் மொழிகள்: தமிழ்
வாரத்தில் 7 நாட்களும் 10:00 முதல் 20:00 மணி வரை சந்திக்கலாம்
private & confidential
Adlerstr. 30, 44137 Dortmund - Germany
0152-12016356 // 0152-13946833

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர் : நடராஜா சுதன்
மாதம் மாதம் மாதரைக் கவரும் புத்தம் புது டிசைன்களில் தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்,
பயணங்களை இனிமையாக்க
குறைந்த விலையில்
விமான பயணச்சிட்டுக்கள்
மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்

Jaffna Basar Jewellery, Kaiserstr.64 (Laden Nr.22) 60329 Frankfurt am Main, Tel: 069 25 62 63 53
அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

# அன்று படங்களில் "பாடல்கள்" சொன்னதை! இன்று "பஞ் வசனம்" சொல்லுது! அவ்வளவுதான்!!

**பாடல்: புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண் பதில்லை! வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலி இல்லை!!**

**பஞ்ச் வசனம்: நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி.**

அன்று வந்த படங்களில் வசனங்கள் தத்துவங்கள் யாவும் பெரும்பாலும் பாடலில்தான் இருக்கும். அவை பட்தொட்டியெங்கும் பரவும்.



கத்தியைத் தீட்டாதே உன்தன் புத்தியைத் தீட்டு என்று எம்.ஜி.ஆரும். கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு காரியம் நடக்கட்டும் துணிந்துவிடு என்று சிவாஜிகணேசனும்,ஆடியடங்கும் வாழ்க்கை யடா ஆறடிநிலமே சொந்தமடா என்று நாகேசும் புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண் பதில்லை வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலி இல்லை. சந்திரபாபுவும் முத்து முத்து வரிகளாக பாடல்வாயிலாக தம் நிலையைக்காட்டி இரசிகர் களை மகிழ்விப்பார்கள். சிந்திக்கவைப் பார்கள். பாடல்களே பஞ் வசனம்போல் தீபிடிக்கும் அக் காலத்தில்.

பின் வந்த திரைப்படங்கள் நாயகனை அடை யாளப்படுத்த பஞ்வசனங்கள் தீப்பிடித்தன. இன்று என்பேச்சை நானே கேட்கமாட்டேன்! என்று விஜய்யும் ஓங்கியடித்த ஒன்பது தொன் என்று சூர்யாவும் சிலரைப் பார்த்தவுடன் பிடிக்கும் சிலரைப் பார்க்கப் பார்க்கப் பிடிக்கும் என்று தனுஷ் உம் வசனம் பேச அடியெடுத்துக் கொடுத் தவர்களில் ரஜினிக்கும் பங்குண்டு.

16 வயதினிலே முதல்.. லிங்கா வரை..! பட்டையை கிளப்பும் ரஜினியின் பஞ்ச் வசனங்கள்! பிடித்த பஞ்ச் வசனங்கள் சில.....

அண்ணாமலை படம்: மல.. அண்ணா மல... அதில் வரும் ஒரு பஞ்ச்தான், மல.. அண்ணா மல.. எதிரிகளை பார்த்து சொல்லும் இந்த டயலாக்கை கேட்டு ரஜினி ரசிகர்களின் உடல் புல்லரிப்புக்கு உள்ளானது என்னவோ நிச்சயம். கஷ்டப்படாம எதுவும் கிடைக்காது. கஷ்டப்படாம கிடைச்சது என்றைக்கும் நிலைக்காது, நான் சொல்றதையும் செய்வேன், சொல்லாததையும் செய்வேன் போன்றவை அந்த திரைப்படத்தில் வந்த அதிரிபுதிரி அதிரடி வசனங்கள்.

பாட்ஷா அண்ணாமலை இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணாவுடன் ரஜினி இணைந்த மற்றொரு மாஸ் திரைப்படம். இன்றுவரை ரஜினி ரசிகர்களின் ஆதர்ஷபடம் பாட்ஷாதான். அதில் வரும் பஞ்ச்தான் "நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி. மாஸ், தெறி மாஸ் என்ற வார்த்தைகளுக்கு இலக்கணமே பாட்ஷாவும் அதில் வந்த இந்த வசனமும்தான்.



முத்து அரசியலுக்கு ரஜினி வருவாரா, மாட்டாரா என்ற எதிர்பார்ப்பு உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் வந்த முத்து திரைப்படத்தில், ரஜினி பேசும், "நான் எப்போ வருவேன் எப்படி வருவேன்னு யாருக்கும் தெரியாது. ஆனா வர வேண்டிய நேரத்துல கரெக்டா வருவேன்" என்ற டயலாக் ரசிகர்களை எதிர்பார்ப்புக்கு ஏற்றிவிட்டது.

அருணாச்சலம் ஆண்டவன் சொல்றான் அருணாச் சலம் முடிக்கிறான் என்ற வசனம் அரு ணாச்சலம் திரைப்படத்தில் இடம் பெற்றிருந்தது. இதையும் அரசியலோடு முடிச்சு போட்டு பார்த்தனர் விமர்சகர்கள்.

படையப்பா ரஜினியின் மாஸ் மரியாதையை உயர்த்திய மற்றொரு படம் படையப்பா. என் வழி தனி வழி.. அதிகமா ஆசைப்படுற ஆம்பளையும், அதிகமாக கோபப்படுற பொம்பளையும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே இல்ல.. என்பது போன்ற வசனம் படையப்பாவில் பட்டையை கிளப்பின.

சிவாஜி பிரமாண்ட இயக்குநர் ஷங்கருடன் ரஜினிகாந்த் கைகோர்த்த முதல் படம் சிவாஜி. இதில் வரும், பேரக்கேட்டவுடன ச்சும்மா



அதிருதில்ல... "கண்ணா பன்னிங்கதான் கூட்டமா வரும், சிங்கம் சிங்கிளாத்தான் வரும்" என்பது போன்ற வசனங்கள் செல்போல் காலர் டியூனாக வெளியாகி ஏகோபித்த வரவேற்பை பெற்றன.

எந்திரன் ரோபோ குறித்த எந்திரன் திரைப் படத்தில், எதிர்மறை ரஜினி கேரக்டர் பேசும் ரோபோ.... ம்மேமே... என்பது போன்ற ஒற்றை டயலாக் பஞ்சகளுக்கு விசில் பறந்தது.

லிங்கா நான் எந்த வேலையா இருந்தாலும் என் மனசுக்கு பிடிச்சாதான் செய்வேன்.... வாழ்க்கை யில் எதுவும் ஈசியில்லை, முயற்சி பண்ணுனா எதுவும் கஷ்டமில்லை.... இதுதான் இப்போ வெளியான லிங்கா பட பஞ்சு வசனம்

அப்பவே அப்படித்தான் ரஜினிகாந்த். ரஜினி வில்லனாக நடித்த "16 வயதினிலே" திரைப் படத்தில் பரட்டை பாத்திரம் பேசுமே "இது எப்டி இருக்கு.." என்ற வசனம்! அது இன்று வரை ரசிகர்கள் மனதைவிட்டு நீங்கவில்லை. படத்தின் கதாநாயகன் கமலே பஞ்ச் வசனம் பேசவில்லை. முரட்டுக்காளை படத்திலும், ரஜினிகாந்த் ஒரு வசனம் சொல்வார். உங்களில் யாருக்காவது நினைவு இருக்கிறதா..? அந்த வசனம் சீவிடுவேன்...

ஒன்று மட்டும் நிச்சயம் சினிமாவுலகில் ஒவ்வொரு காலத்திற்கும் ஒருசிலர் வராமல் போகமாட்டார்கள். உனது பூட்டனாரைக் கேட்டால்.பி.யூ.சின்ப்பா என்றோ, தியாகராஜபாகவதர் என்றோ சொல்வார். உன் தாத்தாவை கேட்டால் எம.ஜி.ஆர் அல்லது சிவாஜி என்பார். உன்னைக் கேட்டால் ரஜினி அல்லது கமல் என்பாய். உன் மகனைக் கேட்டால் விஜய் அஜித் சூர்யா என்பான். உன் பேரனைக் கேட்டால் ..... இன்னும் நம்ம ஆளுவரவில்லை என்பான். **இதுதான் நிஜயம்.**




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

# திரை உலகம்





## உன்னையறிந்தால் வெற்றி நிச்சயம்!

நடிகர்களில் அதிகம் பேசாதவர் அஜித். அரசியல் இரசிகர் மன்றம் என்று தலையைப் போட்டு உடைக்காதவர் தல. இப்போது அவரது உன்னை அறிந்தால் படம் பெரும் எதிர்பார்ப்புடன் இரசிகர் மத்தியில் வரக் காத்துள்ளது. கௌதம்மேனன் இயக்கத்தில் நடிப்பார்! நடிக்கமாட்டார்!! நடிப்பார்! என்று மாறி, மாறிச், செய்திவந்து இப்போ நடித்துமுடித்த செய்தியுடன் படம் வெளிவரக் காத்துள்ளது. சூர்யாவிற்கு காக்க காக்க சிம்புவிற்கு விண்ணைத்தாண்டி வருவாயா போன்று அஜித்திற்கு இப்படம் அமையும் என தல இரசிகர்கள் எதிர்பாக்கின்றார்கள். என்னமமோ ஏதோ கௌதமேனன் படம் கதை சொல்லும் விதம் அழகு. அதனைவிட பெண்களைக் கவரும் வண்ணம் நாயகி சேலையுடுக்கும் பாணி அழகு. நாயகன் கேட்கத்தேவை இல்லை. எனவே ஒரு அழகான படத்திற்காக காத்திருக் கிறார்கள். உன்னையறிந்தால் வெற்றி நிச்சயம்.

## எப்பழயும் நழக்கலாம் ஆனால் ஆசிரியையாக நழக்கமுழயாது!


தேவயானி

சென்னையின் பிரபபல பள்ளிகளில் ஒன்றான சர்ச் பார்க் கான்வென்டில் ஆசிரியையாக பணியில் சேர்ந்துள்ளார் பிரபல நடிகை தேவயானி. கல்லூரி வாசல் படத்தில் அறிமுகமானவர் தேவயானி. காதல் கோட்டை மூலம் முதல் நிலை நடிகையானார். அஜீத், கார்த்திக், விஜய், சரத்குமார் போன்றவர்களுடன் அதிக படங்களில் நடித்துள்ளார் தேவயானி. ஜெயலலிதா படித்த பள்ளியில் ஆசிரியையாகிவிட்ட நடிகை தேவயானி!

தேவயானி திருமணமாகி, படங்களில் வாய்ப்புக் குறைந்ததும் சொந்தப் படம் எடுத்தார். அது கையைச் சுட்டுவிட, தொடர்களில் நடிக்க ஆரம்பித்தார். அங்கும் முன்னணி நடிகையாகத் திகழ்ந்தவர், பின்னர் டிவியில் நடிப்பதை நிறுத்திக் கொண்டார்.

இப்போது சர்ச் பார்க் கான்வென்டில் ஆசிரியையாக வேலைப் பார்க்கிறார் டிவியில் நடித்துக் கொண்டே அஞ்சல் வழியில் ஆசிரியப் பயிற்சியை முடித்துள்ளார். அதற்கான செயல்முறைத் திட்டத்தை சர்ச் பார்க்கில்தான் முடித்தாராம். அதே பள்ளியில் வேலைக்கும் விண்ணப்பித்துள்ளார். ஒரு பணியிடம் காலியானதுமே அந்த வேலையை தேவயானிக்குக் கொடுத்துவிட்டார்களாம். ஆசிரியப் பணி குறித்து தேவயானி கூறுகையில், ”இது எனக்கு நிறைவாக உள்ளது. பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. மன நிறைவு முக்கியம்.

இந்த வேலையில் என் பொறுப்பில் 45 குழந்தைகள் உள்ளனற். அவர்களுக்கு பாடம் எடுப்பது மனநிறைவு தருகிறது,” என்கிறார். தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இந்தப் பள்ளியில்தான் படித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடவுள் நழகனுக்கு தண்டனை கொடுப்பது என்றால் இப்பழக் கொடுக்கட்டும்!



நான் லிங்கா படத்தில் ரொம்பக் கஷ்டப்பட்டு நடிச்சிருக்கேன். ரொம்ப ரொம்ப கஷ்டப்பட்டு நடிச்சதுன்னா அந்த ரயில் சண்டையோ, க்ளைமாக்ஸ் சண்டையோ அல்ல... இந்த ஹீரோயின்களோட டூயட் பாடி நடிச்சதுதான்.

சத்தியமா சொல்றேன். இந்த சோனாக்ஷியை சின்னக் குழந்தையா இருக்கும் போதிலிருந்து எனக்குத் தெரியும். என் மகள்கள் ஐஸ்வர்யா, சவுந்தர்யா கூடவே வளந்தவங்க. அவங்க கூட டூயட் பாடணும்னு சொன்னதும் எனக்கு வியர்த்துடுச்சி.

என்னோட முதல் படமான அபூர்வ ராகங்கள்ல முதல் காட்சி நடிச்சப்ப கூட இப்படி டென்ஷன் இருந்ததில்லை எனக்கு.

நடிகர்களுக்கு ஏதாவது தண்டனை கொடுக்கணும்னு கடவுள் நினைச்சாருன்னா, 60 வயசுல நடிகர்களுக்கு டூயட் பாடற தண்டனையைக் கொடுக்கலாம். என்றார்.




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!


Ria
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்
LITTLE INDIA
Textile & Jewellery
அழகான ஆடைகளுக்கும் பஞ்சாபி வகைகளுக்கும் தங்க நகைகளுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
அனைவர்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!
EurAsian - Tours
அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.
Rishi 0174 96 44 965
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy
Further Str. 156
41462 Neuss


ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
Ria Money Transfer
MoneyGram
அனைவர்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!
ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள் வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282
உரிமையாளர்: பா.கணேஷ்


யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு
தரமும் சுவையும் தரும்...
CEYLON IMBISS
இலங்கை உணவகம்
அனைவர்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!
திங்கள் முதல் சனிவரை காலை 11.30 முதல் மாலை 22.00 மணிவரை ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் 16.00 -22.00 மணி வரை
Tel:0231- 7252859
Annen Str.1
44137 Dortmund


அனைவர்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Jasmine Silk House
முக்கிய அறிவித்தல்
02.12.2014 முதல் 19.01.2015 வரை எமது ஸ்தாபனம் விடுமுறைக்காகப் பூட்டப்படும் என்பதனை அன்பான வாடிக்கையாளர்களுக்கு அறித்தருகின்றோம்!
HP:0173 1937 325
Tel:02102 844744
T.Mohanadas


யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
StaR-Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!
எமது இணையத்தளத்திற்கு சென்று சலுகைகளை அறிந்து பயன் அடையுங்கள்
Web.Star-impex.net
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
StaR-Impex
Mobil: 0172/2183703 - E-Mail: star-impex@live.de
Kipper str.Tor.3
44147 Dortmund
Germany
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
StaR Impex : Inh :K.Sivasubramaniam